# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

# இலங்கை

# முப்பத்தி எட்டாவது வருடாந்த அறிக்கை

# 2016

## உள்ளடக்கம்

பக்க எண்.


| | | |
|---|---|---|
| அ. | தலைவரின் செய்தி................................................................ | 1 |
| ஆ. | அறிமுகம் ........................................................................ | 3 |
| இ. | தூர நோக்கு மற்றும் பணிநோக்கு ................................................ | 3 |
| உ. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கடமைகள்............................. | 4 |
| 1. | நிறைவேற்றுச் சுருக்கக் குறிப்பு ................................................... | 4 |
| 2. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முகாமைத்துவம்................................ | 13 |
| 3. | பல்கலைக்கழகம் மற்றும் நிறுவன முகாமைத்துவம் ......................................... | 15 |
| 4. | பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல் ........................................ | 20 |
| 5. | கல்வி அபிவிருத்தி மற்றும் கல்வித் தராதரங்களின் பராமரிப்பு ................................... | 26 |
| 6. | நிதி நிர்வாகம் .......................................................................... | 37 |
| 7. | ப.மா.ஆ செயலகத்தின் பதவியணி ............................................................ | 43 |
| 8. | மனித வள முன்னேற்றங்கள் ................................................................ | 45 |
| 9. | உட்கட்டமைப்பு அபிவிருத்தி ............................................................... | 53 |
| 10. | தகவல் தொழில் நுட்ப அபிவிருத்தி .......................................................... | 55 |
| 11. | பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிதி உதவி .................................................. | 56 |
| 12. | கௌரவ உயர் கல்வி ராஜாங்க அமைச்சர் மற்றும் கௌரவ உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஆகியோருடனான முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள்.... | 60 |
| 13. | சட்ட விவகாரங்கள் ........................................................................ | 61 |
| 14. | பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீடுகள் சபை .................................................. | 65 |
| 15. | நிதி முகாமைத்துவம் மற்றும் மத்திய உள்ளக கணக்காய்வு ஆகியவற்றினை முன்னேற்றுதல் ............................................................................ | 65 |
| 16. | ஆய்வுகள், வெளியீடுகள் மற்றும் ஆராய்ச்சிக் கற்கைகள் ............................................ | 67 |
| 17. | பால்நிலைப்பங்கு/சமத்துவத்திற்கான நிலையம் ................................................. | 69 |
| 18. | பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம் ............................................................ | 72 |
| 19. | பல்கலைக்கழக ஊழியர் சேமலாப நிதியம்.......................................................... | 73 |
| 20. | 2016 ஆண்டு காலப்பகுதியில் வெளியிடப்பட்ட ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள் மற்றும் ஸ்தாபனக் கடிதங்கள்.................................................................. | 76 |
| 21. | ப.மா.ஆ வின் 2016 ஆம் ஆண்டுக்கான வருடாந்த நிதிநிலைமைக் கூற்றுக்கள்.......... | 80 |
| 22. | பல்கலைக்கழகங்கள் ஓய்வூதிய நிதியத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான வருடாந்த நிதி நிலைமைக் கூற்றுக்கள்................................................................ | 141 |
| 23. | பல்கலைக்கழகங்கள் சேமலாப நிதியத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான வருடாந்த நிதி நிலைமைக்கூற்றுக்கள்................................................................ | 151 |

# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

## அ. தலைவரின் செய்தி

2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆணைக்குழுவானது சில பிரதான செயற்பாடுகளை சீரமைப்பதற்காகவும், முன்னேற்றுவதற்காகவும் பல்வேறு வகையான கொள்கைத் தீர்மானங்களை மேற்கொண்டதுடன் 2017ஆம் ஆண்டிற்காக சில திருத்தங்களுக்கான அடிப்படை கட்டமைப்புகளையும் உருவாக்கியது. இம்மாற்றங்கள் ப.மா.ஆ மூலோபாயத் திட்டம் 2013-2017க்கு இணங்கக் கூடிய வகையிலாகும் என்பதுடன் உயர் கல்வி அமைச்சின் வழிகாட்டலின் கீழ் அரசாங்கத்தின் புதிய உயர் கல்வி கொள்கைச் சீர்திருத்த அமுலாக்கத்திற்கு பங்களிப்பு செய்வதற்காக எதிர்பார்க்கப்படுகிறது.

நிறைவேற்றுச் சுருக்கத்தின் பிரதான விடயங்கள் தரப்பட்டுள்ளன.

பிரதான மாற்றங்களானவை, அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றால் வழங்கப்படும் கற்கை நெறிகளை இனங்காண்பதற்கு உதவி செய்வதற்காக ஒரு யுனிகோட் முறையின் அறிமுகம், மாணவர் நட்புறவு அனுமதிக் கைந்நூல் உருவாக்கம், அத்துடன் முதன் முதலாக மாணவர் அனுமதிக்காக ஒன்லைன் விண்ணப்பம் மற்றும் பதிவு ஆகியவற்றை உள்ளடக்கி இருந்தது. அனுமதித் திணைக்களமானது அதிக பரப்புடன் விரிவுபடுத்தப்பட்டதுடன் மாணவர் தெரிவு நடைமுறையின் வெளிப்படைத் தன்மை மற்றும் தரம் ஆகியவற்றை அடைவதற்கும் இலகுபடுத்துவதற்குமான செயற்பாட்டை முன்னேற்றுவதற்கு புதிய தகவல் தொழிநுட்பக் கல்வியில் தேர்ச்சியுடைய மனித வளங்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். 2016 ஆம் ஆண்டில் அரச பல்கலைக்கழக முறைமையில் உள்ள புதிய தொழிநுட்ப பட்ட நிகழ்ச்சித்திட்ட அறிமுகமானது "திறமைக்கு பொருத்தமற்ற தெரிவு" என்ற பிரச்சினையை தீர்ப்பதற்கு உதவியாக அமைவதுடன் அரச உயர் கல்விச் செயன்முறையை அதிகரிப்பதாகவும் அமையும்.

பகுதிசார் பி.எச்.டி. நிகழ்ச்சித் திட்டம் மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் பி.எச்.டி. கற்கைகளுககான பதிவுகளுக்காக கல்விசார் அணியினரைத் தூண்டுவதற்காக நிதியளிப்பானது அதிகரிக்கப்பட்டது. இது பல்கலைக்கழக கல்விசார் அணியினரின் தரத்தை அதிகரிக்க உதவியாய் அமையும்.

நிலையான குழுக்களை மீள்கட்டமைத்தல் மற்றும் சட்டம், கலைக் கற்கைகள், கல்வி மற்றும் தொழிநுட்பம் ஆகிய கற்கை நெறிகளுக்கான புதிய நிலையான குழு உருவாக்கம் ஆகியவை கல்வி நிகழ்ச்சித் திட்டங்களின் உட்பதிவின் தரம் மற்றும் புதிய பொருத்தமான பட்ட நிகழ்ச்சித் திட்டம் ஆகியவற்றின் அறிமுகம் ஆகியவற்றை அதிகரிப்பதற்கு ஏதுவாக அமைந்தது. எல்லாப் புதிய நிகழ்ச்சித் திட்டங்களும் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் ப.மா.ஆ.வின் புதிய தர உறுதிப்பாட்டு இயக்குனர் குழுமத்தினால் பரிந்துரைக்கப்படுகிறது. தொழிற்துறைப் பிரிதிநிதிகள் மற்றும் சில குறிப்பிட்ட துறைகளில் நிபுணத்துவம் பெற்ற புகழ் பெற்ற நபர்கள் ஆகியோர் ப.மா.ஆ.வின் நிலையான குழுக்களுக்கு அழைக்கப்பட்டனர்.மாணவர்களின் ஆங்கிலப் புலமையை அதிகரிப்பதற்காக,பல்கலைக்கழக தலைவர்களுடன் மேற்கொண்ட பல ஆலோசனைகளுக்குப் பிறகு, பாரம்பரிய ஆங்கில மொழி கற்பித்தல் அலகை "ஆங்கில மொழி கற்பித்தல் திணைக்களங்கள்" என தரமுயர்த்துவதற்காக ஒரு புதிய முறை ஏற்படுத்தப்பட்டது. புதிதாக தாபிக்கப்பட்ட பால் நிலைப் பங்கு மற்றும் சமத்துவத்திற்கான நிலையான குழுவால் பிரேரிக்கப்பட்டவாறு, பால்நிலை, பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையான வன்முறை மற்றும் பகிடிவதை ஆகியவை தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ப.மா.ஆ விற்குள் ஒரு நிலையம் தாபிக்கப்பட்டது. யுனெஸ்கோ மற்றும் இந்திய ப.மா.ஆ. வின் உதவியுடன் பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஒரு ஒன்லைன்

முறைப்பாட்டு பொறிமுறையை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. இம்முறையானது 2017 ஆம் ஆண்டளவில் பூரணமாக செயற்பாட்டில் இருக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

ஜேர்மனியின் GIZ நிகழ்ச்சித் திட்டத்தின் ஆதரவுடன், பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழிற்றுறை ஆகியவற்றுக்கிடையே நம்பிக்கைக் கட்டமைப்பு மற்றும் கூட்டுறவு ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதற்காகவும் மாணவர்கள் மற்றும் கல்வி சார் அணியினரிடையே தொழில் வாண்மைத் திறன்களைத் தூண்டுவதற்காகவும் பல்கலைக்கழக வியாபாரத் தொடர்பு ஒன்றைத் தாபிப்பதை அங்கீகரிப்பதற்கான சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.

இலங்கை உயர் கல்வி முறையில் சுதந்திரமான தர உறுதிப்பாடு மற்றும் அங்கீகாரப் பொறிமுறை ஒன்றைத் தாபிப்பதற்கான ஒரு முன்மொழிவானது 2016 ஆம் ஆண்டில் பிரதானமாக குறிப்பிடத்தக்க முன்னேற்றமாக இருந்தது. இது தொடர்பாக உயர் கல்வி அமைச்சின் பெறுமதியான பங்களிப்பு மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றை அங்கீகரிக்கின்றோம்.

பேராசிரியர் மொஹான் டி. சில்வா

தலைவர்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

## ஆ.அறிமுகம்

இலங்கையில் அரச பல்கலைக்கழக முறையின் உச்ச சபையாக செயற்படும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது (ப.மா.ஆ) 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் 1978 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22ம் திகதி அன்று நிறுவப்பட்டது. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் செயற்பாடுகள் பல்கலைக்கழக கல்வியைத் திட்டமிடலும் ஒருங்கிணைத்தலும், உயர்கல்வி நிறுவனங்களுக்கான (உ.க.நி) நிதிகளை ஒதுக்குதல், கல்விசார் தரங்களைப் பேணுதல், உயர்கல்வி நிறுவனங்களின் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்துதல் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான மாணவர்களின் அனுமதியினை ஒழுங்குபடுத்தல் ஆகியனவாகும்.

இதன் தலைவர் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராகவும் பொறுப்புக் கூறும் உத்தியோகத்தராகவும் செயற்படும் அதே வேளை ஆணைக்குழு விவகாரங்களின் தினசரி நிர்வாகத்ததைக் கட்டுப்படுத்தக் கூடியவராகவும், ஆணைக்குழுக் கூட்டங்களுக்கு தலைமை தாங்குபவராகவும் உள்ளார். ப.மா.ஆ வினது செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கும் சீரமைப்பதற்குமாக ப.மா.ஆ வில் தத்தமக்கென ஒதுக்கப்பட்ட கடமைகள் மற்றும் செயற்பாடுகளுடன் பல்வேறு திணைக்களங்கள், பிரிவுகள் மற்றும் அலகுகள் என்பவை காணப்படுகினறன. பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அரச உயர் கல்வி நிறுவனமானது 15 பல்கலைக்கழகங்கள்,11 பட்டப்பின் கல்வி நிறுவனங்கள் மற்றும் 7 நிறுவகங்களைக் கொண்டுள்ளது.ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் நிருவாக அதிகாரியாக பேரவை இருக்கும் அதேவேளை செனட் ஆனது கல்விச் செயற்பாட்டின் அதி உச்ச சபையாக செயற்படுகின்றது. ஒரு பல்கலைக்கழகத்தினதும் மற்றும் நிறுவனத்தினதும் பிரதான நிறைவேற்று அதிகாரியாக முறையே உப வேந்தர் மற்றும் பணிப்பாளர் ஆகியோர் செயற்படுகின்றனர்

## இ. தூர நோக்கு மற்றும் பணி நோக்கு

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தூர நோக்கு**

2020 இல் ஆசியாவின் இலங்கை உயர் கல்வி மையமாகவும் பிராந்தியத்தின் தலைவராகவும் இருத்தல்.

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பணி நோக்கு**

நல்லாட்சி மற்றும் முகாமைத்துவம் ஊடாக, தேசிய அபிவிருத்தி பாதையில் நியாயமான கல்வியூட்டல், கற்றல், உயர்தாக்கமுள்ள ஆய்வு, புதுமையான தொழில் முயற்சி, ஆக்கமுள்ள சமுதாய ஈடுபாடு, சமாதானமும் ஒற்றுமையும், மற்றும் இலக்குள்ள சர்வதேச கூட்டுறவு ஆகியவற்றிற்கு அர்ப்பணிப்புள்ள உறுதியானதும்,பரந்த அளவிலும் பாராட்டப்படவும், அணுகவும் கூடிய உயர் கல்வி முறைமையை வழிகாட்டி, நிறுவி விருத்தி செய்தல்.

***

## உ. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கடமைகள்

1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஆணைக்குழுவானது பின்வரும் பிரதான செயற்பாடுகளைக் கொண்டுள்ளது.

1. தேசிய கொள்கைகளை உறுதிப்படுத்துவதற்காக பல்கலைக்கழக கல்வியைத்திட்டமிடலும் ஒருங்கிணைத்தலும்.

2. பல்கலைக்கழக கல்வி தொடர்பாக பாராளுமன்றத்தில் வாக்களிக்கப்பட்ட நிதியை பகிர்ந்தளித்தலும் அத்தகைய உயர் கல்வி நிறுவனங்கள் ஒவ்வொன்றினதும் செலவுகளைக் கட்டுப்படுத்துதல்.

3. உயர் கல்வி நிறுவனங்களின் கல்வித் தரங்களைப் பேணுதல்.

4. உயர் கல்வி நிறுவனங்களின் முகாமைத்துவத்தை சீராக்குதல்.

5. 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டவாறும் ஒப்படைக்கப்பட்டவாறும், விதிக்கப்பட்டவற்றின்படியும் ஒவ்வொரு உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர் அனுமதியை ஒழுங்கமைத்தல், கடமைகள் செயற்பாடுகள் அதிகாரங்கள் என்பவற்றை கையளித்தல், செயற்படுத்துதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.

## 1. நிறைவேற்று சுருக்கக் குறிப்பு

இவ்வருடாந்த அறிக்கை 2016ம் வருடத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மீளாய்வு செய்கின்றது. 2016ம் வருடத்தின் போது முக்கிய அம்சங்களாகவும் சாதனை அடைவுகளாகவும் அமைவன :-

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர் அனுமதி, கல்விசார் மற்றும் ஆய்வு அபிவிருத்தி, ஆளணியினர் விருத்தி, உட்கட்டமைப்பு அபிவிருத்தி,தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி (IT), தர உறுதிப்பாடு, நிதி நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் கல்விசார் கூட்டுறவும் ஆய்விற்கான ஒத்துழைப்பு ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளன.

வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை திட்டமிடலிலும் நிர்வகித்தலிலும் இலங்கை அரசாங்கதின் கொள்கைகள் மற்றும் அறிவை மையப்படுதிய பொருளாதாரத்தில் பிரேரிக்கப்பட்ட மனித தேவைகள், நாட்டினுடைய தேவைகள் செயற்பாடுகள் ஆகியவற்றை வெளிக்கொணரக்கூடிய ப.மா.ஆ வின் 2013-2014 தந்திரோபாயத் திட்டத்தின் பிரதான இலக்குகள், செயற்பாடுகள், அடைவுகள் ஆகியவை கவனத்திற் கொள்ளப்பட்டன.

### பல்கலைக்கழகங்கள்/உயர் கல்வி நிறுவனங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல்

ப.மா.ஆ வின் 2013-2014 தந்திரோபாயத் திட்டத்தின் பிரதான இலக்கானது இளமாணி மற்றும் பட்டப்பின் கற்கைச் செயற்பாட்டை அதிகரித்தலாகும்.2016 ஆம் ஆண்டு காலப் பகுதியில் தாபிக்கப்பட்ட புதிய பீடங்கள், கற்கைப்பிரிவுகள், ஏற்கனவே காணப்படும் கற்கை நிகழ்ச்சித் திட்டங்களின் திறன்களை அதிகரிக்கக்கூடிய

உள்ளீடுகளைக் கொண்ட (விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.) புதிய கற்கை நிகழ்ச்சித் திட்டங்களின் ஆரம்பம் என்பவற்றின் விளைவாக 2015/2016 கல்வியாண்டுக்காக உயர் கல்வி நிறுவனங்களுக்கு மாணவர் ஆட்சேர்ப்பை அதிகரிக்கக் கூடியதாக இருந்தது.

மொத்தமாக **155,550** விண்ணப்பதாரிகள் 2015/2016 ஆம் வருட கல்வியாண்டில் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் தகுதி பெற்றார்கள். இதில் குறிப்பிட்ட வருடத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட பிரமாணங்களின் அடிப்படையில்,சாதாரண ஏற்பாடுகளின் கீழ் உயர் கல்வி நிறுவனங்களுக்கு உரிய மாணவர்களின் அனுமதியானது 2016 ஆம் ஆண்டின் இறுதியில் பூரணப்படுத்தப்பட்டது. 2015/2016 கல்வியாண்டுக்காக முன் மொழியப்பட்ட உள்ளெடுப்புக்களின் எண்ணிக்கையானது 27,603 ஆக காணப்பட்டது. இஸட் புள்ளியை அடிப்படையாகக் கொண்டு சாதாரண ஏற்பாடுகளின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 26,541 ஆக இருந்தது. இதற்கு மேலதிகமாக 2,409 மாணவர்கள் விசேடஏற்பாடுகளின் கீழ்தெரிவு செய்யப்பட்டனர். தெரிவு செய்யப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 28,950.

2016ஆம் ஆண்டில் உரிய பீடங்களுக்குத் தெரிவான மேலதிக எண்ணிக்கை கீழ் வருமாறு காட்டப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| தொழிநுட்பம் | 2030 |
| மருத்துவம் | 70 |
| விஞ்ஞானம் | 575 |
| பொறியியல் | 208 |
| விவசாயம் | 45 |
| கட்டிடக்கலை / வடிவமைப்பு / நகர மற்றும் நாடு திட்டமிடல் | 20 |
| துணை மருத்துவம் | 170 |
| முகாமைத்துவம் மற்றும் வர்த்தகம் | 590 |
| மனிதநேயம் மற்றும் சமூக விஞ்ஞானம் | 1816 |
| சித்த மருத்துவம் | 40 |

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது, பல்கலைக்கழகங்களுக்கு சாத்தியப்படக் கூடிய குறுகிய காலத்திற்குள் மாணவர்களை அனுமதிப்பதை நோக்காகக் கொண்டு முதல் முறையாக, 2014/2015 ஆம் கல்வியாண்டில் பல்கலைக்கழக அனுமதியை எதிர் பார்க்கும் விண்ணப்பதாரிகளில் இருந்து விண்ணப்பங்களை "ஒன்-லைன்" முறை மூலம் கோரும் முறையானது 2015 மே 08 ஆந் திகதி வெற்றிகரமாக ஆரம்பித்து வைத்தது. 33.8 சதவீதமான மாணவர்கள் இந்த வசதியைப் பயன்படுத்தினார்கள்."ஒன்-லைன்"பதிவுமுறை வசதிப்பாவனையானது 100 சதவிகிதமாக இருந்தது. எவ்வாறெனினும் 2016/2017 கல்வியாண்டிலிருந்து பல்கலைக்கழக அனுமதிக்காக ப.மா.ஆ விற்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்காக,"ஒன்-லைன்" முறை மூலம் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளதனால் 100 சதவிகிதமான மாணவர்கள் "ஒன்-லைன்"வசதியைப் பயன்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அனுமதிச் செயன்முறையை இலகுபடுத்துவதற்காகவும் நவீன மயப்படுத்துவதற்காகவும் 2016ஆம் ஆண்டு மேலதிகமாக ஒரு புதிய, மாணவர் - நட்பு அனுமதிக் கைந்நூல் ஒன்றும் ஒரு தனித்துவ அடையாளக் கோவை ஒன்றும் (யுனிக்கோட்) ஒன்றும் அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக அரச பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல் மற்றும் க.பொ.த. உயர் தர பரீட்சை முடிவுகளை வெளியிடுதல் ஆகியவற்றுக்கிடையிலான கால இடைவெளியைக் குறைப்பதற்காக ப.மா.ஆ வினால் வேறு பல வினைத்திறனான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த அளவீடுகளானவை அனுதிச் செயன்முறையில் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக பா.மா.ஆ வில் மனித

மற்றும் ஏனைய வளங்களில் அதிகரிப்பு புதிய அனுமதிச் செயன்முறையில் அறிவினைப் பகிர்ந்து கொள்வதற்காக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான பயிற்சிப்பட்டறைகளை நடாத்துதல்,"ஒன்-லைன்"விண்ணப்பம் மற்றும் பதிவுச் செயன்முறை ஆகியவற்றை சீர்படுத்துவதற்காகவும் அதனுடன் ஒரு மாணவர் நட்பு அனுமதிக் கைநூலை வடிவமைப்பதற்காகவும் வெளி வளங்களிலிருந்து தகவல் தொழிநுட்ப வசதிகளின் பாவனை ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

## கல்விசார் மற்றும் ஆய்வு அபிவிருத்திகள்

விமர்சனைக்குரிய ஆண்டு காலப்பகுதியில் உயர்கல்விச் செயன்முறைக்காக மாணவர்களுக்குரிய சந்தர்ப்பங்களை அதிகரிப்பதற்காக ஒரு கற்கைநெறியும் 38 புதிய இளமாணிப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களும் 15 புதிய பட்டப் பின் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களும் அறிமுகப் படுத்தப்பட்டன. இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 27 மற்றும் 4 என்ற அடிப்படையில் காணப்பட்டது.

கல்வி அமைச்சானது தேசிய கல்வி நிறுவகத்துடன் இணைந்து (NIE) 2015 ஆம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த (உயர்தரம்) பரீட்சைக்காக 2013 ஆம் ஆண்டில் தொழில் நுட்ப பாடநெறி ஒன்றை அறிமுகப்படுத்தியது. அதன் பிரகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது தொழில் நுட்ப துறை மற்றும் தொழில் நுட்ப பீடங்களில் 2015/2016 கல்வியாண்டுகாக மாணவர் பதிவிற்காக அங்கீகரித்தது. அதன் பிரகாரம் களனி பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம், யாழ் பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம், றுஹுணு பல்கலைக்கழகம், தென்கிழக்கு பல்கலைக்கழகம், கிழக்குபல்கலைக்கழகம் ஆகியவற்றில் 7 தொழில் நுட்ப பீடங்கள் நிறுவப்பட்டுள்ளன. 2015/2016 ஆம் ஆண்டுக்காக முதல் தொகுதியில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 2,030ஆக இருந்தது

## தர உறுதிப்பாடு மற்றும் அங்கீகாரம்

தர உறுதிப்பாடானது, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதான சட்டபூர்வமான கடமைகளில் ஒன்றாக இருப்பதனாலும் அது தொடரந்தேர்ச்சையானதும் நடைமுறையில் உள்ளதுமான செயன்முறையாகவும் இருப்பதனால் 2015 மே 5 ம் திகதிய 04/2015 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கையின் பிரகாரம்,உள்ளக தர உறுதிப்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளைத் திட்டமிடல், ஒழுங்குபடுத்தல், அபிவிருத்தி செய்தல், வசதிகளை ஏற்படுத்துதல், மற்றும் கண்காணித்தல் என்பவற்றை மேற்கொள்ளக் கூடிய ஒரு இணைப்பாளரைத் தலைமையாகக் கொண்டு அனைத்து பல்கலைக்கழகங்களும் தர உறுதிப்பாட்டு அலகைத் தாபித்தன.ப.மா.ஆ வின் "தர உறுதிப்பாடு மற்றும் அங்கீகார" அலகானது ஒரு அர்ப்பணிப்பான பதவியணியினைக் கொண்ட இடப் பரப்புடன் கூடிய அலுவலகம் ஒன்றுக்கு மாற்றப்பட்டது. 2016 ஆம் ஆண்டில் அவ் அலகுக்கு தலைமை வகிக்கனெ முழு நேர இணைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

அரச மற்றும் அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களில் பட்டக் கல்வி நிகழ்ச்சிகளின் பொருத்தப்பாடு மற்றும் தரம் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கான தேசிய அமைப்பு ஒன்றைத் தாபிப்பதற்கான தேவை பற்றி கலந்துரையாடுவதற்கு ப.மா.ஆ, உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் பொருத்தமான பங்குதாரர்கள் ஆகியவர்களுடனான பல சந்திப்புக்கள் இடம் பெற்றன. அதன் முதற் கட்டமாக இத்தகைய 'தர உறுதிப்பாடு மற்றும் அங்கீகார ஆணைக்குழு' ஒன்றைத் தாபிப்பதற்கு இணங்கக்கூடிய உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. ப.மா.ஆ, உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு ஆகியவற்றால்

குறிப்பிட்ட பிரேரணையை நிறைவேற்றுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அது தொடர்பாக கலந்துரையாடல் மற்றும் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக பாராளுமன்றத்திற்கு சட்டத்தை சமர்ப்பிக்கும்.

2017 அம் ஆண்டில் புதிய தர உறுதிப்பாடு (த.உ) மற்றும் இலங்கை தரச் சட்டக கட்டமைப்புகளின் பிரகாரம், அனைத்து 15 பல்கலைக்கழகங்களிலும் முதலாவது தர உறுதிப்பாட்டு வட்டத்தை முன்னெடுப்பதற்கும் பூரணப்படுத்துவதற்குமான செயற்பாட்டுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. இதற்குரிய நிதி உதவியானது 2017 நடுப் பகுதியில் செயற்பாட்டுக்கு வரக்கூடிய விதத்தில் உயர் கல்வி விரிவாக்கம் மற்றும் அபிவிருத்தி செயற்பாட்டு செயற்றிட்டம் ஆகியற்றை முன்னெடுக்கும் உலக வங்கி செயற்றிட்டத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

## பட்டப்பின் கற்கைகள் மற்றும் ஆய்வுச் செயற்பாட்டு மானியங்கள்

கற்கை நிகழ்ச்சித்திட்டங்களில் உயர் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக கல்வி சார் பதவியணியினரின் தரத்தை முன்னேற்றுவதற்காக மானியங்கள் வழங்குவது அவசியமாகும்.இதற்காக மொத்தமாக 513 மில்லியன் தொகை மானியங்கள் 53 கல்விசார் அணியினருக்கு பி.எச்.டி. (PhD) கற்கைப் பதிவுகளுக்காக வழங்கப்பட்டது.அத்துடன் மொத்தம் 40 ஆய்வுக் கற்கை மானியங்கள் 40 கல்விசார் அணியினருக்கு வழங்கப்பட்டது. வழங்கப்பட்ட மொத்த மானியங்களின் தொகை 112.8 மில்லியன் தொகைகளாகும். நிதி வழங்கலானது 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வழங்கப்பட்ட மானியங்களோடு ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க அளவில் உயர்வானதாக காணப்படுகின்றது.பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் அவுஸ்திரேலிய குயின்ஸ்லாந்து தொழில் நுட்பபல்கலைக்கழகம் (QUT) ஆகியவை இணைந்து பல்கலைக்கழகங்களில் உள்ள கனிஷ்ட கல்வி சார் பதவியணியினர் பயனடையக்கூடிய வகையிலான பகுதிசார் பி.எச்.டி. கற்கைகளுக்கான நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை ஆரம்பித்தது. அவுஸ்திரேலியாவில உள்ள முன்னணி உயர் கற்கை நிறுவனமான குயின்ஸ்லாந்து தொழில் நுட்ப பல்கலைக்கழகமானது சிறப்பான ஆய்வுகளுக்கான இடமாக விளங்குகிறது. குறிப்பாக விஞ்ஞானம்,பொறியியல் தொழிநுட்பம் மற்றும் சுகாதார விஞ்ஞானம் ஆகிய துறைகளிலாகும்.அந்நிகழ்ச்சியானது 2016 ஆம் ஆண்டு வெற்றிகரமாக ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் அதனுடைய 3 வது வருடத்தை 2016 ஆம் ஆண்டு தொடர்ந்து கொண்டிருக்கிறது.இதனுடைய விண்ணப்ப மதிப்பீட்டுச் செயன்முறையானது பமா.ஆவின் பட்டப்பின் மானியத்திட்டத்தின் அடிப்படையை ஒத்தது.அத்திட்டத்தின் கீழ் 13 விரிவுரையாளர்கள் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளதுடன் இவர்களுக்குரிய நேர்முகப் பரீட்சை 2016 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதிநடைபெற்றது.இதன்பிரகாரம் ப.மா.ஆ விலிருந்து நிதி உதவியை பெறுவதற்காக தெரிவு செய்யப்பட்ட 11 விண்ணப்பதாரிகள் அவுஸ்திரேலிய குயின்ஸ்லாந்து தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்தில் (QUT)உயர் கல்வியைத் தொடர அனுமதி பெற்றுள்ளனர்.அவுஸ்திரேலிய குயின்ஸ்லாந்து தொழில் நுட்ப பல்கலைக்கழகத்தில் இருந்து மேலும் இரண்டு விண்ணப்பங்களுக்கான பதில்கள் காத்திருப்பில் உள்ளன.

## மாநாடுகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள்

பல்வேறு துறைகளில் உள்ள முக்கியஸ்தர்கள் மற்றும் புகழ் பெற்ற அறிஞர்கள் ஆகியோர்களின் பங்களிப்புடன் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பாக பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச மட்ட மாநாடுகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகள் ப.மா.ஆ வினால் நடாத்தப்பட்டன. இவை பல்வேறுபட்ட திணைக்களங்கள், பிரிவுகள் , நிலையான குழுக்கள், ஆய்வு மற்றும் சர்வதேச

கூட்டுறவுப் பிரிவு(ஆ.ச.கூ.பி), தர உறுதிப்பாடு மற்றும் அங்கீகாரப் பேரவை(த.உ..அ.அ.பே), பால்நிலைப் பங்கு மற்றும் சமத்துவம் ஆகியவற்றுக்கான நிலையம் மற்றும் வேறுசில அமைப்புக்களால் ஏற்பாடு செய்யப்பட்டன.

## மாணவர் விவகாரங்கள்

மஹாபொல பெறும் மொத்த எண்ணிக்கையானோர் 47,704 ஆக இருக்கும் அதே வேளை,24,609 தொகையானோர் “உதவு தொகை” பெறுனர்களாகவும் அறக்கொடை வேறு புலமைப்பரிசில் பெறுவோரால் 84பேர்களும் 2016 காலப்பகுதியில் இருந்தனர்.

ப.மா.ஆ மற்றும் உயர் கல்வி நெடுஞ்சாலைகள் அமைச்சு ஆகியவை மஹாபொல புலமைப்பரிசில் தொகையை ரூபா 2,500/-முதல்ரூபா 5,000 /- வரையிலும்,“உதவு தொகையை ரூபா 2000/- இலிருந்து ரூபா 4000/- வரைக்கும் அதிகரிப்பதற்குரிய அரசாங்கத்தின் தீர்மானத்தை அமுல்படுத்தியது.

மடிக் கணினிகளைக் கொள்வனவு செய்வதற்கு வட்டியில்லாக் கடன்களை வழங்குவதற்குரிய அரசாங்கத்தின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ப.மா.ஆ உயர் கல்வி நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு உதவியது.

ப.மா.ஆ மற்றும் உயர் கல்வி நெடுஞ்சாலைகள் அமைச்சு ஆகியவற்றின் திட்டமானது தற்போது முன்னெடுக்கப்படும் மாணவர் விடுதி செயற்றிட்டம் நிறைவுபெறும்போது, 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் எல்லா மாணவர்களுக்கும் தங்குமிட வசதிகளை வழங்குவதாகும்.

## “தகுதிக்கு பொருத்தமற்ற தெரிவு” என்ற பிரச்சினைக்கு தீர்வு காணும் விதத்தில் தொழிற் சந்தைக்கு பொருத்தமான பல்கலைக்கழக கல்வியை உயர்த்துதல்

அ. பல்வேறு புதிய தேசிய மற்றும் பிராந்திய மட்டங்களிலான பொருத்தமான பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

- பொறியியல் தொழிநுட்பம் மற்றும் உயிரியல் முறைமை ஆகியவற்றில் 25 புதிய தொழிநுட்ப நிகழ்ச்சித் திட்டங்கள்.
- தொழிநுட்பம் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் - களனி பல்கலைக்கழகம், ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம், யாழ் பல்கலைக்கழகம்,கொழும்பு பல்கலைக்கழகம், றுஹுணு பல்கலைக்கழகம், தென்கிழக்கு பல்கலைக்கழகம், கிழக்கு பல்கலைக்கழகம் ஆகியவற்றில் 7 தொழில் நுட்ப பீடங்கள்.
- இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தில் புதிய மருத்துவ பீடத்தை நிறுவுவதை முன்னெடுத்தல்.

ஆ. மனித நேயங்கள் மற்றும் சமூக விஞ்ஞானங்களுக்காக அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை குறைவு படாத விதத்தில் அவர்களது திறமைகள் மற்றும் முயற்சிகளை முன்னேற்றுவதற்காக கட்டாயப் புள்ளியை யைமாகக் கொண்ட அடிப்படைக் கணிதம், புள்ளி விபரியல், கணினித் தொழிநுட்பம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடநெறிகளை அறிமுகப்படுத்துவதன் மூலம்,காணப்படும் மனித நேயங்கள் மற்றும்

சமூக விஞ்ஞான பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை வகைப்படுத்தும் செயன்முறையை நடைமுறைப்படுத்துதல்.

**ஆங்கிலம் மற்றும் தகவல் தொழிநுட்பம் ஆகியவற்றில் திறன் மேம்பாட்டிற்காக மாணவர்களுக்கு உதவுதல்.**

எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் இளமாணிப் பட்டதாரிகளின் பேச்சு, எழுத்து மற்றும் தொடர்பாடல் திறன்களை மேம்படுத்துவதற்காக ஆங்கில மொழி கற்பித்தல் அலகுகளுக்கு பதிலாக ஆங்கில மொழி கற்பித்தல் திணைக்களங்கள் தாபிக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக ஆசிரியர்களுக்கிடையில் ஆங்கில மொழித் திறனை விருத்தி செய்வதற்கும் நடவடிக்கை மெற்கொள்ளப்படுகிறது.

அரச மற்றும் கூட்டுறவுத் தாபனங்களில் தற்காலத்தில் தமது கோரிக்கைகளை வெளிக்கொணர்வதற்கு ஆங்கிலம் மற்றும் தகவல் தொழிநுட்பம் ஆகிய திறன்கள் அத்தியாவசியமாக உள்ளது. எனவே இதற்கு ஆதரவு அளிக்கும் விதத்தில் ப.மா.ஆ.வானது பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு முன்பதாக தெரிவு செய்யப்பட்ட எல்லா மாணவர்களுக்கும் இத்தகைமைகளை அடைவதற்கும் அதனை முன்னேற்றுவதற்கும்,'ஒன் லைன்'மூலம் ஆங்கிலம் மற்றும் தகவல் தொழிநுட்பம் ஆகிய பாடநெறிகளை செயற்படுத்தும் முறை ஒன்றை உருவாக்குவதற்கு நிதி உதவி வழங்கியுள்ளதுடன் அத்தகைய 'ஒன்லைன்'பாடநெறிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதன் மூலம் சான்றிதழைப் பெறக்கூடிய வசதியையும் அதனுடன் வழங்கியுள்ளது. இம் மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டதன் பின்பு மேலும் இத்தகைய திறன்களை முன்னேற்றுவதற்கு ஊக்குவிக்கப்படுவர். இச் செயற்பாட்டிற்காக உலக வங்கி மற்றும் HETC செயற்றிட்டம் ஆகியவை கூட ஆதரவு வழங்கக் கூடியதாக இருந்தன.

**பல்கலைக்கழகங்களில் பால்நிலைப் பங்கு மற்றும் சமத்துவம்,பாலியல் மற்றும் பால் நிலை அடிப்படையான வன்முறைகள் மற்றும் பகிடிவதைகள்.**

பல்கலைக்கழகங்களில் பால்நிலைப் பங்கு மற்றம் சமத்துவம்,பாலியல் மற்றம் பால் நிலை அடிப்படையான வன்முறைகள் மற்றும் பகிடிவதைகள தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ப.மா.ஆ.வினால் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- இலங்கைப் பல்கலைக்கழகங்களில் பால்நிலைப் பிரச்சினைகள், பால் நிலை அடிப்படையான வன்முறைகள் மற்றும் பகிடிவதைகள் தொடர்பாக இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் மூலமும் ஒழுங்குபடுத்தப்பட்ட ஆய்வுகள் /பயிற்சிப் பட்டறைகள் மூலமும் விழிப்புணர்வுகளை உருவாக்குதல்.
- பால்நிலைப் பங்கு மற்றும் சமத்துவம் நிலையான குழு என்ற பெயரில் ஒரு புதிய நிலையான குழு தாபிக்கப்பட்டது.
- பால்நிலைப் பங்கு மற்றும் சமத்துவம், அத்துடன் பால்நிலை அடிப்படையான வன்முறைகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ப.மா.ஆ. வில் பால்நிலைப் பங்கு மற்றும் சமத்துவத்துக்கான புதிய நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

- பல்கலைக்கழக மாணவர்களுக்காக எழுமாற்று ஒன்லைன் முறைப்பாட்டுக்கான பொறிமுறை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

- 1998 ஆம் ஆண்டைய பகிடிவதை சட்டத்தின் பிரகாரம் பல்கலைக்கழகங்களில் வன்முறை மற்றம் பகிடிவதை ஆகியவற்றின் விளைவு தொடர்பாக தமது விழிப்புணர்வின் உறுதி ஆதாரமாக 2016/2017 கல்வியாண்டுக்கான மாணவர்கள் ஆட்சேர்ப்புக்கான பதிவுச் செயன்முறையின் போது புதிய பல்கலைக்கழக கைந்நூலில் பெற்றோர்கள் மற்றும் மாணவர்களால் கையொப்பமிடக் கூடிய வகையில் ஒரு சத்தியக் கடதாசி அறிமுகப்படுத்தப்பட்டது.

## ஆளனியினர் அபிவிருத்தி

2016ம் ஆண்டில் திறைசேரியினால் மொத்தமாக (2015-156) புதிய ஆளணிப் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டன. இதனுடன் சேர்ந்த பல்கலைக்கழக முறையின் மொத்த அனுமதிக்கப்பட்ட ஆளணிப் பதவிகள் 29,754 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளன.

அனைத்து 15 பதவியணி அபிவிருத்தி நிலையங்களும், (ப.அ.நி) கல்விசார், பதவியணியினருக்கான ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், மற்றும் வேறு குறுகிய கால பயிற்சித்திட்டங்கள், பயிற்சிப் பட்டறைகள், வெளிக்கள பயிற்சி ஆகியவற்றை முறையாக நடாத்துகின்றன. உதாரணமாக, கல்வி, நிர்வாகம், நிதி, நிறைவேற்று, தொழில்நுட்ப,மற்றும் கல்விசாரா, முகாமைத்துவம், மற்றும் சிற்றூழியர் வகையினர் ஆகிய அனைத்து சாரார்களையும் உள்ளடக்கிய விதத்திலாகும்.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கொள்கைகளுக்கு அமைவாக, கல்வியியல் ஆளுகை மற்றும் வெளியீடு ஆகியவற்றில் அதி உன்னத தர சிறப்பை அடைந்து கொள்ளும் பாரிய இலக்குடன், தேசிய கொள்கைக்கமைவாக, பிராந்திய அபிவிருத்தியை முன்னேற்றுவதனூடான, பிராந்திய தேவைகள், மற்றும் பிரச்சினைகளை வெளிக்கொணரக்கூடிய பட்டப்பின் ஆய்வுகளை மேற்கொள்வதை ஏற்படுத்தக்கூடிய வகையில் இலங்கையில் அல்லது வேறு நாட்டில், முதுமாணி கற்கை அல்லது கலாநிதி கற்கை ஆகியவற்றை தொடர்வதை நோக்காக கொண்டு பட்டப் பின் கற்கை ஆய்வு வழங்கல் திட்டத்தின் கீழ் 151 மில்லியன் பெறுமதியான (கடந்த வருடத்துடன் - 2015 ஒப்பிடுகையில் 69.8 மில்லியன்) நிதி உதவி 53 கல்வி சாராருக்கு வழங்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக கல்விசார் அணியினருக்கு உள்நாட்டு ஆய்வு மானியத் திட்டத்தின் கீழ் பட்டப்பின் தகைமையைப் பெற்றுக் கொள்வதற்காக 53 மானியங்கள் வழங்கப்பட்டன. மொத்த மானியங்களின் தொகை 153 மில்லியன்களாகும். இது தவிர பல்கலைக்கழக உயர் கல்வி நிறுவன கல்விசார் ஊழியர்களுக்கு வெளிநாட்டில் பட்டப்பின் தகைமையைப் பெற்றுக் கொள்வதற்கான செயன்முறைக்காக, விமானப் பயணி வழிகளில் ரூபா 4.3 மில்லியன் தொகை வழங்கப்பட்டது.

தேசிய விஞ்ஞான மன்றம் மற்றும் தேசிய ஆய்வுப் பேரவை ஆகிய அரச நிறுவனங்கள் கூட கல்வி சார் அணியினருக்கு பட்டப் பின் தகைமையைப் பெற்றுக் கொள்வதற்காக வசதியளிப்பதற்கும் ஆய்வுத் திறனை மேம்படுத்துவதற்கும் பொருளாதார நிதி உதவிகளை வழங்கின.

## உட்கட்டமைப்பு அபிவிருத்தி

ஒதுக்கப் பட்ட நிதி உதவிகளுடன் முடிவடைந்த செயற்றிட்டங்கள் மற்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் செயற்றிட்டங்கள் ஆகியவற்றின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

மாணவர் கற்கைச்சூழல் மற்றும் தங்குமிட வசதிகளை மேம்படுத்துவதற்காக 2016 ஆம் ஆண்டில் பின்வரும் புதிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்கள் பூரணப்படுத்தப்பட்டன.

- மாணவர் விடுதிகள் - 73 (ரூபா 12,943 மில்லியன்கள்)
- கவ்வி சார் கட்டடங்கள் - 148 (ரூபா 4,406 மில்லியன்கள்)
- மாணவர் மீளுருவாக்க வசதி - 43 (ரூபா 254 மில்லியன்கள்)
- நிருவாகக் கட்டிடங்கள் - 9 (ரூபா 282 மில்லியன்கள்)
- பதவியணியினர் விடுதிகள் - 11 (ரூபா 655 மில்லியன்கள்)

நடைமுறையில் உள்ள செயற்றிட்டங்கள்

- மாணவர் விடுதிகள் - 34 (ரூபா6,559 மில்லியன்கள்)
- கவ்வி சார் கட்டடங்கள் - 113 (ரூபா 29,164 மில்லியன்கள்)
- மாணவர் மீளுருவாகக் வசதி - 29 (ரூபா 3,026 மில்லியன்கள்)
- நிருவாகக் கட்டிடங்கள் - 5 (ரூபா 667 மில்லியன்கள்)
- பதவியணியினர் விடுதிகள் - 11 (ரூபா 655 மில்லியன்கள்)

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ப.மா.ஆ செயலகத்தின் நான்கு மாடி கட்டிட நிர்மாணப்பணியானது 2015 மே மாதம் 29 ம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன் இது 2017 இறுதிக்கு முன்னர் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பல்கலைக்கழக வியாபாரத் தொடர்புகளை முன்னேற்றுதல்

2016 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக வியாபாரத் தொடர்புகளை முன்னேற்றுவதற்காக பின்வரும் நடவடிக்கைகள் மெற்கொள்ளப்பட்டன.

- பல்கலைக்கழக வியாபாரத் தொடர்புகளை முன்னேற்றுவதற்காக,புதிய ப.மா.ஆ. சுற்றறிக்கைகளை விநியோகித்தல்,GIZநிகழ்ச்சித் திட்டத்தின் ஆதரவுடன் பல்கலைக்கழக வியாபார அலகுகளைத் தாபிப்பதற்கு அங்கீகாரம் வழங்குதல் ஆகியவை மூலம் புதிய முறைமை உருவாக்கப்பட்டது.

- மனித நேயம் மற்றும் சமூக விஞ்ஞான பட்டததாரிகளின் திறன் மேம்பாட்டிற்காக ஒரு நிலையான செயன்முறையை அபிவிருத்தி செய்வதற்கு ஆதரவு வழங்குவதற்காக இலங்கை தொழிற் சம்மேளனப் பிரிதிநிதிகள்,இலங்கை

வர்த்தக சம்மேளனம் மற்றும் தேசிய வர்த்தக சம்மேளனம் ஆகியவற்றின் பிரதிநிதிகள், மனித நேயம் மற்றும் சமூக விஞ்ஞானம் தொடர்பான ப.மா.ஆ வின் நிலையான குழுவுக்கு அழைக்கப்பட்டனர்.

## தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி (IT)

விமர்சனைக்குரிய ஆண்டு காலப் பகுதியில் ஒன்லைன் கொடுப்பனவு, தபால் அலகுசெயற்பாட்டின் தன்னியக்க முறை, சட்ட ரீதியான வழக்குகளை மேற்கொள்வதற்கும் பதிவு செய்வதற்கும் அத்துடன் மாணவர்களுக்கு பகிடிவதை தெடர்பான முறையீடுகளை செய்வதற்கும் மென்பொருள்கள் ஏற்படுத்தப்பட்டன. ப.மா.ஆ.வின் V-LANவலையமைப்பானது ப.மா.ஆ.வின் விரிவுபடுத்தல் செயற்பாடுகளை செய்வதற்கேற்ற வகையில் விரிவுபடுத்தப்பட்டது.விமர்சனைக்குரிய ஆண்டு காலப் பகுதியில் தர உறுதிப்பாடு மற்றும் அங்கீகாரப்பேரவை மற்றும் பால்நிலைப் பங்கு மற்றும் சமத்துவத்திற்கான நிலையம் போன்றவற்றுக்காக இரண்டு இணையத் தளங்கள் விருத்தி செய்யப்பட்டன.

## நிதி நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது 2016 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டை வேண்டியுள்ளதுடன், மத்திய வங்கியானது ரூபா 48,826 மில்லியன் தொகையை மீண்டெழும் மற்றும் மூலதன செலவினங்களுக்காக அங்கீகரித்துள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் வருடத்தில், குறிப்பிட்ட இரு மீண்டெழும் மற்றும் மூலதன செலவீன ஒதுக்கீடானது 40% சதவீதமாக அதிகரித்துள்ளது. இவ் அதிகரிப்பானது அரசாங்கத்தால் பல்கலைக்கழக முறைமைக்கு அதிகரிக்கப்பட்ட சம்பள செலவினங்களை ஈடுசெய்யும் நோக்கிற்காகவே இவ் அதிகரிப்பு ஏற்பட்டது.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கணக்காய்வு குழுவானது 2016 ஆம் வருட காலப்பகுதியில் 6 சந்தர்ப்பங்களில் சந்தித்ததுடன் திறைசேரியினால் அறிமுகப்படுத்தப்பட்ட நல்லாட்சி மற்றும் முகாமைத்துவ நடைமுறைகள் ஊடாக, நிதி முகாமைத்துவத்தை முன்னேற்றுவதில் உதவி செய்யும் நோக்கில் ப.மா.ஆ வின் மத்திய உள்ளக கணக்காய்வுப் பிரிவானது 18 உள்ளக கணக்காய்வு அறிக்கைகளை சமர்ப்பித்ததுடன் அவற்றில் 7 அறிக்கைகள் ப.மா.ஆ தொடர்பானதும் 11 அறிக்கைகள் உயர் கல்வி நிறுவனங்கள் தொடர்பானதாகவும் உள்ளன.

விமர்சனைக்குரிய ஆண்டு காலப்பகுதியில் எதிர் வரும் வருடங்களில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் உயர் கல்வி நிறுவனங்களினதும் சுமூக செயற்பாடுகளை உறுதிப்படுத்தும் பொருட்டு உயர் கல்வியின் உயர் ஆலோசனை மற்றும் ஒழுங்குபடுத்தும் அமைப்பாக, ப.மா.ஆ புதிய விடயங்கள் தொடர்பாக 19 ஆணைக்குழுச் சுற்றறிக்கைகளையும் (2015ல்- 14) அதே வேளை ஏனைய முன்னைய சுற்றறிக்கைகள் இற்றைப்படுத்தப்பட்டதுடன் புதிய விடயங்கள் தொடர்பாக 14 தாபனச் சுற்றறிக்கைகளையும் வெளியிட்டது.

## உயர் கல்வி விரிவாக்கல் அபிவிருத்தி துரிதப்படுத்தல் வேலைத்திட்டம்

இச் செயற்றிட்டமானது உலக வங்கியினதாகும். இச்செயற்றிட்டத்தில் உள்ள பொருத்தமான பரப்புக்கள் ப.மா.ஆ, திறைசேரி மற்றும் உயர் கல்வி அமைச்சு ஆகியவற்றால் முடிவு செய்யபப்ட்டுள்ளன. இதற்குரிய தொகையாக ருபா 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைக்கக்கூடியதாக இருக்கும். இச்செயற்றிட்டத்தின் எல்லையானது உயர் கல்வி அமைச்சு,ப.மா.ஆ, 15 அரச பல்கலைக்கழகங்கள்,இலங்கை உயர் தொழிநுட்பக்கற்கை நிறுவனம்,உயர் தொழிநுட்ப நிறுவனங்கள், மற்றும் உயர் கல்வி அமைச்சால் அங்கீககரிக்கப்பட்ட அரச சார்பற்ற உயர் கல்விநிறுவனங்கள் (பட்டம் வழங்கும் நிறுவனங்கள்) ஆகியவற்றில் இனங்காணப்பட்ட செயற்பாட்டிற்கு உதவி செய்யப்படக்கூடியதாக இருக்கும். மேற்குறிப்பிட்ட உயர்கல்வி முகவர்களின் அபிவிருத்தி மற்றும் வலுப்படுத்தலானது,உயர் கல்வி விரிவாக்கல் அபிவிருத்தி துரிதப்படுத்தல் செயற்திட்டத்தின் கீழ் ஏனைய அபிவிருத்தி முகவர்கள் மற்றும் வெளிநாட்டு அரசாங்கங்கள் ஆகியவற்றால் ஏற்கெனவே நிதி உதவி அளிக்கப்பட்ட பாரிய உட்கட்டமைப்பு செயற்றிட்டத்துக்கானது தவிர்ந்தவற்றுக்கு ஆதரவு அளிக்கப்படுவதாக இருக்கும்.செயற்றிட்ட செயற்பாடுகள் 2017 ஜுலை மாதம் அளவில் ஆரம்பமாக இருப்பதுடன் வேண்டப்பட்ட நிதிகளும் கிடைக்கக்கூடியதாக இருக்கும்.

உயர் கல்வி விரிவாக்கல் அபிவிருத்தி துரிதப்படுத்தல் வேலைத்திட்டத்தின் ஒரு பகுதி நிகழ்ச்சியானது பின்வரும் மூன்று தந்திரோபாய விளைவுகளைத் தரக்கூடிய பரப்புக்களின் கீழ் வரக்கூடிய இனங்காணப்பட்ட செயற்பாடுகளுக்கு உதவி வழங்கும்.

- பொருளாதார அபிவிருத்திக்காக முன்னுரிமைப்படுத்தப்பட்ட பரப்புக்களில் உயர் கல்வியில் ஆட்சேர்ப்பை அதிகரித்தல்.
- உயர் கல்வித்தரத்தை அதிகரித்தல்.
- உயர் கல்விக்கான ஆதரவை வலுப்படுத்துதல்.

## 2 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முகாமைத்துவம்

**தலைவர்**

**பேராசிரியர். மொஹான் .த சில்வா**
(எவ்.ஆர்.சி.எஸ். எடின் எப்.சி.எஸ்.எஸ்.எல்
அறுவைச்சிகிச்சை சிரேஷ்ட பேராசிரியர் மற்றும் தலைவர் - அறுவைச் சிகிச்சை
மருத்துவ விஞ்ஞான பீடம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்.
வைத்திய ஆலோசகர் - கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை)

**உதவித்தலைவர்**

**பேராசிரியர். பீ.எஸ்.எம் குணரத்ன**
பீ.எஸ்.சீ (பஸ்.எட்),(எஸ்,ஜே.பீ) எம்.பீ.ஏ(கொழும்பு) எம்.எஸ்.சி. மற்றும் பி.எச்.டி (டிசுகுபா- லண்டன்)

பொது நலவாய உறுப்பினர் (யோகோஹோமா- ஜப்பான்)
மான்செஸ்டர் (ஐ.இ), ஜே.எஸ்.பி.எஸ் உறுப்பினர் (யொகொஹோமா-ஜப்பான்)
நிதியியல் பேராசிரியர்,கொழும்பு பல்கலைக்கழகம்

அங்கத்தவர்கள்

- **பேராசிரியர் மலிக் ரணசிங்க**

  பி.எஸ்.சி(பொறியியல்), (சிறப்பு), எம்.ஏ.எஸ்.சி(யு.பி.சி)

  பி.எச்.டி(யு.பி.சி), சி.இங்.இன்ட் பி.இ.எப்.ஐ.இ(இலங்கை), எப்.என்.ஏ.எஸ்(இலங்கை)

- **பேராசிரியர். கே.குமாரவடிவேல்**

  பி.எஸ்.சி.(சிறப்பு) பி.எச்.டி (பிரிஸ்டல்)

  **பேராசிரியர் ஹேமாந்த சேனாநயக்க,**

  எம்.பி.பி.எஸ், எம்.எஸ் (மகப்பேறு மற்றும் பெண்நோயியல்),எப்.ஆர்.சி.ஒ.ஜி., எப்.எஸ்.எல்.ஒ.ஜி எப்.ஆர்.சி எஸ்.ஈ.டி

- டாக்டர் றுவைஸ் ஹனிபா

  எம்.பி.பி.எஸ், டி.எப்.எம், பிக் டிப்ளோமா, எம்.எஸ்.சி. எம்.டி, எப்.சி.ஜி.பி, எம்.ஆர்.சி.ஜி.பி

- டாக்டர். விக்ரம வீரசூரிய

  எல்.எல்.பி.(இலங்கை), பி.எச்.டி(லண்டன்), சட்டத்தரணி

திறைசேறியின் பிரதிநிதிகள்

**பேராசிரியர். பீ.கே. ஹரிச்சந்திரா (24.04.2016 இலிருந்து)**
பொருளியல்,பேராசிரியர் மான்செஸ்டர் பல்கலைக்கழகம்,ஐ.இ, எம்.எஸ்.சி.-பொருளியல், மான்செஸ்டர் பல்கலைக்கழகம்,ஐ.இ,
எம்.பி.ஏ. கொழும்பு பல்கலைக்கழகம், பி.கொம். களனிப்பல்கலைக்கழகம்

செயலாளர்

டாக்டர். பிரியந்த பிரேம குமார
பி.எஸ்.சி.(சிறப்பு), எம்.பி.ஏ(சி.எம்.பி)
பி.எச்.டி. வுஹுன்

(மேற்குறித்த 9வது பல்கலைக்கழக ஆணைக்குழு உறுப்பினர்கள் 04.03.2015 ம் திகதி நியமிக்கப்பட்டார்கள்)

## 3. பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவன முகாமைத்துவம்

### 3.1 கொழும்பு பல்கலைக்கழகம்

**வேந்தர்**
அதிவணக்கத்துக்குரிய அருள்திரு பேராசிரியர் ஒஸ்வால்ட் கோமிஸ்

**உப வேந்தர்**
பேராசிரியர். லக்ஸ்மன் திசாநயக்க

**பதிவாளர்**
திரு.கெ.ஏ.எஸ்.எட்வர்ட்

### 3.2 பேராதனைப் பல்கலைக்கழகம்

**வேந்தர்**
பேராசிரியர். பி.டபிள்யு.ஏபாசிங்க

**உப வேந்தர்**
பேராசிரியர்.யு.பி.திசாநயக்க

**பதிவாளர்**
திரு.யூ.டீ.தொடன்தல

### 3.3 களனிப் பல்கலைக்கழகம்

**வேந்தர்**
அதி வணக்கத்திற்குரிய வெலம்மிட்டியாவே தர்ம கீர்த்தி
சிறீ குசலதர்ம தேரர்

**உபவேந்தர்**
பேராசிரியர். வை.எம்.சுனந்தா மத்தும பண்டாரா

**புதிவாளர்**
திரு.டபிள்யூ.எம்.கருணாரத்ன

### 3.4 ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

**வேந்தர்**
வணக்கத்திற்குரிய பேராசிரியர். பெல்லன்வில விமலரத்ன தேரர்

**உப வேந்தர்**
பேராசிரியர். சம்பத் அமரதுங்க

**பதிவாளர்**
திரு.கே.ஜீ.பிறிட்டோ

### 3.5 மொறட்டுவ பல்கலைக்கழகம்

**வேந்தர்**
வித்ய ஜோதி பேராசிரியர். கே.கே.வை. டபிள்யூ.பெரேரா

**உப வேந்தர்**
பேராசிரியர். ஏ.கே.டபிள்யூ.ஜெயவர்த்தன.

**பிரதி உபவேந்தர்**
பேராசிரியர். ஆர்.ஏ. அட்டலகே

**பதிவாளர்**
திரு. ஏ.எல்.ஜவ்பர் சாதிக்

3.6 யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

**வேந்தர்**
பேராசிரியர். எஸ்.பத்மநாதன்

**உபவேந்தர்**
பேராசிரியர். (திருமதி) வசந்தி அரசரட்னம்

**பதிவாளர்**
திரு.வி.கே.காண்டீபன் (2016.01.01 முதல் 10.03.2016வரை)
திரு. என் ராஜவிஷன் (பதில்) (2016.03.11 முதல் 2016.12.31 வரை)

**3.7** ருகுணு பல்கலைக்கழகம்

**வேந்தர்**
அதி வணக்கத்திற்குரிய ரஜகிய பண்டித பல்லத்தர சுமணஜோதி நாயக தேரர்

**உப வேந்தர்**
பேராசிரியர். காமினி சேனநாயக்க

**பிரதி உபவேந்தர்**
டாக்டர். ஏ.எம்.எஸ்.அழகியவண்ண

**பதிவாளர்**
திருமதி. பி.எஸ்.கழுகம

**3.8** இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

**வேந்தர்**
பேராசிரியர். கொள்வின் குனரத்ன

**உப வேந்தர்**
பேராசிரியர்..எஸ்.ஏ.அரியதுரை

**பிரதி உபவேந்தர்**
பேராசிரியர். கமல் பி. குணஹேரத்

**பதிவாளர்**
திருமதி. டபிள்யூ.எல்.விண்டயா ஜெயசேன

**3.9** கிழக்கு பல்கலைக்கழகம் - இலங்கை

**வேந்தர்**
பேராசிரியர். டி. ஜயசிங்கம்

**உப வேந்தர்**
பேராசிரியர். கே.ஈ கருணாகரன்

பதிவாளர்
திரு வீ. காண்டீபன்( 2016.03.10 முதல் 2016.12.31 வரை)
திரு ஏ. பகீரதன் (பதில்) (2015.02.01 முதல் 2016.03.09 வரை)

**3.10** இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகம்

**வேந்தர்**

பேராசிரியர். அச்சி.எம்.இஸ்ஹாக்

**உப வேந்தர்**
கலாநிதி எஸ்.எம்.எம்.இஸ்மாயீல் (2015.06.21 வரை)
பேராசிரியர். எம்.எம்.எம் நாஜீம்(2015.06.20 முதல்)

**பதிவாளர்**
ஜனாப் எச்.ஏ.சத்தார் (2016.01.01 முதல் 2016.07.31 வரை)
ஜனாப் எம்.ஐ.நவ்பர் (பதில்)(2016.08.01 முதல் 2016.12.31 வரை)

**3.11 இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்**

**வேந்தர்**
பேராசிரியர். லீல் குணசேகர

**உப வேந்தர்**
பேராசிரியர். கே.எச்.ரஞ்சித் விஜயவர்த்ன

**பதிவாளர்**
திரு.ஏ.எம்.ஜி.பி. அபயசிங்க

**3.12 இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்**

**வேந்தர்**
வணக்கத்திற்குரிய பேராசிரியர். கும்புரகமுவ வஜிர தேரர்

**உப வேந்தர்**
பேராசிரியர். சந்தனா பி.உடவத்த

**பதிவாளர்**
ஜனாப்.எம்.எப்.ஹிபதுல் கரீம்

**3.13 இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்**

**வேந்தர்**
பேராசிரியர். டியுலீ டி. சில்வா

**உப வேந்தர்**
பேராசிரியர். எஸ்.ஜே.பி.ஏ.ஜயசேகர

**பதிவாளர்**
திரு.ஜி.பியரத்ன

**3.14 ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்**

**வேந்தர்**
வணக்கத்திற்குரிய பெங்கமுவ தம்மதின்ன தேரர்

**உப வேந்தர்**
கலாநிதி.ஜி.சந்திரசேன

**பதிவாளர்**
திரு.ஏ.ஜி.கருனாரத்ன(நிர்ணய அடிப்படையில்)

**3.15 கட்புல அரங்கேற்றக் கலை பல்கலைக்கழகம்**

**வேந்தர்**

பண்டித கலாநிதி. டபிள்யூ.டி.அமரதேவ
சங்கீத் நிபுன் பேராசிரியர். சனத் நந்தசிறி 2016.11.23 (முதல்)

**உப வேந்தர்**
பேராசிரியர். ஆரியரத்ன கழுஆராய்ச்சி

**பதிவாளர்**
திரு.பி.எம்.தயாவன்ச

3.16 **விவசாய பட்டப் பின் கற்கை நிறுவகம்**

**பணிப்பாளர்-**
பேராசியர். எஸ் சமித்த

3.17 **பாளி மற்றும் பௌத்த கற்கைகள் பட்டப் பின் படிப்பு நிறுவகம்**

**பணிப்பாளர்-**
வணக்கத்துக்குரிய பேராசியர். கொடாபிடிய ராகுல் தேரர்

3.18 **சுதேச மருத்துவ நிறுவகம்**

**பணிப்பாளர்-**
கலாநிதி. (திருமதி) எஸ் டி ஹப்பு ஆராய்ச்சி

3.19 **மனித வள மேம்பாட்டு நிறுவனம்**

**பணிப்பாளர்-**
பேராசிரியர். ஜே ஏ எஸ் கே ஜயக்கொடி

3.20 **மருத்துவ பட்டப் பின் கற்கை நிறுவகம்**

**பணிப்பாளர்-**
பேராசிரியர். எச் ஜே டி சில்வா

3.21 **தொல் பொருளியல் பட்டப் பின் கற்கை நிறுவகம்**

**பணிப்பாளர்-**
பேராசிரியர். ஜகத் வீரசிங்க்

3.22 **முகாமைத்துவ பட்டப் பின் கற்கை நிறுவகம்**

**பணிப்பாளர்-**
கலாநிதி. அஜந்த தர்மசிறி

3.23 **கொழும்பு பல்கலைக்கழக கணனி கற்கைகள் நிறுவகம்**

**பணிப்பாளர்-**
பேராசிரியர். கே.பி.ஹேவாகமகே

3.24 **கம்பஹா விக்ரமாராய்ச்சி ஆயுர்வேத நிறுவகம்**

தகுதி வாய்ந்த அதிகாரி-
பேராசிரியர். ஜயந்த வெலிஹிந்த

3.25 விஞ்ஞான பட்டப்பின் கற்கை நிறுவகம்

பணிப்பாளர்-
பேராசிரியர். எச் எம் டி நாமல் பிரியந்த

3.26 நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞான தேசிய நிறுவகம்

பணிப்பாளர்-
திரு. ஆர் பி ரணவிர

3.27 மொறட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகம்

பணிப்பாளர்-
திருமதி. எம் எம் பி டி சமரசேகர

3.28 உயிர் இரசாயன மூலக்கூற்று உயிரியலும், உயிர் தொழில்நுட்பவியல் நிறுவகம்

பணிப்பாளர்-
பேராசிரியர். ஷிரோமா ஹந்துந்நெதி

3.29 சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கை நிறுவகம்

பணிப்பாளர்-
கலாநிதி. சிவஞானம் ஜயசேகர்

3.30 ஆங்கில பட்டப் பின் கற்கை நிறுவகம்

பணிப்பாளர்-
கலாநிதி. (திருமதி) எச் வி எம் ரத்வத்த

3.31 மானிடவியல் மற்றும் சமுக விஞ்ஞானங்கள் உயர் கற்கைகளுக்கான தேசிய நிலையம்

பணிப்பாளர்-
பேராசிரியர். பி எஸ் எம் குணரத்ன (பதில்)

3.32 கொழும்பு பல்கலைக்கழக விவசாய தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞானங்கள் நிறுவகம்

பணிப்பாளர்-
திரு. எம். பியதிலக

## 4. பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல்
**(சாதாரண ஏற்பாடுகள் மற்றும் விஷேட ஏற்பாடுகளின் கீழ்)**

**2015 /2016கல்வியாண்டுக்காக பல்கலைக்கழகங்களுக்கு மாணவர் தெரிவு**

(2015ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த. (உ/த) பெறுபேறுகளை அடிப்படையாகக்கொண்டு)

விமர்சனைக்குரிய ஆண்டு காலப்பகுதியில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது 2016 பெப்ரவரி மாதத்தில் இலங்கையில் உள்ள 'பல்கலைக்கழகங்களின் இளமாணிப்பட்ட பாட நெறிகளுக்கான அனுமதி - 2015/2016' என்ற நூலை வெளியிட்டது.இது 2015/2016 கல்வியாண்டுக்கான அனுமதிக்கான கைந்நூலாகும். பல்வேறு கற்கை நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய மாணவர் அனுமதியின் உத்தேச தொகை மற்றும் பீடங்கள் பற்றிய தகவல்கள் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன. 2015 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களிலிருந்து பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்கள் 2016 ஏப்ரல் மாதமளவில் கோரப்பட்டன. விண்ணப்ப முடிவுத் திகதியானது 2016 மே 16 ம் திகதியாக இருந்தது.

உத்தேசிக்கப்பட்ட மொத்த தொகை 28,950 ஆக இருந்தது. அது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 10% வீத அதிகரிப்பாகும். 6 துறைகளின் கீழான ( கலை,உயிரியல் விஞ்ஞானம், உடற்றொழில் விஞ்ஞானம்,பொறியியல், தொழிநுட்பம், மற்றும் உயிரியல் முறைமைகள்) பொருத்தமான எண்ணிக்கையினர் 99 இளமாணிப்பட்ட பாட நெறிகளில் நூலில் குறிப்பட்ட மேற்படி 22 உயர் கல்வி நிறுவனங்களிலும் தொடரக் கூடியதாக இருக்கும்.

**சாதாரண ஏற்பாட்டின் கீழ் தெரிவு செய்யப் பட்டோரின் எண்ணிக்கை - 26,541**
**விஷேட ஏற்பாட்டின் கீழ் தெரிவு செய்யப் பட்டோரின் எண்ணிக்கை - 2,409**

பரீட்சைத் திணைக்களத்தின் படி,2015 ஆம் க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு 309>069 பரீட்சாத்திகள் தோற்றியிருந்தனர;.(236,072பரீட்சாத்திகள் பாடசாலைப் பரீட்சாத்திகளாகவும் 72,997பேர் தனிப்பட்ட பரீட்சாத்திகளுமாவர்). இத்தொகையில்

**155,550மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றிருந்தனர் (50.3%).**

### 4.1.1. சாதாரண ஏற்பாட்டின் கீழ் தெரிவு செய்யப்பட்டோரின் எண்ணிக்கை (26,541)

ப.மா.ஆ68,299 விண்ணப்பங்களைப் பெற்றுக்கொண்டது. 2015/2016கல்வியாண்டுக்கான ஒவ்வொரு இளமாணிப்பட்ட பாட நெறிகளுக்குமான வெட்டுப் புள்ளிகள் 2016 செப்டம்பர் மாதம் அளவில் வெளியிடப்பட்டதுடன், விண்ணப்பித்த மாணவர்களில் இருந்து 26,541 மாணவர்கள் சாதாரண ஏற்பாட்டின் கீழ் தெரிவு செய்யபட்டனர்.சாதாரண ஏற்பாட்டின் கீழ் தெரிவு செய்யப்பட்டோர் மற்றும் விண்ணப்பித்தோர் சத வீதமானது முறையே 17.1% மற்றும் 38.8% ஆகும்.

4.1.2. 2015/2016கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான மாணவர் தெரிவில் பின்வரும் அனுமதிக்கொள்கை பின்பற்றப்பட்டிருந்தது.

4.1.3. 2015 நடைபெற்ற க.பொ.த(உ/த) பரீட்சையின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட பெறுபேறுகளுக்கு அமைவாக மாணவர்கள் பெற்ற சராசரி Z - புள்ளிகளின் மீதான தர வரிசையின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களின் தெரிவு தீர்மானிக்கப்பட்டது.

4.1.4. கலைப் பாடநெறியைப் பொறுத்தவரை, (அதாவது, கலை, கலை (SP), கலை (SAB), தொடர்பாடல் கற்கைகள், சமாதானமும் முரண்பாடுகளை தீர்த்தலும், இஸ்லாமிய கற்கைகள், அரபுமொழி) அனுமதியானது நாடளவியரீதியாக சிறப்புப் புள்ளி அடிப்படையிலான விடய நிபந்தனையின் கீழ் தீர்மானிக்கப்படும். அதாவது கொடுக்கப்பட்ட மாவட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கையானது 1993/94 கல்வியாண்டு அல்லது 2002/2003 கல்வியாண்டு இதில் எத்தொகை உயர்ந்ததோ அத்தொயை விட குறையாமல் இருக்கும்.

4.1.5 மேலே 2.1.2 குறிப்பிட்டது தவிர , எல்லாப் பாடநெறிகளுக்குமான அனுமதி ஒரு இரட்டைப்பிரமாண முறையில் அமைந்ததாக இருக்கும். அதாவது

- அகில இலங்கை சிறப்புத் தரம்
- மாவட்ட அடிப்படையிலான சிறப்புத் தரம்

4.1.5.1 கிடைக்கக் கூடிய இடங்களில் 40% வரையான இடங்கள் அகில இலங்கை சிறப்புத் தர அடிப்படையிலான z புள்ளி வரிசை அடிப்படையில் நிரப்பப்படும்.

4.1.5.2 ஒவ்வொரு கற்கை நெறியிலும் உள்ள 55 சதவீதமான இடங்கள் நாட்டின் மொத்த சனத்தொகையின் வெவ்வேறு மாவட்டத்தினதும் விகிதாசாரத்திற்கு அமைவாக 25 நிர்வாக மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

4.1.5.3. ஒவ்வொரு கற்கை நெறிக்காகவும் உள்ள 5%ஆன இடங்கள் கல்விசார் சாதகமற்ற சூழ்நிலை நிலவும் கீழ் குறிப்பிடப்பட்ட 16 மாவட்டங்களுக்கு இடையில் மாவட்டத்தின் மொத்த சனத்தொகையின் விகிதாசார அடிப்படையில் 16 மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1.நுவரெலியா | 9.மட்டக்களப்பு |
| 2.ஹம்பாந்தோட்ட | 10.அம்பாறை |
| 3.யாழ்ப்பாணம் | 11.புத்தளம் |
| 4.கிளிநொச்சி | 12.அநுராதபுரம் |
| 5.மன்னார் | 13பொலன்னறுவை |
| 6.முல்லைத்தீவு | 14.பதுளை |
| 7.வவுனியா | 15மொனராகலை |
| 8.திருகோணமலை | 16.இரத்தினபுரி |

கலைப்பிரிவு தவிர பாடநெறிகளுக்கு மாணவர்களை அனுமதியின் போது எந்தவொரு மாவட்டத்திற்கு எனவும் ஒதுக்கப்பட்ட மாவட்டப்பங்கானது,

1993/94 கல்வியாண்டு காலப்பகுதியில் இருந்த மாவட்ட பங்கினை விட குறையாமல் இருப்பது உறுதி செய்யப்பட்டது.

**புதிய பாடநெறிகள் மற்றும் உள்ளெடுப்புக்கள் (மொத்தம் 2075)**

2015/2016 கல்வியாண்டுக்காக, பின்வரும் புதிய பாடநெறிகள், பல்கலைக்கழக முறைமையில் உள்ள பாடநெறிகள் வரிசையில் சேர்த்துக்கொள்ளப்பட்டன. உரிய பாடநெறிக்கான ஆட்சேர்ப்புடனான புதிய பாடநெறிகள் கீழ் வரும் அட்டவணையில் வரிசைப்படுத்தப்பட்டன.

| | பாட நெறி | பல்கலைக்கழகம் | உள்ளெடுப்புக்கள் |
|---|---|---|---|
| 1 | பொறியியல் தொழிநுட்பம் | • ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்<br>• களனி பல்கலைக்கழகம்<br>• யாழ்ப்பாண பல்கலைக்கழகம்<br>• றுஹுணு பல்கலைக்கழகம்<br>• இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்<br>• இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்<br>• இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்<br>• இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் | 775 |
| 2 | உயிரியல் முறைமைகள் தொழிநுட்பம் | • ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் யாழ்ப்பாண பல்கலைக்கழகம்<br>• கிழக்கு பல்கலைக்கழகம்<br>• இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகம்<br>• இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்<br>• இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்<br>• இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் | 625 |
| 3 | தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் | • ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்<br>• களனி பல்கலைக்கழகம்<br>• வவுனியா வளாகம்<br>• றுஹுணு பல்கலைக்கழகம்<br>• இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகம்<br>• இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் | 425 |
| 4 | உடற்றொழில் விஞ்ஞானம் (த.தொ.தொ) | • களனி பல்கலைக்கழகம்<br>• ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் | 100 |
| 5 | கடல்சார் மற்றும் நன்னீர் விஞ்ஞானம் | • றுஹுணு பல்கலைக்கழகம் | 50 |
| 6 | உணவு வியாபார முகாமைத்துவம் | • இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் | 50 |
| 7 | இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தல் | • களனி பல்கலைக்கழகம் | 50 |
| | | மொத்தம் | **2075** |

<u>2015 /2016 ஆம் ஆண்டுக்காக சாதாரண ஒதுக்கீட்டின் கீழ் உத்தேசிக்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட மாணவர் தொகையும் முன்னைய இரண்டு வருடங்களில் தெரிவு செய்யப்பட்டோர் தொகையும் (ஒப்பீட்டு நோக்கிற்காக) கீழ்வருமாறு தரப்பட்டுள்ளது.</u>

| கற்கை நெறியின் பெயர் | 2015/2016 இல் சாததரண ஏற்பாட்டின் கீழ் தெரிவு செய்யப்பட்டோர் தொகை | 2014/2015 இல் சாதாரண ஏற்பாட்டின் கீழ் தெரிவு செய்யப்பட்டோர் தொகை | 2013/2014 இல் சாதாரண ஏற்பாட்டின் கீழ் தெரிவு செய்யப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| 1. மருத்துவம் | 1242 | 1223 | 1234 |
| 2. பல் விஞ்ஞானம் | 78 | 78 | 102 |
| 3. விலங்கு விஞ்ஞானம் | 79 | 98 | 116 |
| 4. விவசாயம் | 569 | 604 | 627 |
| 5. உணவு விஞ்ஞானமும் ஊட்டச்சத்தும் | 108 | 108 | 118 |
| 6. உயிரியல் விஞ்ஞானம் | 1253 | 1397 | 1380 |
| 7. பிரயோக விஞ்ஞானம் (உயிரியல்) | 208 | 208 | 212 |
| 8. இயந்திரவியல் | 1636 | 1486 | 1494 |
| 9. இயந்திரவியல் - (EM) | 48 | 48 | 58 |
| 10. இயந்திரவியல்- (TM) | 58 | 48 | 57 |
| 11. கணிய அளவையியல் | 123 | 123 | 130 |
| 12. கணினி விஞ்ஞானம் | 332 | 297 | 297 |
| 13. பௌதீக விஞ்ஞானம் | 1880 | 1941 | 1932 |
| 14. அளவீட்டு விஞ்ஞானம் | 78 | 78 | 61 |
| 15. பிரயோக விஞ்ஞானம் (பௌதீக) | 442 | 412 | 414 |
| 16. முகாமைத்துவம் | 3825 | 3760 | 3619 |
| 17. தோட்ட முகாமைத்துவமும் மதிப்பீடும் | 58 | 59 | 69 |
| 18. வர்த்தகம் | 643 | 630 | 587 |
| 19. கலை | 4851 | 4827 | 4744 |
| 20. கலை (sp)ஊடகம் | 79 | 79 | 79 |
| 21. கலை (SAB) | 224 | 226 | 198 |
| 22. முகாமைத்துவக் கற்கைகள் (TV)- A | 198 | 172 | 204 |
| 23. கட்டடக்கலை | 53 | 53 | 54 |
| 24. வடிவமைப்பு | 41 | 48 | 44 |
| 25. சட்டம் | 346 | 346 | 368 |
| 26. தகவல் தொழிநுட்பம் | 198 | 198 | 199 |
| 27. முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழிநுட்பம் | 48 | 48 | 48 |
| 28. பொது முகாமைத்துவம் (விஷேடம்) | 73 | 73 | 85 |
| 29. தொடர்பாடல் கற்கைகள் | 98 | 74 | 74 |
| 30. பட்டினமும் நாடு நட்டமிடலும் | 48 | 48 | 65 |
| 31. சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும் | 33 | 33 | 34 |
| 32. ஆயுர்வேத மருத்துவம் மற்றும் அறுவைசிகிச்சை | 296 | 296 | 288 |
| 33. யூனானி மருத்துவம் மற்றும் அறுவைசிகிச்சை | 58 | 58 | 63 |
| 34. நவநாகரீக வடிவமைப்பு மற்றும் உற்பத்தி அபிவிருத்தி | 48 | 38 | 38 |
| 35. உணவு விஞ்ஞானமும் தொழிநுட்பமும் | 148 | 158 | 140 |
| 36. சித்த மருத்துவம் | 98 | 98 | 98 |
| 37. தாதியியல் | 223 | 223 | 210 |
| 38. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம் | 148 | 148 | 148 |
| 39. விவசாய தொழிநுட்பம் மற்றும் முகாமைத்துவம் | 199 | 198 | 218 |
| 40. கலை (SP) / செயற்பாட்டுக் கலை | 79 | 79 | 79 |
| 41. சுகாதார அபிவிருத்தி | 48 | 48 | 50 |
| 42. மருந்தகவியல் | 118 | 118 | 110 |
| 43. மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்கள் | 113 | 113 | 117 |
| 44. ஊடுகதிர்ப் படமெடுப்பு | 43 | 43 | 47 |

| | | | |
|---|---|---|---|
| 45. இயன் மருத்துவம் | 58 | 59 | 75 |
| 46. சுற்றாடல் பாதுகாப்பும் முகாமைத்துவமும் | 48 | 48 | 51 |
| 47. வசதிகள் முகாமைத்துவம் | 48 | 48 | 52 |
| 48. போக்குவரத்து மற்றும் சேவைகள் விநியோக ஒழுங்மைப்பு முகாமைத்துவம் | 53 | 53 | 52 |
| 49. மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிரியல் இரசாயனம் | 58 | 59 | 75 |
| 50. கைத்தொழில் புள்ளி விபரவியலும் கணிதவியல் நிதியும் | 88 | 88 | 88 |
| 51. புள்ளிவிபரவியல் மற்றும் செயற்பாட்டு ஆராய்ச்சி | 48 | 48 | 49 |
| 52. கணிப்பீடும் முகாமைத்துவமும் | 48 | 48 | 61 |
| 53. கடற்றொழில் மற்றும் கடல்சார் விஞ்ஞானம் | 58 | 58 | 61 |
| 54. இஸ்லாமியக் கற்கைகள் | 250 | 248 | 198 |
| 55. விஞ்ஞானமும் தொழிநுட்பமும் | 58 | 58 | 58 |
| 56. கணினி விஞ்ஞானமும் தொழிநுட்பமும் | 58 | 58 | 58 |
| 57. தொழில் முயற்சி மற்றும் முகாமைத்துவ கற்கைகள் | 63 | 63 | 63 |
| 58. விலங்கு விஞ்ஞானம் | 58 | 58 | 58 |
| 59. சங்கீதம் | 362 | 371 | 392 |
| 60. நடனம் | 326 | 322 | 326 |
| 61. கலையும் வடிவமைப்பும் | 33 | 28 | 28 |
| 62. நாடகமும் அரங்கியலும் | 83 | 83 | 83 |
| 63. கட்புலனும் தொழிநுட்பக்கலையும் | 41 | 48 | 48 |
| 64. ஏற்றுமதி விவசாயம் | 58 | 58 | 58 |
| 65. தேயிலை தொழிநுட்பமும் பெறுமதி சேர்ப்பும் | 58 | 58 | 58 |
| 66. கைத்தொழில் தகவல் தொழிநுட்பம் | 58 | 58 | 60 |
| 67. கனிப்பொருள் வளமும் தொழிநுட்பமும் | 59 | 58 | 59 |
| 68. வியாபார தகவல் முறைமைகள் (சிறப்பு) | 48 | 48 | 54 |
| 69. முகாமைத்துவமும் தகவல் தொழிநுட்பமும்(இ.தெ.கி.ப) | 118 | 108 | 115 |
| 70. கணிப்பீடு மற்றும் தகவல் முறைமைகள் | 98 | 98 | 78 |
| 71. உடற்றொழில் கல்வி | 48 | 38 | 48 |
| 72. விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம் | 88 | 88 | 88 |
| 73. பேச்சு மற்றும் செவிமடுத்தல் விஞ்ஞானம் | 48 | 48 | 74 |
| 74. அறபு மொழி | 198 | 198 | 145 |
| 75. கட்புலக் கலை | 96 | 96 | 95 |
| 76. விலங்கு விஞ்ஞானமும் மீன்பிடியும் | 48 | 49 | 52 |
| 77. உணவு உற்பத்தி மற்றும் தொழிநுட்ப முகாமைத்துவம் | 58 | 58 | 60 |
| 78. நீர் வளங்களும் தொழிநுட்பமும் | 58 | 58 | 58 |
| 79. பனை இனத்தாவர தொழிநுட்பமும் பெறுமதி சேர்ப்பும் | 58 | 58 | 58 |
| 80. விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் | 63 | 63 | 63 |
| 81. தகவல் தொழிநுட்பம் மற்றும் முகாமைத்துவம் | 99 | 98 | 114 |

| | | | |
|---|---|---|---|
| 82. சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம் | 119 | 118 | 139 |
| 83. விவசாய வள முகாமைத்துவம் மற்றும் தொழிநுட்பம் | 148 | 149 | 157 |
| 84. விவசாய வர்த்தக முகாமைத்துவம் | 48 | 49 | 52 |
| 85. பசுமைத் தொழிநுட்பம் | 48 | 48 | 48 |
| 86. தகவல் முறைமைகள் | 98 | 98 | 98 |
| 87. தரைத்தோற்ற வடிவமைப்பு கட்டடக்கலை | 47 | 40 | 48 |
| 88. மொழிப்பெயர்ப்பு கற்கைகள் | 71 | 71 | 72 |
| 89. மென்பொருள் பொறியியல் | 48 | 48 | 53 |
| 90. திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி கற்கைகள் | 48 | 48 | - |
| 91. செயற்றிட்ட முகாமைத்துவம் (புதிய) | 48 | 49 | - |
| 92. பொறியியல் தொழிநுட்பம் (புதிய) | 767 | - | - |
| 93. உயிர்முறைமைகள் தொழிநுட்பம் (புதிய) | 620 | - | - |
| 94. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (புதிய) | 422 | - | - |
| 95. இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தல் (TESL) | 48 | - | - |
| 96. கடல் மற்றும் நன்னீர் விஞ்ஞானம் (புதிய) | 48 | - | - |
| 97. உணவு வியாபார முகாமைத்துவம் (புதிய) | 48 | - | - |
| 98. உடற்றொழில் விஞ்ஞானம்-ICT (புதிய) | 98 | - | - |
| **பிரேரிக்கப்பட்ட மொத்தத் தொகை** | **27,603** | **25,395** | **24,540** |
| சாதாரண ஒதுக்கீட்டின் கீழ் தெரிவான மொத்த எண்ணிக்கை | **26,541** | **24,343** | **24,180** |
| குறிப்பிடப்பட்டுள்ள விஷேட ஒதுக்கீட்டின் கீழ் தெரிவாகியுள்ள மொத்த எண்ணிக்கை<br>- கல்விசார் நடவடிக்கைளுக்கு மேலதிகமாக வேறு துறைகளில் தேசிய சர்வதேச மட்டங்களில் திறமை காட்டியுள்ள மாணவர்கள்<br>- -வெளிநாட்டுத் தகைமையுள்ள மாணவர்களுக்கான அனுமதி<br>- ஆயுதப்படை பொலிஸ் சேவை மற்றும் சிறப்புப் பணிப்படையின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள பணியாளர்கள்<br>- விஷேட பாடங்களுக்கான மேலதிக உள்வாங்களின் கீழான அனுமதி<br>- கண் பார்வையற்ற மற்றும் மாற்றுத் திறனாளிகள்<br>-<br>- ஆசிரியர்களுக்கான அனுமதி | **2,809** | **1,333** | **1,020** |

| | | | |
|---|---|---|---|
| - முறையீடுகள் | | | |
| - சாதாரண மற்றும் விஷேட ஒதுக்கீட்டின் கீழ் தெரிவான மொத்த மாணவர்கள் எண்ணிக்கை | **28,950** | **25,676** | **25,200** |

# 5 கல்வி அபிவிருத்தி மற்றும் கல்வித் தராதரங்களின் பராமரிப்பு

## 5.1 நிலையான குழுக்கள்

நிலையான குழுக்கள் 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 4(2) ம் பிரிவின் திருத்தங்களின் பிரமாணங்களுக்கு அமைவாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.உயர் கல்வி தொடர்பாக குறிப்பிட்ட துறைகளில் ஆணைக்குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிப்பது மற்றும் ஆலோசனைகள் வழங்குவதே ஒவ்வொரு நிலையான குழுக்களினதும் பொறுப்பாகும். அதற்கிணங்க 2016ம் ஆண்டில் (20) நிலையான குழுக்களும் (1) ஏனைய சபையும் செயற்பட்டுக் கொண்டிருந்ததுடன் மற்றொரு நிலையான குழு ப.மா.ஆ வின் மனித வளங்கள் திணைக்களத்தால் கூட்டப்பட்டது.

ஒவ்வொரு நிலையான மேற்கொண்ட சந்திப்புகளின் எண்ணிக்கை பின்வருமாறு.

| இல | நிலையான குழுக்களின் பெயர்கள் | 2016ல் நடைபெற்ற சந்திப்புக்கள் |
|---|---|---|
| 01. | தொழில் வழிகாட்டல் தொடர்பான நிலையான குழுக்கள் | 02 |
| 02. | மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் தொடர்பான நிலையான குழுக்கள் | 06 |
| 03. | தர உறுதிப்பாடு மற்றும் அங்கீகாரம் தொடர்பான நிலையான குழுக்கள் | 06 |
| 04. | சுதேச வைத்தியம் தொடர்பான நிலையான குழுக்கள் | 05 |
| 05. | விஞ்ஞானங்கள் தொடர்பான நிலையான குழுக்கள் | 05 |
| 06. | உயர்கல்வியில் பால்நிலைப் பங்கு / சமத்துவம் தொடர்பான நிலையான குழுக்கள் | - |
| 07. | விவசாயம் விலங்கு மருத்துவம் மற்றும் விலங்கு விஞ்ஞானம் தொடர்பான நிலையான குழுக்கள் | 05 |
| 08. | பட்டப்பின் கற்கைகள்மற்றும் ஆய்வு தொடர்பான நிலையான குழுக்கள் | 03 |
| 09. | பொறியியல் மற்றும் கட்டடக்கலை தொடர்பான நிலையான குழுக்கள் | 06 |
| 10. | தொழிநுட்பத்துறை தொடர்பான நிலையான குழுக்கள் | 06 |
| 11. | மனிதநேயம் மற்றும் சமுக விஞ்ஞானங்கள் தொடர்பான நிலையான குழுக்கள் | 06 |
| 12. | கல்வி தொடர்பான நிலையான குழுக்கள் | 02 |
| 13. | இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தல் தொடர்பான நிலையான குழுக்கள் | 04 |
| 14. | முகாமைத்துவக் கற்கைகள் தொடர்பான நிலையான குழுக்கள் | 05 |
| 15. | வெளிவாரிப்பட்டங்கள் தொடர்பான நிலையான குழுக்கள் | 01 |
| 16. | கணிப்பீடு தொடர்பான நிலையான குழுக்கள் | 06 |

| | | |
|---|---|---|
| 17. | சட்டக்கற்கைகள் தொடர்பான நிலையான குழுக்கள் | 02 |
| 18. | நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞானங்கள் தொடர்பான நிலையான குழுக்கள் | 05 |
| 19. | நுண்கலை தொடர்பான நிலையான குழுக்கள் | 01 |
| 20. | ஆளணி அபிவிருத்திக்கான நிலையான குழு | - |
| | | |
| | பட்டம் வழங்கும் நிறுவனங்களின் தகைமைகளது அங்கீகாரத்திற்கான விண்ணப்பங்களை ஆய்வதற்குரிய பதவியணி அபிவிருத்தி தொடர்பான நிலையான குழுக்கள் | 04 |

**5.2 2016 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட கிளைகள் அல்லது பீடங்கள் திணைக்களங்கள் நிலையங்கள்**

2016 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட கிளைகள்

| இல | கிளைகளின் பெயர் | பல்கலைக்கழகம் /உ.க.நி |
|---|---|---|
| 1. | விவசாயப் பட்டப்பின் கற்கை நிறுவகம் | PGIA – கொழும்பு கிளை |

2016 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட பீடங்கள் (09)

| இல | பீடத்தின் பெயர் | பல்கலைக்கழகம் /உ.க.நி |
|---|---|---|
| 1. | தொழிநுட்ப பீடம் | கொழும்புப் பல்கலைக்கழகம் |
| 2. | தாதியியல் பீடம் | கொழும்புப் பல்கலைக்கழகம் |
| 3. | வர்த்தக பீடம் | மொறட்டுவ பல்கலைக்கழகம் |
| 4. | தொழிநுட்ப பீடம் | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |
| 5. | தொழிநுட்ப பீடம் | றுஹுணு பல்கலைக்கழகம் |
| 6. | தொழிநுட்ப பீடம் | இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் |
| 7. | தொழிநுட்ப பீடம் | இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் |
| 8. | தொழிநுட்ப பீடம் | இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் |
| 9. | மருத்துவ பீடம் | இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் |

* *2015 ஆம் ஆண்டு ஏற்றுக் கொள்ளப்பட்டு 2016 ஆம் ஆண்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது*

**2016 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட திணைக்களங்கள் 2016 (34)**

| இல | திணைக்களத்தின் பெயர் | பல்கலைக்கழகம் / உயர்கல்வி நிறுவகம் |
|---|---|---|
| 1. | மருத்துவக் கல்வித் திணைக்களம் | கொழும்பு பல்கலைக்கழகம் |
| 2. | மருத்துவ மனிதநேய திணைக்களம் | கொழும்பு பல்கலைக்கழகம் |
| 3. | பௌத்த கற்கைகள் திணைக்களம் | கொழும்பு பல்கலைக்கழகம் |
| 4. | இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் திணைக்களம் | கொழும்பு பல்கலைக்கழகம் |
| 5. | கருவிமயமாக்கல் மற்றும் தன்னியக்கத் தொழிநுட்பத் திணைக்களம் | கொழும்பு பல்கலைக்கழகம் |
| 6. | சுற்றாடல் தொழிநுட்பத் திணைக்களம் | கொழும்பு பல்கலைக்கழகம் |
| 7. | விவசாயத் தொழிநுட்பத் திணைக்களம் | கொழும்பு பல்கலைக்கழகம் |

| | | |
|---|---|---|
| 8. | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத் திணைக்களம் | கொழும்பு பல்கலைக்கழகம் |
| 9. | அடிப்படைத் தாதியியல் திணைக்களம் | கொழும்பு பல்கலைக்கழகம் |
| 10. | சிகிச்சைத் தாதியியல் திணைக்களம் | கொழும்பு பல்கலைக்கழகம் |
| 11. | தாதியியலுக்கான அடிப்படை விஞ்ஞானம் / சமூக விஞ்ஞான திணைக்களம் | கொழும்பு பல்கலைக்கழகம் |
| 12. | அடிப்படை விஞ்ஞானங்களுக்கான திணைக்களம் | பேராதெனிய பல்கலைக்கழகம் |
| 13. | குற்றவியல் மற்றும் குற்றவியல் நீதி திணைக்களம் | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் |
| 14. | மொழித் திணைக்களம் | மொரடுவ பல்கலைக்கழகம் |
| 15. | தீர்மான விஞ்ஞானத் திணைக்களம் | மொறடுவ பல்கலைக்கழகம் |
| 16. | உற்பத்திப் பொருளியல் மற்றும் முகாமைத்துவத் திணைக்களம் | மொறடுவ பல்கலைக்கழகம் |
| 17. | முகாமைத்துவத் தொழிநுட்பத் திணைக்களம் | மொறடுவ பல்கலைக்கழகம் |
| 18. | உயிரியல் முறைத் திணைக்களம் | யாழ்ப்பாண பல்கலைக்கழகம் |
| 19. | பொறியியல் தொழிநுட்ப திணைக்களம் | யாழ்ப்பாண பல்கலைக்கழகம் |
| 20. | உள்ளக துறைக் கற்கைத் திணைக்களம் | யாழ்ப்பாண பல்கலைக்கழகம் |
| 21. | பொறியியல் தொழிநுட்ப திணைக்களம் | றுஹுணு பல்கலைக்கழகம் |
| 22. | உயிரியல் முறைத் தொழிநுட்ப திணைக்களம் | றுஹுணு பல்கலைக்கழகம் |
| 23. | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத் திணைக்களம் | றுஹுணு பல்கலைக்கழகம் |
| 24. | பல் துறைக் கற்கைகள் திணைக்களம் | றுஹுணு பல்கலைக்கழகம் |
| 25. | மயக்க மருந்தியல் திணைக்களம் | றுஹுணு பல்கலைக்கழகம் |
| 26. | மெய்யியல் மற்றும் பெறுமானக் கற்கைகள் திணைக்களம் | கிழக்குப் பல்கலைக்கழகம் இலங்கை |
| 27. | உயிரியல் முறைத் தொழிநுட்ப திணைக்களம் | கிழக்குப் பல்கலைக்கழகம் இலங்கை |
| 28. | பல்லொழுக்க கற்கைகள் திணைக்களம் | கிழக்குப் பல்கலைக்கழகம் இலங்கை |
| 29. | பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் | இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகம் |
| 30. | உயிரியல் பொறியியல் தொழிநுட்ப திணைக்களம் | இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் |
| 31. | பொறியியல் தொழிநுட்ப திணைக்களம் | இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் |
| 32. | பொறியியல் தொழிநுட்ப திணைக்களம் | இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் |
| 33. | உயிரியல் முறைத் தொழிநுட்ப திணைக்களம் | இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் |
| 34. | நனோ விஞ்ஞானத் தொழிநுட்பத் திணைக்களம் | இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் |

2016 இல் அங்கீகரிக்கப்பட்ட நிலையங்கள் (03)

| இல | நிலையத்தின் பெயர் | பல்கலைக்கழகம்/உ.க.நி |
|---|---|---|
| 1. | பால் நிலைப்பங்கு அல்லது சமத்துவத்திற்கான நிலையம் | பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு |
| 2. | வாய்ப் புற்று நோய் ஆய்வுக்கான நிலையம் | பேராதெனிய பல்கலைக்கழகம் |
| 3. | உணவுத் தொழிநுட்ப ஆய்வு மற்றும் பயிற்சிக்கான நிலையம் | இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் |

**5.3** 2016 ஆம் ஆண்டில் அங்கிகரிக்கப்பட்ட இளமாணிப்பட்ட மற்றும் பட்டப்பின் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்

2016 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட இளமாணிப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

| இல | பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் | கற்கை நெறிகள் |
|---|---|---|
| 1. | பௌத்த கற்கைகளில் கலைமாணி (சிறப்பு) கொ.ப.க. | கலை |
| 2. | தொழிற் கல்வி இளமாணி, ம.மே.நி | |
| 3. | வியாபாரப் பகுப்பாய்வில் வியாபார விஞ்ஞான இளமாணி (சிறப்பு) மொரட்டுவ | வியாபார விஞ்ஞானம் |
| 4. | நிதிப் பகுப்பாய்வியல் வியாபார விஞ்ஞான இளமாணி (சிறப்பு) மொறட்டுவ | |
| 5. | வியாபாரப் செயற்பாட்டு முகாமைத்துவத்தில் வியாபார விஞ்ஞான இளமாணி (சிறப்பு) மொறட்டுவ | |
| 6. | நிதியியல் பொறியியலில் வியாபார முகாமைத்துவ இளமாணிப்பட்டம் (சிறப்பு) -களனி | முகாமைத்துவம் |
| 7. | காப்புறுதியில் வியாபார முகாமைத்துவ இளமாணிப்பட்டம் (சிறப்பு) -களனி | |
| 8. | வங்கியியலில் வியாபார முகாமைத்துவ இளமாணிப்பட்டம் (சிறப்பு) -களனி | |
| 9. | கணணி விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணிப்பட்டம் (சிறப்பு) -களனி | கணணி விஞ்ஞானம் |
| 10. | கருவிமயமாக்கல் மற்றும் தன்னியக்கத் தொழிநுட்பத்தில் பொறியியல் தொழிநுட்ப இளமாணி - கொழும்பு | பொறியியல் தொழிநட்பம் |
| 11. | பொறியியல் தொழிநுட்ப இளமானி- ஸ்ரீ ஜயவர்த்தனபுர | |
| 12. | பொறியியல் தொழிநுட்ப இளமாணி, களனி | |
| 13. | பொறியியல் தொழிநுட்ப இளமாணி– யாழ்ப்பாணம் | |
| 14. | பொறியியல் தொழிநுட்ப இளமாணி றுஹுணு | |
| 15. | பொறியியல் தொழிநுட்ப இளமாணி, ரஜரட்ட ப.க | |
| 16. | பொறியியல் தொழிநுட்ப இளமாணி, தெ.கி.ப.க. | |
| 17. | நனோ விஞ்ஞானத் தொழிநுட்பத்தில்பொறியியல் தொழிநுட்ப இளமாணி–வயம்ப | |
| 18. | பொறியியல் தொழிநுட்ப இளமாணி–வயம்ப | |
| 19. | விவசாயத்தில் பொறியியல் தொழிநுட்ப இளமாணி –ஊவா | |
| 20. | சுற்றாடல் தொழிநுட்பத்தில் உயிரியல் முறைத் தொழிநுட்ப இளமாணி – கொழும்பு | உயிரியல் முறைத் தொழிநுட்பம் |
| 21. | விவசாயத்தில்உயிரியல் முறைத் தொழிநுட்ப இளமாணி–கொழும்பு | |
| 22. | உயிரியல் முறைத் தொழிநுட்ப இளமாணி– ஸ்ரீ. ஜப | |
| 23. | வர்த்தக பசுமைப் பண்ணையில் உயிரியல் முறைத் தொழிநுட்ப இளமாணி–யாழ்ப்பாணம் | |
| 24. | உணவுத் தயாரிப்பில் உயிரியல் முறைத் தொழிநுட்ப இளமாணி–யாழ்ப்பாணம் | |
| 25. | விவசாயத் தொழிநுட்பம் மற்றும் தொழில் முயற்சியாண்மையில் உயிரியல் முறைத் தொழிநுட்ப இளமாணி –கி.ப.க. | |
| 26. | விவசாயத் தொழிநுட்பத்தில் உயிரியல் முறைத் தொழிநுட்ப இளமாணி – இ.தெ.கி.ப.க. | |
| 27. | உயிரியல் முறைத் தொழிநுட்ப இளமாணி – றுஹுணு | |
| 28. | உயிரியல் முறைத் தொழிநுட்ப இளமாணி– ச.ப.க. | |

| | | |
|---|---|---|
| 29. | உயிரியல் முறைத் தொழிநுட்ப இளமாணி– வ.ப.க. | |
| 30. | உயிரியல் முறைத் தொழிநுட்ப இளமாணி– ஊவா.வெ | |
| 31. | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப இளமாணி -ஸ்ரீஜப | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம் |
| 32. | கணணி வலையமைப்பு தொழிநுட்பத்தில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப இளமாணி–களனி | |
| 33. | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப இளமாணி–யாழ்ப்பாணம் | |
| 34. | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப இளமாணி –றுஹுணு | |
| 35. | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப இளமாணி -இ.தெ.கி.ப | |
| 36. | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப இளமாணி –ரஜரட்ட | |
| 37. | பௌதீகம் மற்றும் மின்னியலில் விஞ்ஞான இளமாணி-களனி | பௌதீக விஞ்ஞானம் - த.தொ.தொ |
| 38. | பௌதீகம் மற்றும் த.தொ.தொ இல் விஞ்ஞான இளமாணி-களனி | |

**2016 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் நிகழ்ச்சித்திட்டங்கள்(15)**

| இல | கற்கை நெறியின் பெயர் | பல்கலைக்கழகம்/உ.க.நி |
|---|---|---|
| 1. | சுகாதார தகவலியல் மருத்துவம் மற்றும் சபைச் சான்றிதழ் கலாநிதி | ம.ப.பி.நி –கொழும்பு பல்கலைக்கழகம் |
| 2. | வலி நிவாரணி மருத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா ப.பி.டி. (வலி நிவாரணி மருத்துவம் ) | |
| 3. | நூலகம் மற்றும் விலங்கு விஞ்ஞானத்தில் பட்டப் பின் சான்றிதழ் மற்றும் டிப்போமா பாடநெறி | கொழும்பு பல்கலைக்கழகம் |
| 4. | தகவல் தொழிநுட்பத்தில் விஞ்ஞான முதுமானி (எம்.எஸ்.சி) (த.தொ) | பேராதெனிய பல்கலைக்கழகம் |
| 5. | வியாபார முகாமைத்துவத்தில் நிறைவேற்று முதுமாணி | ஸ்ரீ ஜயவர்த்தன புர பல்கலைக்கழகம் |
| 6. | தொழில் சார் கணக்கியலில் முதுமாணி(எம்.பி.ஏ.சி.சி) | ஸ்ரீ ஜயவர்த்தன புர பல்கலைக்கழகம் |
| 7. | வியாபார முகாமைத்துவ கலாநிதி (வி.மு.க.) | களனி பல்கலைக்கழகம் |
| 8. | பொது உறவுகள் மற்றும் ஊடக முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா | களனி பல்கலைக்கழகம் |
| 9. | வியாபார நிர்வாக முதுமாணி (எம்.பீ.ஏ) | இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் |
| 10. | அளவீட்டு விஞ்ஞானத்தில் விஞ்ஞான முதுமாணி | இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் |
| 11. | வியாபார முகாமைத்துவ முதுமாணிப்பட்டம் | மனித வள மேம்பாட்டு நிறுவகம் |
| 12. | மனித வள முகாமைத்துவத்தில் முதுமாணிப்பட்டம் | மனித வள மேம்பாட்டு நிறுவகம் |
| 13. | அனர்த்த ஆய்வு முகாமைத்துவம் மற்றும் மட்டுப்படுத்தலில் விஞ்ஞான | மனித வள மேம்பாட்டு நிறுவகம் |

| | | |
|---|---|---|
| | முதுமாணி | |
| 14. | பூகோளத் தகவலியலில் விஞ்ஞான முதுமாணி | மனித வள மேம்பாட்டு நிறுவகம் |
| 15. | சேவை முகாமைத்துவத்தில் விஞ்ஞான முதுமாணி | மனித வள மேம்பாட்டு நிறுவகம் |

## 5.4 2016 இல் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த உயர் கல்வி தொடர்பாக நடாத்தப்பட்ட பயிற்சிப் பட்டறைகளும் கலந்துரையாடல்களும்

1. ப.மா.ஆ வின் தர உறுதிப்பாடு மற்றும் அங்கீகாரத்திற்கான பேரவையானது அரச பல்கலைக்கழகங்களின் உள்ளக தர உறுதிப்பாட்டு அலகின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக பயிற்சிப் பட்டறை ஒன்று 2016 மார்ச் 30 ஆம் திகதி இலங்கை மன்றக்கல்லூரியில் நடத்தப்பட்டது.

2. 'பால்நிலைப் பங்கு/சமத்துவம் தொடர்பான ஆலோசனை உரையாடல்' தொடர்பான பயற்சிப் பட்டறை ஒன்று 2016 ஏப்ரல் 21 ம் திகதி நடைபெற்றது.

3. 'பால்நிலைப் பங்கு /சமத்துவம் தொடர்பான பயிற்சியாளர்களுக்கான பயிற்சி' தொடர்பான பயிறிசிப் பட்டறை ஒன்று 2016 ஏப்ரல் 22 முதல் 2016 ஏப்ரல் 28 வரை நடைபெற்றது.

4. பகிடிவதை மற்றும் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையான வன்முறைகளுக்கான ஒன்லைன் முறைப்பாடு மற்றும் தீர்வுப் பொறிமறைகள் தொடர்பான பயிற்சிப் பட்டறை ஒன்று 2016 ஏப்ரல் 22 முதல் 2016 ஆகஸ்டில் நடைபெற்றது

5. ப.மா.ஆ வின் தர உறுதிப்பாடு மற்றும் அங்கீகாரத்திற்கான பேரவையானது அரச பல்கலைக்கழகங்களின் உள்ளக தர உறுதிப்பாட்டு அலகின் கடமைகள் தொடர்பான பயிறிசிப் பட்டறை ஒன்று கட்டுநாயக்க டாமறின்ட் ட்றீ ஹோட்டலில் 2016 மே 18 மற்றும் 19 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

6. 'இலங்கை தரச் சட்டகம்' தொடர்பான பயிற்சிப் பட்டறை ஒன்று 2016 ஜுன் மாதம் 2 ம் திகதி நடைபெற்றது.

7. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்ட மீளாய்வு கையேடு தொடர்பான நிகழ்ச்சித்திட்ட மீளாய்வாளர்கள் பயிற்சியானது மவுன்ட் லெவினியா பேர்ஜாயா ஹோட்டலில் 2016 ஜுன் மாதம் 14 மற்றும் 15 அம் திகதிகளில் நடைபெற்றது.

8. இலங்கைப் பல்கலைக்கழக முறைமையில் உள்ள விஞ்ஞான பீடங்களுக்கான 'இலங்கை தரச் சட்டகம்' தொடர்பான பயிற்சிப் பட்டறை ஒன்று 2016 ஜுன் மாதம் 24 ம் திகதி நடைபெற்றது.

9. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட நிறுவன மீளாய்வுக் கையேட்டின்படி நிறுவன மீளாய்வாளர்களின் 2ம் வட்டத்துக்கான வளவாளர் அணியினர் 2016 ஜுன்

மாதம் 28 ம் திகதி மவுன்ட் லெவினியா பேர்ஜாயா ஹோட்டலில் நடைபெற்ற பயிற்சிப் பட்டறையில் பயிற்சியளிக்கப்பட்டனர்.

10. பகிடிவதை மற்றும் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையான வன்முறைகளுக்கான ஒன்லைன் முறைப்பாடு மற்றும் திர்வுப் பொறிமறைகள் தொடர்பான பயிற்சிப் பட்டறை ஒன்று 2016 ஆகஸ்டில் நடைபெற்றது.

11. ‘இறுதி எம்.பீ.பீ.எஸ் பரிட்சையில் சிகிச்சை உள்ளடக்கம்’ தொடர்பான பயிற்சிப் பட்டறை ஒன்று 2016 டிசம்பரில்15 ஆம் திகதி நடைபெற்றது.

12. ‘உயர் பட்ட மேற்பார்வை நடைமுறையில் செயல் விளைவுள்ள ஆய்வு’ தொடர்பான பயிற்சிப் பட்டறை ஒன்று 2016 நவம்பர்25 ஆம் திகதி தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடைபெற்றது.

## 5.5 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான அங்கீகாரம்

விமர்சனைக்ககுரிய ஆண்டு காலப்பகுதியில் ப.மா.ஆ வின் கல்வி விவகாரங்கள் திணைக்களத்தால் இலங்கை மாணவர்களால் அவர்கள் கல்வி அடைவைப் பெற்றஇடத்திலிருந்து 1000 க்கும் அதிகமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான அங்கீகாரத்துக்கான வேண்டுகோள்களின் மீது கவனம் செலுத்தியது.

## 5.6 வெளிவாரிப்பட்டங்கள் மற்றும் விரிவுபடுத்தற் கற்கை றெிகளை வழங்குவதற்கான வழிகாட்டல்கள் மற்றும் கொள்கைச் சட்டகம் தொடர்பான ப.மா.ஆ சுற்றறிக்கை இல 932 க்கான சீர்திருத்தம்

எந்தவொரு வெளிவாரிப்பட்டங்கள்/ விரிவுபடுத்தற் கற்கை நெறிகளது வெளிவாரி இடத்துக்காக அனுமதிக்கப்படக்கூடிய மாணவர்களது எண்ணிக்கை தொடர்பாக ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது.அதன்படி கொள்கைச் சட்டகத்தின் 1.6 உட்பிரிவை மாற்றுவதற்கு ஆலோசிக்கப்பட்டது. ஒரு வெளிவாரிப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்காக சேர்த்துக்கொள்ளப்படும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பான தற்போதைய பிரமாணமானது அதே கற்கை நெறிக்காக அனுமதிக்கப்பட்ட உள்வாரி மாணவர்களின் எண்ணிக்கை இரு மடங்காக அதிகரிக்காமல் இருப்பதாகும்

கொள்கைச் சட்டகத்தின் 1.6 உட்பிரிவுக்கு உத்தேசிக்கப்பட்ட மாற்றம் பின்வருமாறு:

- ப.மா.ஆ விதிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்யப்படும் மாணவர் எண்ணிக்கை தொடர்பாக ஒவ்வொரு பல்கலைக்கழகம்/ உயர் கல்வி நிறுவனங்களில் உள்ள செனட்டின் அனுமதிக் குழுவே பொறுப்பாக இருக்கும். ஒரு வெளிவாரிப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்காக சேர்த்துக்கொள்ளப்படும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கையானது அதே கற்கை நெறிக்காக அனுமதிக்கப்பட்ட நியம உள்வாரி மாணவர்களின் எண்ணிக்கையை விட அதிகரிக்க படக்கூடாது.

- எவ்வாறெனினும், பல்கலைக்கழகம் / உயர் கல்வி நிறுவனங்கள்/நிறுவனங்கள் புதுமைப்படுதத்லுக்காக மட்டுமே எதிர் காலத்தில் தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் உரிய பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் அறிமுகப்படுத்தவதற்கு / மேம்படுத்துவதற்கு உரிய முன்னெடுப்புக்களில் ஈடுபட வேண்டும்

- எந்தவொரு சந்தர்ப்பத்திலும் திணைக்களம் அல்லது பீடங்களின் வெளிவாரிப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்காக பதிவுசெய்யப்படும் மாணவர் தொகையானது அதே திணைக்களம் அல்லது பீடங்களின் கற்கை நெறிக்காக பதிவுசெய்யப்பட்ட நியம உள்வாரி மாணவர்களின் எண்ணிக்கையை விட அதிகரிக்க படக்கூடாது.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவானது, அதனது 2016 பெப்ரவரி 26 ம்திகதி நடைபெற்ற 935 வது கூட்டத்தில் பல்கலைக்கழகம் / உயர் கல்வி நிறுவனங்கள்/நிறுவனங்களால் வழங்கப்படும் வெளி வாரிப்பட்டங்கள் மற்றும் விரிவுபடுத்தற் கற்கை நெறிகளை வழங்குவதற்கான வழிகாட்டல்கள் மற்றும் கொள்கைச் சட்டகம் தொடர்பான ப.மா.ஆவின் 2010 ஒக்டோபர் 15 ம் திகதிய சுற்றறிக்கை இல 932 க்கு கண்டிப்பாக இணங்குவதற்காக உபவேந்தர்கள் வளாகத் தலைவர்கள் மற்றும் பணிப்பாளர்கள் ஆகியோருக்கு அறிவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

**2014 கல்வியாண்டிற்கான வெளிவாரிப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கான மாணவர் பதிவு-களனிப் பல்கலைக்கழகம்**

களனிப் பல்கலைக்கழகத்திலிருந்து வழங்கப்பட்ட தகவல்களுக்கமைய வெளிவாரிப்பட்ட நிகழ்ச்சித்திட்டதிற்காக விண்ணப்பித்திருந்த மாணவர்களின் எண்னிக்கையும் அனுமதிக்கபப்ட்ட மாணவர்களின் எண்ணிக்கையும் பின்வருமாறு

| கற்கை நிகழ்ச்சித்திட்டம் | பல்கலைக்கழக வேண்டுகோள் | ப.மா.ஆ அனுமதி |
|---|---|---|
| கலைமாணி (பொது) பட்டம் | 2,432 | அனுமதிக்கப்பட்டது. |
| வியாபார முகாமைத்துவ இளமாணி (பொது) பட்டம் | 716 | 688 மாணவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டது |
| வர்த்தக இளமாணி (விஷேட) பட்டம்<br>வர்த்தக இளமாணி (பொது) பட்டம் | 390 | அனுமதிக்கப்பட்டது. |
| விஞ்ஞான இளமாணி பட்டம் | 522 | அனுமதிக்கப்பட்டது. |
| **மொத்தம்** | **4,060** | |

**5.7 தொழிநுட்ப பாட அறிமுகம்**

கல்வியமைச்சு தேசிய கல்வி நிறுவனத்துடன் இணைந்து 2013ம் ஆண்டுப் பகுதியில் 2015ஆம் ஆண்டில் நடைபெறவிருக்கும் க.பொ.த உ/த பரீட்சைகாக ஒரு தொழில்நுட்ப ரீதியான பாடத்துறையினை அறிமுகப்படுத்தியது. ப.மா. ஆணைக்குழுவானது இவ்வண்ணமே தொழில்நுட்ப விஞ்ஞான பாடநெறிகளுக்கான அனுமதிக்காக அறிமுகப்படுத்தப்படும் தொழில்நுட்ப ரீதியான பாடங்களை அனுமதித்தது. அத்துடன் சார்ந்த பீடங்களில் தொழில் நுட்ப பிரிவுகளை ஸ்தாபிப்பதற்கு தேவைப்படும் ஏனைய ஏற்பாடுகளின் நிமித்தம் உட்கட்டமைப்பு வசதிகளை 2016ம் ஆண்டு பகுதியில் வழங்கியது. 2016ம் ஆண்டு பகுதியில் முதலாம் தொகுதி மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

**5.8 பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் உள்ளக தர உறுதிப்பாட்டு அலகுகளை நிறுவுவதன் ஊடாக உள்ளக தர உறுதிப்பாட்டு முறைமையை வலுப்படுத்துதல்**

உயர் கல்வி முறைமைகளின் தரத்தை உயர்த்துவதற்கும் பேணுவற்கு கல்வி மற்றும் முகாமைத்துவ செயற்பாட்டின் தரஉறுதிப்பாடு மற்றும் அங்கீகாரத்திற்கான வினைத்திறனான ஒன்று அவசியமாகும்

2005 செப்டம்பரில் தாபிக்கப்பட்ட ப.மா.ஆ வின் **தரஉறுதிப்பாடு மற்றும் அங்கீகாரத்திற்கான பேரவையானது (த.உ.அ.பே)** அரச பல்கலைக்கழகங்களில் கல்வித் தரங்களைப் பேணுதற்கு பொறுப்பான அமைப்பாகும்.

இதனுடைய நோக்கமானது ஒரு வலுவான தர உறுதிப்பாட்டின் ஆதரவுடன் உயர் கல்வியில் சிறப்பை அடையும் அதே வேளை இதன் பணிக் கூறானது,இலங்கை உயர் கல்வி நிறுவனங்களினது வினைத்திறனான பெறுபேறு மற்றும் தொடர்ச்சியான முன்னேற்றம் என்பவற்றினூடாக தரத்தை உறுதி செய்தல் என்பதோடு அதன் மூலம் சர்வதேச அங்கீகாரம் பெற்ற மதிப்பீட்டுப் பொறிமுறைகளுக்கு இணங்கும் வகையில் பல்கலைக்கழக பங்குதாரர் சமூகத்தின் நம்பிக்கையைப் பெறுதல்

அரச உயர் கல்வி நிறுவனங்களின் திணைக்களங்கள், பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பீடங்கள் ஊடாக பொறுப்பெடுக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் பிரதான தர உறுதிப்பாட்டு செயற்பாடுகளை கூட இது துல்லியமாக வெளிக்கொணருகின்றது. இம் முயற்சியில் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களின் தொடர்ச்சியான சர்வதேச சிறப்புத் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக மேற்பார்வை மற்றம் கண்காணிப்பு ஆகியவை, நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நிறுவனங்களின் பேண்தகைமயை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான பகுதிகளாகும்.

ப.மா.ஆ / உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் தரஉறுதிப்பாடு மற்றும் அங்கீகாரத்திற்கான பேரவை மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்பவற்றின் கீழ், தர உறுதிப்பாட்டிற்கான நிலையான குழு,உப வேந்தர்கள் மற்றும் பணிப்பாளர்கள் குழு ஆகியோரின் கீழ்,தர உறுதிப்பாட்டிற்கான குழுவிலிருந்தான ஆதரவுடன் அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களில் ஒரு தர உறுதிப்பாட்டு முறையைத் தாபிப்பதன் ஊடாக குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடையப்பட்டது.

தரஉறுதிப்பாடு மற்றும் அங்கீகாரத்திற்கான பேரவையானது ப.மா.ஆ பிரதான கட்டடத்தில் 2016 ஜுன் வரை செயற்பட்டதுடன் தற்போது இது ப.மா.ஆ பிரதான கட்டடத்துக்கு அருகில் உள்ள புதிய அலுவலகத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.இந்த அலுவலகம் உத்தியோகபூர்வமாகவும் வைபவ ரீதியாகவும் 2016 ஒக்டோபர் 20 ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.தரஉறுதிப்பாடு மற்றும் அங்கீகாரத்திற்கான பேரவையின் பதவியணியானது தரஉறுதிப்பாடு மற்றும் அங்கீகாரத்திற்கான பேரவைப் பணிப்பாளர், உதவிச் செயலாளர்,இரண்டு கணணிப் பிரயோக உதவியாளர்கள் (CAA) மற்றும் ஒரு பணியாள் ஆகியோரைக் கொண்டுள்ளது. இதனுடைய பணிப்பாளராக பேராசிரியர் தீப்தி சி.பண்டார 2016 ஜனவரி முதலாம் திகதி முதல் நியமிக்கப்பட்டார்.

தர உறுதிப்பாடானது ப.மா.ஆ வின் தொடர்ந்தேர்க்சையானதும் நடைமுறையிலுள்ள ஓர் முறையாகவும் கருதப்படக்கூடிய பிரதான சட்டரீதியான கடமைகளுள் ஒன்றாகும். எனவே தர உறுதிப்பாடு மற்றும் அங்கீகாரம் தொடர்பான நிலையான குழுவின் பரிந்துரைகளுடன் ப.மா.ஆ குழுவானது இலங்கையில் உள்ள சகல பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களும் ஒரு உயர் தர செயற்பாட்டுத் தரத்தில் தமது உயர் தர உறுதிப்பாட்டு முறைமையை உருவாக்குவதை இலக்காகக் கொண்டு 2015 மே மாதம் 5 ஆம் திகதி 04/05 என்ற சுற்றிக்கையை வெளியிட்டது.பல்கலைக்கழக பேரவை மற்றும் அனைத்து

உயர்கல்வி நிறுவனங்களும் 2016 இல் ஒரு பணிப்பாளரைத் -(IQA) தலைமையாகக் கொண்ட ' உள்ளக தர உறுதிப்பாட்டு அலகு' என்ற பெயரில் மத்திய அமைப்பை நியமித்தது. 'உள்ளக தர உறுதிப்பாட்டு அலகானது உரிய அரச பல்கலைக்கழங்களில் உள்ள எல்லா உள்ளக தர உறுதிப்பாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் செயற்பாடுகளையும் திட்டமிடல்,ஒழுங்கமைத்தல்,முன்னேற்றுதல், வசதியளித்தல் அத்துடன் மேற்பார்வை செய்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டதோடு தீர்மானம் எடுத்தலின் வினைத்திறனான அமுலாக்கம் மற்றும் தரம் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்காக தரஉறுதிப்பாடு மற்றும் அங்கீகாரத்திற்கான பேரவையுடன் இணைந்து செயற்பட்டது.

தரஉறுதிப்பாடு மற்றும் அங்கீகாரம் தொடர்பான நிலையான குழுவானது 26 உறுப்பினர்களுடன் ப.மா.ஆ வில் தரஉறுதிப்பாடு மற்றும் அங்கீகாரத்திற்கான பேரவைக்கு ஆதரவு வழங்குவதுடன் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து செயற்பாடுகளை ஒருங்கிணைக்கிறது.

## 5.9 இலங்கை தரச் சட்டகத்தின் இற்றைப்படுத்தப்பட்ட பதிப்பு (SLQF)

இலங்கைத் தரச் சட்டகமானது, ஒரு தரத்தை ஈட்டிக்கொள்பவரால் ஈட்டப்பட வேண்டிய மிகக் குறைந்த அளவிலான புள்ளிகளின் எண்ணிக்கையினால் தீர்மானிக்கப்படும் ஒவ்வொரு தரத்துக்குமாக வேண்டப்படும் குறைந்த மட்ட கற்றல் விளைவுகளாக பாட நெறிகளை வடிவமைத்தலில் அரச மற்றும் அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவனங்களுக்கு பயன்படும் ஒரு முறையாகும். இலங்கைத் தரச்சட்டகமானது,இலங்கையில் உள்ள பல்கலைக்ககழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களால் வழங்கப்படும் உயர் கல்வித்தகைமையை வலுப்படுத்துவதன் ஊடாக தனது பங்களிப்பை வழங்கும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது , 2015 செப்டம்பர் மாதம் 17 ம் திகதி நடைபெற்ற அதனது 925 ஆவது கூட்டத்தில்,தரஉறுதிப்பாடு மற்றும் அங்கீகாரம் தொடர்பான நிலையான குழுவினால் பரிந்துரைக்கப்பட்டு HETC செயற்றிட்டத்தால் பிரேரிக்கப்பட்ட இலங்கை தரச் சட்டகத்தின் இற்றைப்படுத்தப்பட்ட பதிப்பை அங்கீகரித்தது.( முதற் பதிப்பு 2012 ஜூனிலும்,இரண்டாம் பதிப்பு 2012 ஒக்டோபரிலும், மூன்றாம் ' பதிப்பு 2013 ஜனவரியிலும்).இது அச்சிடப்பட்டதுடன் இலங்கை தரச் சட்டகத்தின் இற்றைப்படுத்தப்பட்ட பதிப்பானது(SLQF)தரஉறுதிப்பாடு மற்றும் அங்கீகாரத்திற்கான பேரவையின் இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது.

**இலங்கை தரச் சட்டக படமிடல்**

இலங்கை தரச் சட்டகம் மற்றும் அதன் அமுலாக்கலில் கற்கை நிகழ்ச்சித்திட்டங்களின் பொருத்தமான படமிடலை உறதிப்படுத்துவதற்காக ஒரு பொறிமுறையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு, பல்கலைக்கழகங்களால் அனுப்பப்பட்டதற்கேற்ப ( இணைப்பு 12) இலங்கை தரச் சட்டகத்தின் இற்றைப்படுத்திய பதிப்புக்குள் பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் அமையும் வகையில் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

**இலங்கை தரச் சட்டகம் தொடர்பான தெளிவுபடுத்தல்கள்**

இலங்கை தரச் சட்டக ஆவணத்துடன் இணங்காத, பல்கலைக்கழகங்கள் மற்றும் கற்கை நிகழ்ச்சித்திட்டங்களால் பயன்படுத்தப்பட்ட நியமிப்புகள் மற்றும் தகுதியாளர்கள் தொடர்பான கருத்துக்கள் 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5 ம் திகதி நடைபெற்ற 79 வது தர உறுதிப்பாடு தொடர்பான நிலையான குழுக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.அதன்படி பின்வரும் பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டன.

**இலங்கை தரச் சட்டக அமுலாக்கம் தொடர்பான பரிந்துரைகள்**

- இணையத்தளத்தில் குறிப்பிடப்படாத ஒரு பரந்த கற்கைப்பரப்பின் நியமிப்பினால் இலங்கை தரச் சட்டக மட்டங்கள் 5,6 அல்லது 10 திட்டங்களின் ஒரு புதிய நிகழ்ச்சித்திட்டம் பெயரிடப்படவேண்டுமாயின் அதற்கு ப.மா.ஆ வின் தர உறுதிப்பாடு மற்றும் அங்கீகாரப் பேரவையின் முன் அனுமதி தேவை.

- இலங்கை தரச் சட்டக மட்ட நியமிப்பியானது ஒரு குறிப்பிட்ட கற்கைப் பரப்புக்கு மட்டுப்படுத்தப்பட்டிருத்தல் மற்றும் குறிப்பட்ட தரச் சட்டக மட்டமானது தகைமைப் பெயரில் ஒரு தகைமையாளரை அனுமதிக்காது விடின், நியமிப்பினால் தீர்மானிக்கப்பட்டதன் படி எந்தவொரு நியமிப்பையும் வழங்கப்படும் பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் பீடத்தைப் பொருட்படுத்தாது நியமிப்பை பயன்படுத்தப்பட முடியும்.

**பாட அளவுகோள் கூற்றுக்கள்**

பாட அளவுகோல் கூற்றுப் பிரமாண அபிவிருத்தி தயாரிப்புக்கான தெரிவுக் குழுவுக்கான பிரமாண வடிவமைப்பானது த.உ..அ பேரவையால் வடிவமைக்கப்பட்டதுடன் ஆணைக்குழுவின் அங்கீகாரமும் பெறப்பட்டது.

பல்கலைக்கழகங்களிலிருந்து த.உ...அ பேரவையால் பெறப்பட்ட தகவலுக்கமைய, அடுத்த தசாப்தத்திற்காக பல்கலைக்கழகங்களின் வேண்டுகோள்களுக்கமைய ஏற்கெனவே காணப்படும் 45 பாட அளவுகோல் திருத்தப்படவேண்டி இருந்ததாகவும் 76 புதியபாட அளவுகோல்கள் விருத்தி செய்யப்படவிருந்ததாகவும் அறிய முடிந்தது.(இணைப்பு 15 மற்றும் இணைப்பு 16) 100 பாட அளவுகோல்களை விருத்தி செய்வது கடினமாகவும் முகாமைத்துவம் செய்ய முடியாததாகவும் இருந்தது. எனவே நிலையான குழு உறுப்பினர்கள் மற்றும் AHEAD செயற்றிட்டத்தின் ஆலோசனைக்கமைய நிர்வகிக்கக்கூடிய எண்ணிக்கைக்கு பாட அளவுகோல்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கு தீர்மானிக்கப்பபட்டது.வேண்டுகோள் அடிப்படையில்,பாட அளவுகோல் போன்று பரந்த பாடப்பரப்பை உள்ளடக்கிய ஐக்கிய இராச்சியத்தின் தர உறுதிப்பாடு மற்றும் அங்கீகார பாட அளவுகோல் வழிமுறைகளைக் கற்று, தர உறுதிப்பாடு மற்றும் அங்கீகாரப் பேரவையானது ஓர் பணிச் சட்டகத்தை உருவாக்கியது.

## 5.10. 2011 மற்றும் 2015 காலப்பகுதிக்குள் பட்டதாரி வெளியீடு (பல்கலைக்கழக சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள்)

2015 இல் மொத்த பட்டதாரி வெளியீடானது 33,072 ஆக இருந்தது.மொத்த பட்டதாரி வெளியீட்டில் 50% அளவைக்கொண்ட கலைத் துறையிலேயே பெரும்பாலான பட்டதாரிகள் சித்தியடைந்தனர். 2011 மற்றும்2015 காலப்பகுதிக்குள் பட்டதாரி வெளியீட்டு விபரம் பின்வருமாறு

| பீடம் கல்வியியல் தொடர்பான பட்டதாரி வெளியீடு 2011-2015 | | | | | |
|---|---|---|---|---|---|
| கல்வித்துறை | **2011** | **2012** | **2013** | **2014** | **2015** |
| கலை | 10691 | 4623 | 9192 | 14651 | 16387 |
| முகாமைத்துவம் மற்றும் வர்த்தகம் | 4550 | 1422 | 4186 | 5982 | 5152 |
| சட்டம் | 348 | 445 | 454 | 496 | 337 |
| மருத்துவம் | 1061 | 1031 | 547[1] | 1209 | 1145 |
| பல் விஞ்ஞானம் | 65 | 20 | 73 | 68 | 79 |
| விலங்கு விஞ்ஞானம் | 58 | 54 | 59 | 57 | 69 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விவசாயம் | 616 | 724 | 828 | 867 | 710[2] |
| பொறியியல் | 1346 | 758 | 1507 | 1438 | 1344 |
| கட்டடக்கலை மற்றும் அளவையியல் | 211 | 228 | 201 | 214 | 77[3] |
| கணினி விஞ்ஞானம் | 581 | 587 | 682 | 947 | 1043 |
| இணை மருத்துவக் கற்கைகள் | 302 | 60 | 361 | 399 | 264 |
| ஸவிஞ்ஞானம் | 2621 | 1646 | 2736 | 2740 | 2711 |
| சுதேச மருத்துவம் | 192 | 113 | 168 | 175 | 227 |
| **மொத்தம்** | **22642** | **11711** | **20994** | **29243** | **29545** |

குறிப்பு:

1. இவ் வருடத்தில் எந்தப் பிரதான பரீட்சைகளும் இல்லை மீள் பரீட்சைகள் மட்டுமே.
2.கிழக்கு மற்றும் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகங்களிலிருந்து எந்த வெளியீடும் இல்லை.
3.கட்டடக்கலை அளவையியல் மற்றும் வசதிகள் முகாமைத்துவம் ஆகிய பட்ட நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து எந்தவித வெளியீடும் இல்லை.
4.2012 இல் ஏற்பட்ட கல்வி சார் மற்றும் கல்விசாரா ஊழிய உத்தியோகத்தர்களின் வேலை நிறுத்தம் காரணமாக 2012 இல் பல பீடங்களில் இறுதியாண்டுப் பரீட்சைகள் இடம்பெறாமையால் பட்டமளிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை இவ்வாண்டு குறைந்துள்ளது.

## 6 நிதி முகாமைத்துவம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது இலங்கையில் உயர் கல்வியின் கொள்கை வழிகாட்டிகளை அடைந்து கொள்ளும் நோக்குடன், பின்வருமாறு வரிசைப்படுத்தப்பட்டவாறு 2016 ஆண்டுடைய வெற்றிடத்தால் நிதியளிக்கப்படுவதற்காக 8 தந்திரோபாய இலக்குகளை அறிமுகப்படுத்தியது.

- உயர் கல்விக்கு பரந்த பங்களிப்பு மற்றும் சமமான செயற்பாடு.
- கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் தரம் மற்றும் பொருத்தப்பாட்டை முன்னேற்றுதல்.
- ஆய்வு, புதுமை, தொழில் முயற்சி ஆகியவற்றை வலுப்படுத்துதல்.
- சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமாதானமும் நல்லிணக்கம் ஆகியவற்றில் தந்திரோபாய பங்காளர்களாக உ.க.நி களின் கடமைகளை அதிகரித்தல்.
- சர்வதேச கூட்டுறவு மற்றும் போட்டித்தன்மையை அதிகரித்தல்.
- உடலியல் மற்றும் அழகியற் சூழல் மற்றும் பங்குதாரர் திருப்தி ஆகியவற்றை அதிகரித்தல்.
- நிதி முகாமைத்துவம் மற்றும் உறுதிப்பாடு ஆகியவற்றை அதிகரித்தல்.

இலங்கை பாரளுமன்றமானது 2015 டிசம்பர் 19 ஆம் திகதி 2016 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தை அங்கீகரித்ததுடன் தேசிய வரவு செலவு திட்டத் திணைக்களமானது 2016ஆம் ஆண்டுக்கான அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை விடுவித்தது. குறித்த காலத்தில் திறைசேரியானது மேலதிக ஒதுக்கீடாக 3,855 மில்லியன்கள் மற்றும் 48 மில்லியன்கள் ஆகியவற்றை முறையே மூலதனம் மற்றும் மீண்டெழும் மானியமாக விஷேடமாக வரவு செலவுத்திட்ட முன் மொழிவுகளின் அமுலாக்கத்துக்கு நிதியளிப்பதற்காக மேற்கொண்டது.

**அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் சுருக்கம் (ரூபா மில்லியன்)**

| வகை / விடயத்தலைப்பு | அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டம் - 2015 (மேலதிக ஓதுக்கீட்டுடன்) | அங்கீகரிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்டம்2016 (மேலதிக ஓதுக்கீட்டுடன்) |
|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| மீண்டெழும் மானியங்கள் | 25,898.00 | 29,029.00 |
| மூலதனம்/அபிவிருத்தி மானியங்கள் | 8,860.00 | 19,797.00 |
| மொத்த மானியங்கள் | **34,758.00** | **48,826.00** |
| உள்ளக வருமானம் ஏனைய மானியம் | 4,335.09 | 5,109.25 |
| மொத்தச் செலவு | *39,093.09* | *53,935.25* |

**6.1 மீண்டெழும் மற்றும் மூலதன மானியங்களுக்கான ஒதுக்கீடு**

திறைசேறியினால் மேலே குறிப்பிட்டவாறு அங்கீகரிக்கப்பட்ட மீண்டெழும் மற்றும் மூலதன மானியங்கள், பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவனங்களினால் 2016ஆம் ஆண்டிற்காக, ப.மா.ஆ.வினால் அங்கீகரிக்கப்பட்ட நிதியிடல் கொள்கையின் அடிப்படையில் மீண்டெழும் தொகுதி மானியங்களாகவும், மூலதன தொகுதி மானியங்களாகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**6.2 நிதியிடல் கொள்கை -மீண்டெழும் மானியங்களுக்கான ஒதுக்கீடு**

**6.2.1** பல்கலைகழகங்கள் மற்றும் இளமாணிப்பட்ட உயர் கல்வி நிறுவனங்களுக்கான மீண்டெழும் மானியங்கள் கீழ்க்காணும் நிதியீட்டல் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**மீண்டெழும் மானியம் = ஒரு மாணவருக்கு வடிவமைக்கப்பட்ட செலவு X மாணவர் சேர்வு**

**6.2.2** மாணவர் ஒருவருக்கு வடிவமைக்கப்பட்ட செலவு பின்வரும் கொள்கைக் காரணிகளைக் கவனத்திற் கொண்டு கணிப்பிடப்பட்டது.

- உண்மையான பதவியணி அடிப்படையில் வருடாந்த சம்பள உயர்வு.
- ஏனைய மீண்டெழும் செலவினம் மீதான பணவீக்கம்.
- ஏனைய மீண்டெழும் செலவினம் மீதான கொள்திறன் விரிவாக்கம்.
- கொள்கைக் காரணி – நிதியீட்டல் விகிதம்

**6.2.3** பட்டபின் கல்வி நிறுவனங்கள் மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கான மீண்டெழும் மானியங்கள் பின்வரும் நிதியீட்டல் கொள்கைக்குரிய அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

- இ.தி.ப.கழகம் - மொத்த மீண்டெழும் மானியத்தின் 60% ப.மா.ஆ. வினால் நிதியளிக்கப்பட்டது.
- பட்டப்பின் நிறுவனங்கள் - பட்டப்பின் நிறுவனங்களுக்கான அவர்களது அரச மானியங்கள் பற்றாக்குறையை ஈடுபெய்வதற்காக மட்டுமே(ப.பி.நி செலவு- உருவாக்கப்பட்ட நிதி)

## 6.3 நிதியீட்டல் கொள்கை -மூலதன மானிய ஒதுக்கீடு

### 6.3.1 மூலதன தொகுதி மானியங்கள்

கட்டுமான செயற்றிட்டங்கள் மீதான மூன்று வருடத் திட்டம் மற்றும் நிதிப்பாவனையின் முன்னேற்றம் ஆகியவற்றைக்கருத்திற் கொண்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கு மூலதன தொகுதி மானியங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### 6.3.2 ஆய்வுகளுக்கான நிதியளிப்பு – ரூபா 600 மில்லியன்

பின்வரும் பிரிவுகளின் கீழ் ஆய்வுச் செயற்பாட்டை அமுல்படுத்துவதற்காக பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கு ஆய்வு தொகுதி மானியமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

1. தேசிய ரீதியான பொருத்தமான ஆய்வு
   - நீண்ட கால கிட்னி நோய் (CKD)
   - டெங்கு

2. விஞ்ஞான, பொறியியல், மற்றும் தகவல் தொழிநுட்பம் தெடர்பான புதுமையான ஆய்வுகள்

3. ஜனநாயகம், சமூக- கலாச்சார மற்றும் பொறியியல் தொடர்பான பிரச்சினைகளுக்குள்ளான ஆய்வு

4. புதுமையான தொழிநுட்ப தீர்வுகளுக்கு இட்டுச் செல்லக்கூடிய பல்கலைக்கழக உற்பத்தி தொடர்பு மற்றும் உற்பத்தி மற்றும் தொழிநுட்ப அபிவிருத்தி தொடர்பான ஆய்வு

5. சர்வதேச மாநாடுகள், சிம்போசியா மற்றும் ஆய்வுகள் மற்றும் வெளியீடுகளுக்கான ஏற்பாடு

### 6.3.3 பொறியியல் பீடங்களை வலுப்படுத்துதல் - ரூபா 950 மில்லியன்கள்

வொஷிங்டன் ஒப்பந்த தேவைப்பாட்டை அடைந்துகொள்வதற்காக மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்திற்கு ரூபா 500மில்லியன்,பேராதனை பல்கலைக்கழகத்துக்கு ரூபா200மில்லியன், றுஹுணு பல்கலைக்கழகத்துக்கு ரூபா 150மில்லியன், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு ரூபா 100 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### 6.3.4 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள்

கௌரவ நிதி அமைச்சரால் ஆற்றப்பட்ட வரவு செலவுத்திட்ட உரையின் பிரகாரம் பின்வரும் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளை நிறைவேற்றுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

- பல்கலைக்கழகங்களில் தொழிநுட்ப பீடங்களைத் தாபித்தல்
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தைத் தாபித்தல்
- பல்கலைக்கழக பீட உத்தியோகத்தர்களுக்கு தங்குமிட வசதியை ஏற்படுத்துதல்
- சர்வதேச புகழ் வாய்ந்த தொழில் சார்ந்த அமைப்புக்களினுடனான அங்கீகாரத்தை ஊக்குவித்தல்
- வயம்ப பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தைத் தாபித்தல்

### 6.3.5 பல்கலைக்கழக முறைமையில் நிதி ஒதுக்கீடு / பாவனை

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இவ் வருடத்திற்கான மானியங்கள் (மேலதிக ஒதுக்கீட்டுடன்) விடுவிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட தொகைகளின் பிரிப்பு பின்வருமாறு

| மானியங்கள் | 2015 | | | 2016 | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்த நிதி ஒதுக்கீடு ரூபா. மில்லியன் | விடுவிக்கப்பட்டமொத்த நிதி ரூபா. மில்லியன் | விடுவிக்கப்பட்ட/ பாவனை மொத்த ஒதுக்கீட்டின் பாவனை அடிப்படையில் | மொத்த நிதி ஒதுக்கீடு ரூபா. மில்லியன் | விடுவிக்கப்பட்ட மொத்த நிதி ரூபா. மில்லியன் | விடுவிக்கபட்ட/ பாவனைமொத்த ஒதுக்கீட்டின் விகிதாசார அடிப்படையில் |
| மீண்டெழும் மானியங்கள் | 25,898.0 | 25,761.0 | 99.5% | 29,029.0 | 27,999.0 | 96.5% |
| மூலதன மானியங்கள் | 8,860.0 | 8,735.0 | 98.4% | 19,797.0 | 15,162.4 | 76.6% |
| மொத்தம் | **34,758.0** | **34,491.0** | **99.2%** | **48,778.0** | **43,161.4** | **88.5%** |

முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் மீண்டெழும் மானியங்களை 2016 இல் ஒதுக்கீடானது 12%ஆலும் மூலதன மானியம் 123% ஆலும் அதிகரித்துக் காணப்பட்டது.

மேலே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டவாறு2016 இல் மூலதன மானிய விடுவிப்பு / பாவனை மொத்த மூலதன ஒதுக்கீட்டில் 76.6 % ஆக இருந்ததுடன், இது 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 22% மான அதிகரிப்பாகவும் உள்ளது.

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு**
(பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்கள்)
**ஆண்டு 2011 இலிருந்து 2016 வரை**

| | | | | | | ருபா. மில்லியன் |
|---|---|---|---|---|---|---|
| | **2011** | **2012** | **2013** | **2014** | **2015** மீட்டப்பட்ட பாதீடு | **2016** மீட்டப்பட்ட பாதீடு |
| அரசாங்க ஒதுக்கீடு | | | | | | |
| மீண்டெழும் | 13161 | 14719 | 18317 | 20841 | 25898 | 29029 |
| மூலதனம் | 7100 | 5779 | 8524 | 10945 | 8860 | 19797 |
| செலவு | | | | | | |
| மீண்டெழும் | 12961 | 14591 | 16932 | 20638 | 25761 | 27999 |
| மூலதனம் | 4279 | 4361 | 5820 | 10000 | 8735 | 15162 |
| மாணவர் நிதி உதவி | | | | | | |
| மஹாபொல | 127 | 101 | 94 | 109 | 576 | 912 |
| உதவு தொகை | 357 | 283 | 386 | 414 | 466 | 832 |

**மூலதன மானியங்களின் தொகுப்பு -2016**




- கட்டுமான கருத்திட்டங்கள்
- கட்டுமான கருத்திட்டங்கள்
- வரவு செலவுத்திட்ட முன்மொழிவு
- மீள் குடியமர்த்தல் மற்றும் மூலதனச் சொத்துக்னகளின் முன்னேற்றம்
- நிலையான சொத்துக்களின் கையகப்படுத்தல்

# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு- பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள்

## தலைப்பு-214

### மீண்டெழும் மானியங்களின் ஒதுக்கீடு- 2014 முதல் 2016 வரை

ரூபா(மில்லியன்)

| பல்கலைக்கழகங்கள்/நிறுவனங்கள் | மீண்டெழும் | | | மூலதனம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2014 | 2015 திருத்தப் பட்ட வரவு செலவுத் திட்டம் | 2016 திருத்தப் பட்ட வரவு செலவுத் திட்டம் | 2014 | 2015 திருத்தப்பட்ட 2015 வரவு செலவுத்திட்டம் | 2016 திருத்தப் பட்ட வரவு செலவுத் திட்டம் |
| பேராதெனிய பல்கலைக்கழகம் | 3,255 | 4,081 | 4,370 | 1,099 | 900 | 1,563 |
| கொழும்பு பல்கலைக்கழகம் | 1,918 | 2,238 | 2,472 | 680 | 615 | 637 |
| ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 1,856 | 2,360 | 2,617 | 1,009 | 875 | 1,621 |
| களனி பல்கலைக்கழகம் | 1,815 | 2,264 | 2,430 | 570 | 700 | 1,081 |
| மொறட்டுவ பல்கலைக்கழகம் | 1,280 | 1,579 | 1,828 | 714 | 640 | 1,545 |
| றுகுணு பல்கலைக்கழகம் | 1,695 | 2,152 | 2,284 | 608 | 535 | 1,176 |
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 1,337 | 1,722 | 2,056 | 1,190 | 721 | 1,367 |
| இலங்கை திறந்த பல்கலைக்கழகம் | 965 | 1,040 | 1,000 | 125 | 80 | 230 |
| கிழக்கு பல்கலைக்கழகம் | 645 | 807 | 994 | 515 | 495 | 628 |
| ரஜரட்ட பல்கலைக்கழகம் | 894 | 959 | 1,255 | 485 | 500 | 817 |
| சபரகமுவ பல்கலைக்கழகம் | 733 | 891 | 1,024 | 387 | 175 | 555 |
| தென்கிழக்குப் பல்கலைக்கழகம் | 580 | 780 | 830 | 500 | 345 | 567 |
| வயம்ப பல்கலைக்கழகம் | 708 | 827 | 949 | 684 | 350 | 786 |
| கட்புல அரங்கேற்றற் கலை பல்கலைக்கழகம் | 499 | 706 | 717 | 339 | 260 | 421 |
| ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் | 321 | 360 | 538 | 230 | 260 | 600 |
| விவசாய பட்டப் பின் கற்கை நிறுவனம் | 16 | 19 | 20 | 9 | 10 | 10 |
| மருத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகம் | 50 | 64 | 80 | 420 | 350 | 285 |
| தொல்பொருளியல் பட்டப்பின் கற்கை நிறுவகம் | 50 | 57 | 66 | 7 | 10 | 10 |
| முகாமைத்துவ பட்டப்பின் கற்கை நிறுவகம் | - | - | - | - | - | - |
| விஞ்ஞான பட்டப்பின் கற்கை நிறுவகம் | 10 | 12 | 12 | 12 | 10 | 38 |
| பாளி மற்றும் பௌத்த கற்கைகள் பட்டப்பின் கற்கைகள் நிறுவகம் | 24 | 12 | 25 | 3 | 5 | 10 |
| ஆங்கிலப் பட்டப்பின் கற்கை நிறுவகம் | 10 | 14 | 13 | 39 | 50 | 38 |
| மானுடவியல் மற்றும் சமுக விஞ்ஞானங்கள் உயர் கற்கைகளுக்கான பட்டப்பின் கற்கைகள் நிறுவகம் | - | - | 8 | | | 8 |
| சுதேச மருத்துவ நிறுவகம் | 214 | 274 | 299 | 60 | 50 | 157 |
| மனித வள மேம்பாட்டு நிறுவகம் | 25 | 32 | 40 | 12 | 10 | 10 |
| கொழும்புப் பல்கலைக்கழக கணணிக் கற்கைகள் நிறுவகம் | 94 | 123 | 160 | 15 | 45 | 245 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கம்பஹா விக்ரமாராய்ச்சி ஆயுர்வேத நிறுவகம் | 166 | 191 | 227 | 120 | 120 | 164 |
| மொறட்டுவ பல்கலைக்கழக தொழிநுட்ப நிறுவகம் | 110 | 127 | 155 | 7 | 12 | 10 |
| நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞான தேசிய நிறுவகம் | 12 | 15 | 17 | 4 | 5 | 5 |
| உயிர்இரசாயன மூலக்கூற்று உயிரியலும்,உயிர் தொழில்நுட்பவியல் நிறுவகம் | 43 | 55 | 60 | 23 | 20 | 20 |
| சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகம் | 74 | 140 | 150 | 45 | 50 | 69 |
| மானிடவியல் மற்றும் சமுக விஞ்ஞானங்கள் உயர் கற்கைகளுக்கான தேசிய நிலையம் | 14 | 18 | 21 | 100 | 98 | 120 |
| திருகோணமலை வளாகம் | 121 | 160 | 203 | 400 | 245 | 536 |
| கொழும்பு பல்கலைக்கழக விவசாய தொழில்நுட்ப மற்றும்கிராமிய விஞ்ஞானங்கள் நிறுவகம் | 13 | 25 | 30 | 18 | 65 | 10 |
| பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | 465 | 350 | 485 | 518 | 254 | 604 |
| தென் கிழக்காசிய பல்கலைக்கழகம் | 164 | - | - | - | - | - |
| **மொத்தம்** | **20,014** | **24,454** | **27,435** | **10,945** | **8,860** | **15,945** |
| செயற்பாட்டு மானியம் | 827 | 1,444 | 1,594 | - | - | - |
| வரவு செலவுத்திட்ட முன்மொழிவு | - | - | - | - | - | 3,855 |
| **மொத்த மானியம்** | **20,841** | **25,898** | **29,029** | **10,945** | **8,860** | **19,797** |

## 07 ப.மா.ஆ செயலகத்தின் பதவியணி

2016 ம் ஆண்டிற்கான ப.மா.ஆ செயலகத்தின் அங்கிகீகரிக்கப்பட்ட பதவியணிகள் 318 ஆகும் இது 55 சிரேஷ்ட மட்டத்தினரையும் (நிறைவேற்றுத்ததரம்), 7 கல்விசார் மட்டம் ( கல்வி சார் பதவியணி) 9 முன்றாம் மட்டம் (கல்வித்துணை), 190 இரண்டாம் மட்டத்தினரையும் (எழுதுவினைஞர் மற்றும் அதுசார்) மற்றும் 57 ஆரம்பமட்டமும் (வேறு ளஇணை) ஆகிய பதவிகளை உள்ளடக்கியுள்ளது. அதில் முதல் வகையீட்டில் 39 பேரும், இரண்டாம் வகையீட்டில் 07 பேரும், மூன்றாம் வகையீட்டில் 05 பேரும்,நான்காம் வகையிட்டில் 153பேரும்,ஐந்தாம் வகையீட்டில் 55 பேருமாக மொத்தமாக 259 பேர் மட்டுமே 2016 டிசம்பர் 31 ம்திகதி வரை சேவையில் இருந்தனர்.

### 7.1 ப.மா.ஆ ஊழியர்களின் நியமனம், பதவியுயர்வு, பதவி உறுதிப்படுத்தல், இடமாற்றங்கள், பதவியில் இருந்து ஓய்வு பெறுதல் மற்றும் பதவி இராஜினாமா ஆகியவற்றின் விபரம்

2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு 55 நிரந்தர ஊழியர்களும், ஒப்பந்த / கொடுக்கப்பட்ட வேலை அடிப்படையில் 14 பேருக்குரிய நியமனங்களும் செய்யப்பட்டன. மொத்த நிரந்தர பதவி நியமனம் 7 பதவிகள் நிறைவேற்றுத்தர வகையை கொண்டதாகும்.

ப.மா.ஆ ஆனது நிறைவேற்று தர, முகாமைத்துவ மற்றும் அதனுடன் இணைத்தரங்களையும் உடைய பதவிகளை கொண்ட 5 பதவி உயர்வுகளையும், 3 பதவி நிரந்தரமாக்கல்களையும் தமது ஊழியர்களுக்கு விமர்சனைக்குரிய காலப்பகுதியில் வழங்கியது.

விமர்சனைக்குரிய காலப்பகுதியில் 1 கணணிப்பிரயோக உதவியாளர் தற்காலிக அடிப்படையில் ப.மா.ஆ விலிருந்து விவசாயப்பட்டப்பின் நிறுவகத்துக்கு விடுவிக்கப்பட்டார்

2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 5 ஊழியர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற அதேவேளை மூன்று ஊழியர்கள் தமது உரிய பதவியிலிருந்து ராஜினாமா செய்தனர். இவர்களில் ஒருவர் நிறைவேற்று தரத்தையும் ஏனைய இருவரும் முகாமைத்துவம் மற்றும் இணைத்தரங்களையும் கொண்டவர்களாவர்.

நிறைவேற்று தரத்தைக் கொண்ட ஒருவர் சப்ரகமுவ பல்கலைக்கழகத்திலிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

## 7.2 பதவி அணியினருக்குள்ள பயிற்சி மற்றும் அபிவிருத்தி

ஒவ்வொரு வருடமும் ப.மா.ஆ.வானது செயலகத்தின் பதவி உறுப்பினர்களுக்கு அவர்களது தரங்கள் மற்றும் வேலை தொடர்பான அறிவை விருத்தி செய்வதற்காக அவர்களது கடமை தொடர்பான பயிற்சி பட்டறைகள்/ பயிற்சிகள் ஆகியவற்றில் பங்குபற்றும் வாய்ப்பை வழங்குகின்றன. இவ்வகையான பயிற்சிப்பட்டறைகள்/பயிற்சித் திட்டங்களானவை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களால் நடாத்தப்படுகின்றன. அவையாவன, இலங்கை அபிவிருத்தி முகாமைத்துவ நிறுவகம், கட்டுமானம் பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான நிறுவகம், முகாமைத்துவ கணக்கீட்டு நிறுவகம், அரச பட்டய கணக்காளர் நிறுவகம், வியாபார முகாமைத்துவத்துக்கான தேசிய நிறுவகம்,வரையறுக்கப்பட்ட திறன் அபிவிருத்தி நிதியம், உயர் கற்கைகளுக்கான தேசிய நிலையம், மனித வள அபிவிருத்தி நிறுவகம், உயர் கல்வி 21 ஆம் நூற்றாண்டு செயற்திட்டம், கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கைகளின் நிறுவகம், கோல்ட் வர்த்தக நிறுவனம், (வரையறுக்கப்பட்ட தனியார்) இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம், கட்டுமான உபகரணம் பயிற்சி நிறுவனம், களனிப் பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம், மருத்துவ பட்டப்பின் நிறுவகம், முகாமைத்துவ பட்டபின் கற்கை நிறுவகம், அத்துடன் குறிப்பிடப்பட்ட பதவியணிக்கான அனுசரணை வழங்கும் நோக்கத்திற்காக ப.மா.ஆ வினால் ஓர் பிரதிநிதியோ ஊழியர் பயிற்சி நிதியம் ஒன்று பேணப்பட்டு வருகின்றது.

i. விமர்சனைக்குரிய காலப்பகுதியில் ப.மா.ஆ வினால் நியமிக்கப்பட்ட 25 நிறைவேற்று தரமுள்ள உத்தியோகத்தர்களும் 13 நிறைவேற்றுத்தரம் சாரா உத்தியோகத்தர்களும் நேரடியாக பொருத்தமான அலுவலக வேலை தொடர்பான குறுகியகாலப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்கள்.

ii. தமது வேலை தொடர்பான அறிவை முன்னேற்றுவதற்காக நீண்ட காலப் பயிற்சிக்காக 3 நிறைவேற்றுதர ஊழியர்களுக்கும் 2 நிறைவேற்றுத் தரம் சாரா ஊழியர்களுக்கும் நிதி உதவி வழங்கப்பட்டது.

iii. சாரதி மற்றும் ஆரம்ப மட்டங்களின் கீழ் பணிபுரியும் ஒரு ஊழியர் குழுவினர் சாரதிகள் மற்றும் ஆரம்ப மட்ட ஊழியர்களுக்கான திறன் அபிவிருத்தி தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டனர்.

iv. நிறைவேற்றுதர ஊழியர்களுக்காக குறுகிய கால வெளிநாட்டு பயிற்சி திட்டங்களில் கலந்து கொள்வதற்காக கடமை விடுமுறை வழங்கப்பட்ட அதே வேளை 1 உத்தியோகத்தர் 5 நாள் முழுச் சம்பளத்துடனான கற்கை விடுமுறை வழங்கப்பட்டார். இது உள்நாட்டில் அவர்களது முதுமாணிப்பட்டங்கள் கற்பதற்கான விடுமுறையாகும். இது தவிர முகாமைத்துவ மற்றும் இணைதரங்களின் கீழ் 4 ஊழியர்கள் தமது வேண்டுகோள்களுக்கிணங்க சம்பளத்துடனான கற்கை விடுமுறைகள் வழங்கப்பட்டனர்.

விமர்சனைக்குரிய காலப்பகுதியில் 5 வருட காலத்ததை உள்ளடக்கிய விருப்பிற்குரிய ஓய்வு கால வயதைக் கடந்த/அடைந்த ப.மா.ஆ வின் ஊழியர்களின் சேவை நீடிக்கப்பட்டது.

ஆணைக்குழுச் சுற்றறிக்கை இலக்கங்கள் 678,696 மற்றும் 893 ஏற்பாடுகளின் கீழ் நீண்ட கால சேவை விருது பெற தகைமை உடையவர்களாக இருந்தப.மா.ஆ செயலக உத்தியோத்தர்களில் 12 உறுப்பினர்கள் அவர்களால் பல்கலைக்கழக முறைமைக்கு வழங்கப்பட்ட அளப்பரிய சேவைக்கான பணப்பரிசு வழங்கப்பட்டனர்.

### 7.3 ஓய்வு முன்னாயத்த விடுமுறை , சம்பளத்துடனான விடுமுறை மற்றும் சம்பளமற்ற விடுமுறை

2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நான்கு ஊழியர்கள் ஓய்வு முன்னாயத்த விடுமுறை வழங்கப்பட்டதுடன், ஏழு ஊழியர்கள் சம்பளத்துடனான விடுமுறையும் இரு ஊழியர்கள் சம்பளமற்ற விடுமுறையும் வெளிநாடுகளுக்கு சேர்வதற்காக வழங்கப்பட்டனர்.ஆணைக்குழுச் சுற்றறிக்கை இலக்கம் 408 ஏற்பாடுகளின் பிரகாரம் இரண்டு ஊழியர்கள் கட்டாய விடுமுறை வழங்கப்பட்டனர்.

### 7.4 சுகாதார காப்புறுதி திட்டம்

விமர்சனைக்குரிய ஆண்டு காலப் பகுதியில்,இருக்கின்ற சுகாதார காப்புறுதி திட்டமானது இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் எல்லா நிரந்தர ஊழியர்களுக்கும் மேலும் இலாபகரமான சுகாதார காப்புறுதி திட்டத்தை வழங்கும் நோக்கில் விரிவுபடுத்தப்பட்டது.

### 7.5 பாராட்டு மற்றும் வரவேற்பு

ஆணைக்குழுவானது தமது நீண்ட காலம் சேவை வழங்கி விமர்சனங்களுக்குரிய காலப்பகுதியில் முடிவுறுத்திக்கொண்ட சகலருக்கும் தமது பாராட்டுதலை பதிவு செய்து கொண்டதுடன் விமர்சனங்களுக்குரிய காலப் பகுதியில் சேவையில் புதிதாக இணைந்து கொண்டோரை வரவேற்றது.

## 08. மனித வள முன்னேற்றங்கள்

### 8.1. புதிதாக அங்கீககரிக்கப்பட்ட பதவி நிலைகளும் மொத்த பதவியணிகளின் மீள் நோக்கும்

முகாமைத்துவ சேவைத் திணைக்களமானது ப.மா.ஆ வினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை கவனத்திற் கொண்டு 2016 ஆம் ஆண்டு

காலப்பகுதியில் உயர் கல்வி நிறுவனங்களுக்காக 717 புதிய பதவியணிகளை ஏற்றுக்கொண்டது.
விபரங்கள் பின்வருமாறு அட்டவணயில் கட்டப்பட்டுள்ளது.

| ஊழியர் வகுப்பீடு | புதிய பதவிகளின் எண்ணிகை |
|---|---|
| கல்வி சார் பதவியணி | 380 |
| கல்விசார் மற்றும் ஏனைய பதவியணி | 18 |
| கல்விசார் துணை | 06 |
| முகாமைத்துவ உதவியாளர் /தொழிநுட்பம் சாரா | 55 |
| முகாமைத்துவ உதவியாளர் /தொழிநுட்பம் சார் | 96 |
| தேர்ச்சி, அரைத்தேர்ச்சி, தேர்ச்சியற்ற | 129 |
| தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் | 33 |
| மொத்தம் | 717 |

பல்கலைக்கழக பணிமுறைக் குழுவின் கடந்த4,5 வருடங்களுக்கான அதிகரிக்கப்பட்ட அமைப்பு முறை பின்வருமாறு

| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|
| கல்வி சார் பதவியணி | 8,021 | 8,290 | 8,510 | 8,603 | 8,696 | 9,076 |
| நிர்வாகமம் மற்றும் இணை பதவியணி | 898 | 1,023 | 1,075 | 1,096 | 1,099 | 1,117 |
| கல்விசார் துணைப் பதவியணி | 882 | 906 | 939 | 969 | 976 | 982 |
| கல்விசாரா மற்றும் நிர்வாகம் சாராப் பதவியணி | 10,491 | 10824 | 11132 | 11213 | 11266 | 11579 |
| | 20,292 | 21,043 | 21,656 | 21,881 | 22,037 | 22,754 |

* மருத்துவ உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட

## 8.2 நியமனங்கள் / பதவியுயர்வு

1978 ஆம் ஆண்டின் பல்கலைக்கழக சட்டம் இல 16 இன் 17(2) இன் பிரிவின் (ii) மற்றும் (iii) பந்தியின் பிரிவு 8(1) ஆகியவற்றுக்கு அமைவாக, ப.மா.ஆ குழு நிருவாக நிறுவனங்களை பதவி உயர்வுகள், நியமனங்கள் ஆகியவற்றை செய்தல் வேண்டும். அதன்படி 2016 ஆம் ஆண்டுக்கான பின்வரும் நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

நியமனங்கள்

| பதவி | பல்கலைக்கழகம் | நியமனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| மருத்துவ உத்தியோகத்தர் | கொழும்பு பல்கலைக்கழகம்<br>இலங்கை சப்ரகமுவப் பல்கலைக்கழகம் | 01<br>01 |
| பிரதான மருத்துவ உத்தியோகத்தர் | மொறட்டுவைப் பல்கலைக்கழகம் | 01 |
| உதவிப் பணிப்பாளர்/ பிராந்திய கல்விச் சேவைகள் | இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் | 06 |
| பணிப்பாளர் - உடறறொழில் கல்வி | ஊவா வெல்லஸ்ஸபல்கலைக்கழகம் | 01 |
| பண்ணை முகாமையாளர் தரம் III | கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை | 01 |
| வேலைப் பொறியியலாளர்(சிவில்) தரம் III | ஊவாவெல்லஸ்ஸபல்கலைக்கழகம்<br>கிழக்குப் பல்கலைக்கழகம் இலங்கை<br>கொழும்புபல்கலைக்கழகம் | 01<br>01<br>01 |
| வேலைப் பொறியியலாளர்(சிவில்) தரம் II | மொறட்டுவைப் பல்கலைக்கழகம்<br>யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 01<br>01 |
| பயிற்சிப் பட்டறைப் பொறியியலாளர் தரம் III | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்<br>ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 01<br>01 |
| இலத்திரனியல் பொறியியலாளர் தரம் III | பேராதனைப் பல்கலைக்கழகம் | 01 |
| தகவல் முறைமைகள் முகாமையாளர் | இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் | 01 |
| பிரதான பாதுகாப்பு அதிகாரி | களனி பல்கலைக்கழகம்<br>இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் | 01<br>01 |
| பிரதான படைத்தளபதி | இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் | 01 |
| பொறுப்பாளர் (தரைத் தோற்றம்) தரம் III | றுகுணு பல்கலைக்கழகம் | 01 |
| **மொத்தம்** | | **24** |

பதவி உயர்வுகள்

| பதவி | பல்கலைக்கழகம் | பதவி உயர்வுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| பணிப்பாளர் - உடற்றொழில் கல்வி (உயர் தரம் ) | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்<br>இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்<br>இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் | 01<br>01<br>01 |
| பணிப்பாளர் - உடற்றொழில் கல்வி | இலங்கை சப்ரகமுவப் பல்கலைக்கழகம் | 01 |
| சிரேஷ்ட பதவி தொழிநுட்ப உத்தியோகதத்ர் | களனி பல்கலைக்கழகம்<br>கொழும்புபல்கலைக்கழகம்<br>பேராதனைப்பல்கலைக்கழகம<br>யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 02<br>03<br>03<br>01 |
| சிரேஷ்ட தொழிநுட்ப உத்தியோகத்தர் | பேராதனைப் பல்கலைக்கழகம்<br>மொறட்டுவைப் பல்கலைக்கழகம்<br>களனி பல்கலைக்கழகம் | 01<br>01<br>01 |
| பொறுப்பாளர் (நூதன சாலை) தரம் II | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 01 |
| வேலைப் | கொழும்புபல்கலைக்கழகம் | 01 |

| | | |
|---|---|---|
| பொறியியலாளர்(சிவில்) தரம் II | | |
| வேலைப் பொறியியலாளர்(சிவில்) தரம் | கட்புல அரங்கேற்ற பல்கலைக்கழகம் | 01 |
| **மொத்தம்** | | **19** |

## 8.2 எழுதுவினைஞர்/பண்டக காப்பாளர்/சிறாப்பர்/ கணணிப் பிரயோக உதவியாளர் ஆகிய பதவிகளில் தரம் III இலிருந்து தரம் II க்கு பதவி உயர்வு செய்தல்

2014.12.31 ம் திகதியளவில் தகைமை பெற்ற 133 பரீட்சாத்திகளுக்கான எழுது வினைஞர்/பண்டக காப்பாளர்/சிறாப்பர்/ கணணிப் பிரயோக உதவியாளர் ஆகிய பதவிகளில் தரம் III இலிருந்து தரம் II க்கு பதவி உயர்வு செய்வதற்கான எழுத்துப் பரிட்சை ஒன்று ப.மா.ஆ வினால் 2016.07.02 ம் திகதி நடைபெற்றது. பரீட்சையில் வெற்றிகரமாக சித்தியடைந்த பரீட்சாத்திகளுக்கான நேர்முகப் பரிட்சை நடாத்தும் நோக்கில் 2016.12.19 ம் திகதி பெறுபேறுகள் உ.க.நி களுக்கு வெளியிடப்பட்டது. பரீட்சாத்திகளின் சுருக்கம் வருமாறு:

## 8.3 எழுதுவினைஞர் தரம்III பதவிக்கு கனிஷ்டதர ஊழியர்களை நியமித்தல்

1998.09.15 ம் திகதிய ஆணைக்குழுச் சுற்றறிக்கை இலக்கம் 742 மற்றும் 1979.11.27 ம் திகதிய ஆணைக்குழுச் சுற்றறிக்கை இலக்கம்50 ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கமையவும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கமையவும் எழுதுவினைஞர் தரம் III பதவிக்கு நியமிப்பதற்காக தகுதியானவர்கள் என கருதப்படும் கனிஷ்டஊழியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட வேண்டும் என்பதுடன் தெரிவானது ஒரு எழுத்துப்பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் நடாத்தப்பட வேண்டும்.இதன் பிரகாரம்,2014.12.31 ம் திகதியளவில் தகைமை உள்ளவர்களாக காணப்பட்ட 130 பரீட்சாத்திகளுக்கான எழுத்துப்பரீட்சை 2016.11.05 ம் திகதி மருத்துவப் பட்டப் பின் நிறுவகத்தில் நடாத்தப்பட்டது.

## 8.4 பல்கலைக்கழகங்களுக்கிடையிலான இடமாற்றங்கள் - 2016

பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 78 ஆம் பிரிவின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டில் பின்வரும் இடமாற்றங்கள் ப.மா.ஆவின் செயற்படுத்தப்பட்டன.

- நிர்வாகத்துறை சார்பான உத்தியோகத்தர்கள் -15
- கல்விசாரா, நிர்வாகம் சாரா பதவி உத்தியோகத்தர்கள் -60

## 8.5 பதவி அபிவிருத்தி செயற்பாடுகள்

சகல 15 பதவியணி அபிவிருத்தி நிலையங்களும் (ப.அ.நி)மிகவும் ஒழுங்கான முறையில் கல்வி சார் பதவியணியினருக்காக ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தினையும் மற்றும் ஏனைய குறுகிய கால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், தொழில் பட்டறைகள், வெளிப்பொறுப்பு பயிற்சிகள் ஆகியவற்றை எல்லா வகை பதவியணியினருக்காகவும் நடாத்துகின்றன. உதாரணமாக கல்வி சார், நிருவாகம் சார் நிதியியல், நிறைவேற்றுத்தரம், தொழில்நுட்பம், கல்விசாரா, முகாமைத்துவ, சிற்றூழியர் வகை ஆகிய எல்லாத்தரங்களையும் கொண்ட பதவிகளுக்காக

## 8.6 பல்கலைக்கழக கல்வியாளர்களுக்கு புலமைப்பரிசில்கள் தோழமைகள் ஆய்வு மானியங்கள் மற்றும் ஏனைய நிதியுதவிகளை வழங்குதல்

ப.மா.ஆ வின் கொள்கைளுக்கு அமைவாக, கல்விசார் உத்தியோகத்தர்களை ஊக்குவிப்பதற்கென விஷேடமாக இளம் கல்வியாளர்களை தமது உயர் கல்வியினை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொடருமுகமாகவும் அத்துடன் பல்கலைக்கழக முறைமையினை ஊக்குவிப்பதுடன் ஆராய்ச்சி கலாச்சாரத்தை பலப்படுத்துவதற்காக, ப.மா.ஆ வானது அதிக நிதிகளை ஒதுக்கீடு செய்யும் நோக்கில் ஒத்திசைவான முயற்சியினை கடந்த சிலவருடங்களாக மேற்கொண்டு வந்தது. மேற்குறிப்பிட்ட இலக்கை அடைவதற்காக கீழ்க்காணும் மானியங்கள் விமர்சனைக்குரிய ஆண்டு காலப்பகுதியில் பெறக்கூடியதாக இருந்தது.

### அ பட்டப்பின் கற்கைக்கான நிதி உதவி

பல்கலைக்கழக முறைமையின் ஆதிக்க எல்லையின் கீழ் உள்ள நிரந்தர பதவியில் உள்ள ஆசிரியர்களுக்கு அவர்களது முதுமாணிப் மற்றும் கலாநிதிப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை கற்பிப்பதற்காக உதவி வழங்குகிறது.இத் திட்டத்தின் கீழ் எந்தவொரு உயர் கல்வி நிறுவனத்திலும் உள்ள எந்தவொரு பாட நெறிக்கும் உரிய தகுதிகாண் கால விரிவுரையாளர்கள் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் ஆகியோர் நிதி உதவி பெற தகுதியுடையவர்களாவர்.

இம் மானியத்தில் மொத்த அளவானது பாட நெறி, கற்கைகள் தன்மை, கற்கைப் பட்டம்,நடாத்தப்படும் நாடு என்பவற்றைக் கொண்டு வேறுபடுகின்றது. எனினும், இத் தொகையானது 2,500,000 யை விடஅதிகரிக்காத தொகையாக எம்.பில்.(முதுமானி பட்டத்திற்கும்),ரூபா 3,500,000 யை விட அதிகரிக்காத தொகையாக கலாநிதி பட்டத்திற்கும் அமைந்துள்ளது. மானியங்களாவன போட்டித்தன்மை அடிப்படையிலும், செயற்திட்ட பிரேரணையின் தன்மை அடிப்படையிலும் பிரேரிக்கப்பட்ட கற்கைகளின் அறிவுத்தரம் மற்றும் அது தொடர்பானவற்றையும் கொண்டு ஒழுங்குபடுகின்றது. 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 69.8 மில்லியன் தொகையுடன் ஒப்பிட்டு 2016 ஆம் ஆண்டு 151 மில்லியன் மொத்த வரவு செலவுத்திட்டத்தைக் கொண்ட 51 பிரேரணைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டன.

**2011 தொடக்கம் 2016 வரை ப.மா.ஆ வினால் வழங்கப்பட்ட பட்டப்பின் மானியங்கள்**

### ஆ. இலங்கை–அவுஸ்திரேலியா இணைந்த / பகுதிசார் கலாநிதிப்பட்ட நிகழ்ச்சித்திட்டம்

ப.மானியங்கள் ஆணைக்குழுவானது அவுஸ்திரேலியா குயின்ஸ்லாந்து தொழில்துறை பல்கலைக்கழகத்தோடு இணைந்து பல்கலைக்கழக கனிஷ்ட கல்வியாளர்களின் பயன்விளைவின் நிமித்தம் ஓர் இணைந்த பி.எச்.டி நிகழ்ச்சித்திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. கு.தொ.ப, அவுஸ்திரேலியாவில் கல்வியில் முன்னணி இடத்தை வகிப்பதுடன் விஷேடமாக அதற்கு விஞ்ஞானம், இயந்திரவியல், தொழில்நுட்பம் மற்றும் சுகாதார விஞ்ஞானங்கள் போன்றவற்றில் ஆராய்ச்சி பலம் உள்ளது.

ப.மா.ஆ மற்றும் கு.தொ.ப. ஆகியவற்றுக்கிடையே கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், ஒவ்வொரு தெரிவு செய்யப்பட்ட பரீட்சாத்திக்கும் அவுஸ்திரேலியாவில் ஒரு வருடம் வரைக்கான செலவுக்காக ப.மா.ஆ 3.5 மில்லியன் உச்ச பெறுமதியான நிதியை ( 3 வருடத்துக்காக)வழங்கும் அதே வேளை குயின்ஸ்லாந்து தொழில்துறை பல்கலைக்கழகமானது கற்றல் செலவைப் பொறுப்பெடுப்பதுடன் கலாநிதிப்பட்ட நிலையின் கால எல்லைக்கான

உத்தேச பெறுமதியாகிய 100,000 அவுஸ்திரேலிய டொலர் தொகைப் புலமைப் பரிசிலை வழங்கும் அதாவது மூன்றரை வருடங்கள்.

| ஆண்டு | வழங்கப்பட்ட மானியங்களின் எண்ணிக்கை | அங்கீகரிக்கப்பட்ட மானியங்களின் எண்ணிக்கை (மில்லியனில்) |
|---|---|---|
| 2011 | 18 | 9.20 |
| 2012 | 5 | 1.86 |
| 2013 | 38 | 59.38 |
| 2014 | 42 | 55.29 |
| 2015 | 43 | 69.89 |
| 2016 | 53 | 151.0 |

இத்திட்டத்தின்கீழ் 13 விரிவுரையாளர்கள் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளதுடன் அவர்களுக்குரிய நேர்முகப் பரீட்சையானது 2016 மே 19 இல் நடைபெற்றது.இதன் படி 11 பரீட்சாத்திகள் கு.தொ.ப. வில் உயர் கல்விக்காக ப.மா.ஆ விலிருந்து நிதி உதவி பெறுவதற்காக அனுமதியைப்பெற்றுள்ளனர்.இம்மானியங்களின் பெறுமதியானது ருபா 33.9 மில்லியன் ஆகும்.2 பரீட்சாத்திகள் தொடர்பான கு.தொ.ப. வின் பதில் காத்திருப்பில் உள்ளது.

**இ. ஐக்கிய இராச்சியத்தில் பொதுநலவாய மருத்துவத் தோழமை -2017**

ஒரு பொதுநலவாய மருத்துவத் தோழமை ஐக்கிய இராச்சியத்தில் ஆகஸ்டில் விளம்பரப்படுத்தப்பட்டதுடன் பல்கலைக்கழக மானியங்கள்ஆணைக்கழு 2016 நவம்பரில் போட்டியாளர்களை இறுதிப்பட்டியலிட்டது.

**ஈ. அவுஸ்ரேலியா மெலபோர்ன் பல்கலைக்கழக மெலபோர்ன் பொறியியல் கல்லூரியுடன் இணைந்த சிறப்பு பி.எச்.டி புலமையாளர்கள் நிகழ்ச்சித்திட்டம்**

ப.மா.ஆ ,உயர் கல்வியமைச்சு மற்றும் மெல்போர்ன் பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கிடையே பொறியியல், தகவல் தொழில் நுட்பம், கணிதம் மற்றும் கணணி விஞ்ஞானம் ஆகியவற்றில் முதன்மையான பட்டதாரிகளின் பயிற்சிக்காக ஒரு சிறப்பு பி.எச்.டி நிகழ்ச்சித் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இந்நிகழச்சித்திட்டத்தின் கீழ் மெல்போர்ன் பொறியியல் கல்லூரியானது 2015 இலிருந்து அமுலாகும் வண்ணம் வருடாந்தம் மொறட்டுவ பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகம் ஆகியவற்றிலிருந்து வெளியாகும் 5 வரையான முதன்மை நிலையில் உள்ள பட்டதாரி மாணவர்களை அனுமதிக்கும்.சொல்லப்பட்டபட்ட நிகழ்ச்சித் திட்டங்களில் அவர்களது கற்கைக் காலத்தின் இறுதி இரண்டு வருடங்களில் 3.75/4அல்லது அதற்கு மேற்பட்டGPA புள்ளியுடன் கூடிய சிறப்புப் பட்டதாரிகள் இந் நிகழ்ச்சித்திட்டத்துக்கு விண்ணப்பிக்க தகைமை உடையவர்களாவர்.

இந் நிகழச்சித்திட்டத்தின் கீழ் மெல்போர்ன் பொறியியல் கல்லூரியானது100% மான – (தற்போது வருடாந்தம் 36,896 அவுஸ்ரேலிய டொலர்கள்) மற்றும் 80% மான வாழ்க்கை முற்கொடுப்பனவுகளையும் (தற்போது வருடாந்தம் 25,849 அவுஸ்ரேலிய டொலர்கள்

ஒவ்வொரு மாணவருக்கும் வரி விலக்காக) 3.5 வருடங்களுக்கு வழங்கும் அதே வேளை ப.மா.ஆ /இலங்கை உயர் கல்வி அமைச்சானது 3.5 வருடங்களுக்கான வாழ்க்கைக் கொடுப்பனவின் 20 வீதமான நிதியை அளிக்கும்.

இதன் விளைவாக இத் திட்டதின் கீழான புலமைப் பரிசிலுக்கான விண்ணப்பம் 2015 நவம்பர் இறுதியளவில் கோரப்பட்டது.ப.மா.ஆ பங்களிப்பானது (20%வாழ்க்கைக்கொடுப்பனவு) தெரிவு செய்யப்பட்ட இரண்டு பரீட்சாத்திகளுக்கு அங்கீகரிக்கப்பட்டதுடன், புரிந்துணர்வு உடன்படிக்கை மற்றும் ப.மா.ஆ தீர்மானம் என்பவற்றின் பிரகாரம் 2016 இல் மானியங்கள் விடுவிக்கப்பட்டது.

வழங்கப்பட்ட ஆய்வு மானியங்கள் 2016

| பல்கலைக்கழகம் | பட்டப்பின் மானியங்கள் | | குயின்ஸ்லாந்து தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் | | மெல்பொர்ன் | |
|---|---|---|---|---|---|---|
| | பெற்றுக்கொள்ளப்பட்ட கொடைகள் எண்ணிக்கை | மொத்தப் பெறுமதி (ரூபா) | பெற்றுக்கொள்ளப்பட்ட கொடைகள் எண்ணிக்கை | மொத்தப் பெறுமதி (ரூபா) | பெற்றுக்கொள்ளப்பட்ட கொடைகள் எண்ணிக்கை | மொத்தப் பெறுமதி (ரூபா) |
| கொழும்பு பல்கலைக்கழகம் | 7 | 23,967,615 | | | | |
| பேராதெனிய பல்கலைக்கழகம் | 3 | 7,413,000 | 1 | 3,381,000 | | |
| ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 6 | 18,635,000 | 2 | 6,206,150 | | |
| களனி பல்கலைக்கழகம் | 6 | 16,675,000 | | | | |
| மொறட்டுவ பல்கலைக்கழகம் | 2 | 3,295,000 | 1 | 3,342,000 | 2 | 4,741,000 |
| யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் | | | 1 | 3,030,000 | | |
| உறுகுணை பல்கலைக்கழகம் | 3 | 5,501,000 | 2 | 5,815,254 | | |
| இலங்கை திறந்த பல்கலைக்கழகம் | 5 | 16,488,700 | 1 | 3,004,000 | | |
| கிழக்குப் பல்கலைக்கழகம் | 2 | 1,700,000 | 1 | 2,721,800 | | |
| இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் | | | 1 | 3,310,500 | | |
| ரஜரட்ட பல்கலைக்கழகம் | 3 | 7,880,500 | | | | |
| சபரகமுவ பல்கலைக்கழகம் | 1 | 2,800,000 | | | | |
| வயம்ப பல்கலைக்கழகம் | 1 | 4,200,000 | | | | |
| கட்புல அரங்கேற்றற் கலைப் பல்கலைக்கழகம் | 0 | 0 | | | | |
| ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் | 1 | 4,200,000 | 1 | 3,095,780 | | |
| மொத்தம் | **40** | **112,805,815** | **11** | **33,906,484** | **2** | **4,741,000** |

உ வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடனான இணைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை முன்னேற்றுதல்

ப.மா.ஆவினூடாக இலங்கைப் பல்கலைக்கழகங்கள் மற்றும் பின்வரும் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றுக்கிடையில் பட்டப்பின் புலமைப்பரிசில் மற்றும் கல்வி ஒருங்கிணைப்பு ஆகியவற்றை முன்னேற்றுவதற்கான விபரங்களுடனான தொடர்பாடல் ஏற்கனவே நடைபெற்றுள்ளது.

- <u>பல்கலைக்கழக மானியங்கள்ஆணைக்குழு மற்றும் ஜேர்மன் கல்விப் பரிமாற்ற சேவை ஆகியவற்றுக்கிடையேயான புரிந்துணர்வு உடன்படிக்கை</u>

  ப.மா.ஆ வானது தற்போது இலங்கையில் ,ஜேர்மன் கல்விப் பரிமாற்ற சேவையுடன் நிலையான இருதரப்பு பரஸ்பர இலாபகரமான உறவை விருத்தி செய்யக் கூடிய திறனைக் கொண்டிருக்கும் சிறந்த 4-5 பல்கலைக்ககழகங்களைத் தெரிவு செய்யும் செயற்பாட்டில் உள்ளது.

- <u>பல்கலைக்கழக மானியங்கள்ஆணைக்குழு மற்றும் ஜப்பான் சர்வதேச பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கிடையேயான புரிந்துணர்வு உடன்படிக்கை</u>

  ஜப்பான் சர்வதேச பல்கலைக்கழகத்தால் வேண்டப்பட்டதற்கேற்ப இரண்டு நிறுவனங்களுக்கிடையிலும் பட்டப்பின் புலமைப்பரிசில் மற்றும் கல்வி ஒருங்கிணைப்பு ஆகியவற்றை முன்னேற்றுவதற்கான ஒரு வரைவு புரிந்துணர்வு உடன்படிக்கை மேலதிக கவனம் மற்றும் அனுமதிக்காக அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

- <u>இலங்கை மற்றும் CERN கோடை கால மாணவர் நிகழ்ச்சித் திட்டங்களுக்கிடையிலான EOIமீதான தோழமை</u>

  ப.மா.ஆ வினால் அனுப்பப்பட்ட பரிந்துரையின் பிரகாரம் 2016 அம் ஆண்டில் கோடை கால மாணவர் நிகழ்ச்சித் திட்டத்திற்காக இரண்டு இலங்கை மாணவர்களை CERN தெரிவு செய்தது.

- <u>அவுஸ்திரேலியா டேகின் பல்கலைக்கழகத்துடன் இணைவு நிகழ்ச்சித் திட்டங்களுக்கான சாத்தியப்பாட்டை ஆய்வு செய்தல்.</u>

  டேகின் பல்கலைக்கழகமானது இலங்கையுடன் இணைந்து ஆய்வுகள், ( ஆய்வு முதுமானி மற்றும் கலாநிதிப்பட்டம்) புலமைப் பரிசில்கள், கல்விசார் உத்தியோகத்தர் அபிவிருத்தி, மற்றும் இணை ஆராய்ச்சி ஆகியவற்றினூடாக உயர் பட்ட நிகழ்சிப் பரப்புக்களில் இணைவுப் பங்குரிமையை முன்னெடுக்க ஆர்வமாய் உள்ளது. இது தொடர்பாக டேகின் பல்கலைக்கழக பிரதிநிதிகள் குழு ப.மா.ஆ வுடன்2016 ஆம் ஆண்டு ஜூன் மாதமளவில் ஒரு கலந்துரையாடலை மேற்கொண்டது.

**ஊ) பல்கலைக்கழகங்களில் கல்விசார் பதவியணிகளுக்கான விமானப் பிரயாணம் சார்பான நிதி உதவிகள்**

பல்கலைக்கழகத்தை சார்ந்த கல்விசார் பதவியணியினருக்கு வெளிநாடுகள் சென்று தங்கள் பட்டப்பின் கல்வி தகைமைகளை மேற்கொள்வதற்காக விமானப்பயண நிதியுதவியாக ப.மா.ஆணைக்குழுவினால் கடந்த வருடங்களில் கீழ் குறிப்பிடப்பட்டவாறு நிதியுதவி வழங்கப்பட்டது.

| | | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கோரிக்கைகள் | உள்வருகை | 34 | 30 | 38 | 30 |
| | வெளிச்செல்கை | 55 | 63 | 60 | 59 |
| தொகை ருபா - | | 6,754,729.63 | 5,086,561.00 | 6,135,913.00 | 4,303,882.00 |

விமர்சனைக்குரிய ஆண்டு காலப்பகுதியில் பல்கலைக்கழகங்களில் உள்ள கல்விசார் பதவியணியினருக்கு விமானப்பயண உதவி வழங்கப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு

| உயர்கல்வி நிறுவனங்கள் | 2016 இல் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கோரிக்கைகள் | | 2016ல் பல்கலைக்கழகள் ஈடுசெய்யப்பட்ட உண்மையான தொகை |
|---|---|---|---|
| | உள்வருகை | வெளிச்செல்கை | |
| கொழும்புப் பல்கலைக்கழகம் | 3 | 7 | 103,330.00 |
| இலங்கை பேராதெனிய பல்கலைக்கழகம் | 3 | 13 | 1,109,402.00 |
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | - | 2 | - |
| ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 1 | 3 | 252,691.00 |
| உறுகுணைப் பல்கலைக்கழகம் | 6 | 6 | 791,225.00 |
| மொறட்டுவைப் பல்கலைக்கழகம் | 3 | 4 | - |
| இலங்கை சப்ரகமுவப் பல்கலைக்கழகம் | 2 | 4 | 731,375.00 |
| இலங்கை களனி பல்கலைக்கழகம் | 4 | 9 | 470,489.00 |
| இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் | 1 | 2 | 290,308.00 |
| கட்புல அரங்கேற்றக்கலை பல்கலைக்கழகம் | 2 | - | - |
| இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் | 2 | 4 | 231,790.00 |
| இலங்கை வயம்பப் பல்கலைக்கழகம் | - | 1 | - |
| இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் | 2 | 2 | 124,282.00 |
| வவுனியா வளாகம் | 1 | 1 | 198,990.00 |
| இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் | - | 1 | - |
| மொத்தம் | **30** | **59** | **4,303,882.00** |

## 9. உட்கட்டமைப்பு அபிவிருத்தி

2016ம் ஆண்டில் மொத்த தொகையாக ரூபா19,797.00 மில்லியனானது புதிய கட்டுமானம் மற்றும் தொடரும் செயற்றிட்டங்கள், புனரமைப்பு செயற்றிட்டங்கள், கொள்வனவுகள், புதிதாக அமைக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு செயற்றிட்டங்கள் அத்துடன் மாணவர்களுக்கான அறிவுத்திறன் உருவாக்க செயற்பாடுகள் ஆகியவற்றுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. திறைசேரியானது ரூபா16,706.49 மில்லியன் தொகையினை மாத்திரமே சிபாரிசு செய்தது, இருப்பினும் திறைசேரியினால் விதிக்கப்பட்ட பல்வேறு கட்டுப்பாடுகளின் காரணமாக பல்கலைக்கழகங்களாலும், உயர் கல்வி நிறுவனங்களும் 2016 ம் ஆண்டு இறுதியில் திறைசேரியால் விடுவிக்கப்பட்ட ரூபா15,162.39 மில்லியன் தொகையை மாத்திரமே பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. கடந்த வருடத்தில் பல்கலைக்கழகங்களிலிருந்தும், உயர் கல்வி நிறுவகங்களிலிருந்தும் 59 புதிய பிரேரணைகள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்று, அவற்றை, கவனமாக ஆராய்ந்து மதிப்பிடப்பட்டு, ஆணைக்குழுவினால் 41 பிரேரணைகள் மாத்திரமே கடந்த வருட இறுதிப்பகுதியில் அனுமதி வழங்கப்பட்டது. தேசிய திட்டமிடல் திணைக்களம் 2016ம் ஆண்டு 47 புதிய பிரேரணைகளுக்கு அனுமதி வழங்கியது. முன்னைய வருடத்தில் பெற்றுக்கொண்ட பிரேரணைகள் உள்ளடங்கலாக மொத்தமாக 49 செயற்றிட்டங்களுக்கு அமைச்சரவை 2016ம் ஆண்டு அனுமதி வழங்கியது.10 செயற்றிட்டங்கள் பௌதீக ரீதியாக 2016ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன.வருட இறுதியில் பல்கலைக்கழக முறைமையின்கீழ் ரூபா 49,148மில்லியன் பெறுமதியான 182கட்டுமான செயற்றிட்டங்கள் வடிவமைப்பு மற்றும்

நிர்மாணித்தல் செயல்முறையின் பல்வேறு மட்டங்களில் செயற்பட்டுக்கொண்டிருந்தன.அத்துடன் விமர்சனைக்குரிய ஆண்டில்ருபா 3,470.09மில்லியன் பெறுமதியுடைய 27செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுபல்கலைக்கழக முறைமைக்கு

| | 2011 | | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | செயற்றிட்டங்க ளின் எண்ணிக்கை | மொத்த பெறுமதி (ருபா. மில்லியன்) | செயற்றிட்டங்க ளின் எண்ணிக்கை | மொத்த பெறுமதி (ருபா. மில்லியன்) | செயற்றிட்டங்க ளின் எண்ணிக்கை | மொத்த பெறுமதி (ருபா. மில்லியன்) | செயற்றிட்டங்க ளின் எண்ணிக்கை | மொத்த பெறுமதி (ருபா. மில்லியன்) | செயற்றிட்டங்க ளின் எண்ணிக்கை | மொத்த பெறுமதி (ருபா. மில்லியன்) | செயற்றிட்டங்க ளின் எண்ணிக்கை | மொத்த பெறுமதி (ருபா. மில்லியன்) |
| ப.மா.ஆவினால் பெறப்பட்ட செயற்திட்ட பிரேரனைகளின் எண்ணிக்கை | 31 | 535 | 20 | 755 | 59 | 12466 | 44 | 33558 | 44 | 24776 | 59 | 36784 |
| ப.மா.ஆவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயற்திட்ட பிரேரனைகளின் எண்ணிக்கை | *24 | 8069 | *22 | 512 | *39 | 8577 | *30 | 31049 | *20 | 9943 | *41 | 23566 |
| தேசிய திட்டங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்ட பிரேரனைகளின் எண்ணிக்கை | *24 | 7762 | *23 | 306 | *39 | 8577 | *29 | 30691 | *22 | 10458 | *43 | 25478 |
| தேசிய திட்டங்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயற்திட்ட பிரேரனைகளின் எண்ணிக்கை | 5 | 4351 | *07 | 259 | *35 | 6361 | *28 | 25492 | *13 | 6478 | *47 | 26106 |
| அமைச்சரவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயற்திட்ட பிரேரனைகளின் எண்ணிக்கை | *12 | 1317 | *11 | 354 | *49 | 10885 | *11 | 14605 | *07 | 4856 | *49 | 28667 |
| நடப்பாண்டு காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை | #17 | 2496 | #11 | 514 | #*26 | 3546 | *46 | 24665 | #*07 | 3112 | #*10 | 2390 |
| தற்போது செயற்பாட்டிலுள்ள செயற்திட்டங்களின் எண்ணிக்கை | #41 | 14 662 | #44 | 672 | #*48 | 10201 | *#109 | 31233 | #*131 | 30382 | #*182 | 49148 |
| பூர்த்தியடைந்த செயற்திட்டங்களின் எண்ணிக்கை | #12 | 2223 | #13 | 778 | #*13 | 1551 | *#36 | 6762 | #*03 | 1793 | #*27 | 3470 |

கையளிக்கப்பட்டன. இது சம்பந்தமான விபரங்கள் பின்வருமாறு:

* முந்திய வருடங்களில் சமர்ப்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்களின் பிரேரனைகள் அடங்கலாக.

\# கருத்திட்டத்தின் பௌதீக நிலைமைகளை மட்டும் கருத்திலெடுக்கப்பட்டது.

## 10 தகவல் தொழில் நுட்ப அபிவிருத்தி

ப.மா.அ வின் தகவல் தொழிநுட்பபிரிவின் பிரதான கடமைகளாவன

- புதிய தகவல் தொழிநுட்ப முறைமைகளை அமைத்தல் மற்றும் செயற்படுத்தல் மற்றும் இருக்கும் முறைமைகளை இற்றைப்படுத்துதல், மென்பொருள், தொடர்பாடல் முறைமைகள், தகவல் செயன்முறைச் செயற்பாடுகள், ஆகியவற்றை உள்ளடக்கிய கணணி முறைகளின் பூர்வாங்க நிர்வாகம், வகையீடுகள் மற்றும் தேவைப்பாடுகள் ஆகியவற்றின் உருவாக்குதல்,மற்றும் நிறுவனத்தின் தகவல் தொழிநுட்ப தேவைப்பாடுகளை வழங்க தடையற்ற விதத்திலான கணணி முறைகளை பேணுதல்

- ப.மா.அ வின் கேட்டல் மற்றும் பார்வைப்புல செயற்பாடுகளை நிருவகித்தல்

- தகவல் தொழிநுட்ப நிதி வழங்கல் தேவைப்பாட்டில் பல்கலைக்கழகங்களுடன் ஒத்துழைத்தல் மற்றும் நிதி ஒதுக்கீட்டிற்காக பரிந்துரை செய்தல் மற்றும் செயற்றிட்ட அமுலாக்கத்தின் முன்னேற்றத்தினை மேற்பார்வை செய்தல்.

- ப.மா.ஆ மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றின் முழுமையான ஆளுகையை முன்னேற்றுவதற்கான நவீன தகவல் தொழிநுட்ப முறைகளை அறிமுகப்படுத்தும் நோக்குடன் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர்கள் மற்றும் பொருத்தமான அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் ஒத்துழைத்தல்

- பதவியணியினரின் புதிய ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு ஆகியவற்றுக்கான பரீட்சைச் சாதனங்கள் மற்றும் பயிற்சி ஆகியவற்றை தயார் செய்தல்

- இணையத்தளங்களைப் பேணுதலும் முகாமை செய்தலும் ; www.ugc.ac.lk, www.eugc.ac.lkபால் நிலைப் பங்கு/சமத்துவ இணையம், தர உறுதிப்பாடு மற்றும் அங்கீகார இணையம்,HETC இணையம்

- மின்னியல் ஆளுகை விண்ணப்பங்களைப் பேணுதலும் முகாமை செய்தலும் - இஸட் வெட்டுப்புள்ளிகளை இணையத்தின் ஊடாக வெளியிடுதல், எஸ்.எம்.எஸ். மற்றும் அரசாங்க தகவல் நிலையம் (1919 அழைப்பு நிலையம்), பல்கலைக்கழகங்களுக்கான ஒன்லைன் பதிவு முறை

- ஒன்லைன் கொடுப்பனவு வழிமுறைகளைப் பேணுதலும் முகாமை செய்தலும்- ஒன்லைன் பதிவு முறைக்கான கொடுப்பனவு, கல்வி சார் நோக்கங்கள் ஆட்சேர்ப்பு மற்றும் ஏனைய தேவைப்பாடுகள்

- இணைய நுழைவாயில், இலத்திரனியல் நினைவகம், நிருவாக சபைக் காரியாலய ஒதுகீட்டு முறை , நேர வருகை மற்றும் ஆளணி மென்பொருள், தகவல் தொழிநுட்ப செயற்றிட்ட முகாமைத்துவம், தகவல் தொழிநுட்ப ஒன்லைன் உதவிச் சேவை முறை, சட்டவியல் தகவல் தளம்,இலத்திரனியல் வினவல் முறை ஆகிய வியாபார விண்ணப்பங்களின் அமுலாக்கம் மற்றும் பேணுகை

மேற்குறிப்பிடப்பட்ட நோக்கெல்லைகளுக்கமைவாக தகவல் தொழிநுட்ப பிரிவானது ப.மா.ஆ வுக்கான ஒரு ஆரோக்கியமான தகவல் தொழிநுட்ப சூழலை நிர்வகிக்க பல்வேறுபட்ட செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் இவ் அறிக்கையானது 2016 அம் ஆண்டில் நடாத்தப்பட்ட குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளின் சுருக்கம் மட்டுமே ஆகும்

**மென்பொருள் அபிவிருத்திகள்**

**அ. ஒன்லைன் கொடுப்பனவு முறை**

ப.மா.ஆ வானது பங்குதாரர்களுக்கு இணையம் மூலம் கொடுப்பனவை மேற்கொள்ளும் ஒரு பாதுகாப்பான முறையை பங்குதாரர்களுக்கு வழங்குவதன் ஊடாக அதன் சேவையை முன்னேற்ற முடியும். பல்கலைக்கழக அனுமதி, வெளிநாட்டு பட்டங்களை அங்ககீகரித்தல்,தர உறுதிப்பாட்டுச் சான்றிதழ்களை வழங்குதல், மற்றும் பங்காளர்களுக்கான பயிற்சிப் பட்டறைகள்,கருத்தரங்கு மற்றும் மாநாடுகள் போன்றவற்றுக்கான பதிவுக் கட்டணம், ஆகியவை ப.மா.ஆ இத்தகைய கொடுப்பனவை செலுத்தக்கூடிய சில பரப்புக்களாகும்

**ஆ பல்கலைக்கழக ஓய்வுதிய நிதியத்துக்கான மென்பொருள்**

ப.மா.ஆ வானது பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் முகாமைத்துவத்திற்கென ஒரு கணணிமயப்படுத்தப்பட்ட முறை ஒன்றை ஏற்படுத்தும் செயன்முறையில் உள்ளது. அத்துடன் உ.க தகவல் தொழிநுட்ப பிரிவானது ஓய்வூதியப் பிரிவினால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு உதவிபுரிந்து கொண்டிருந்தது.

**இ.தபால் முறை**

ஒரு இணையத்ததள முறைமை மற்றும் தன்னியக்க தபால் அலகுச் செயற்பாடு

**ஈ சட்டவியல் மென்பொருள்**

ப.மா.ஆவின் சட்டப் பிரிவினால் ஒருங்கிணைக்கப்படும் சட்டவியல் வழக்குகளின் பிரதான தகவல்களுக்காக மென்பொருள் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. ஒன்லைன் முறை விண்ணப்பமானது சட்டவியல் வழக்குகளின் தகவல்களை மேற்கொள்வதற்கும் பதிவு செய்வதற்கும் ஒரு வசதியான வழிமுறை ஒன்றை வழங்குகின்றது.

**ஊ பல்கலைக்கழகங்கள் / உ.க.நி களில் பகிடிவதை மற்றும் வன்முறையைத் தடுப்பதற்கான ஒன்லைன் பொறிமுறை**

ஒன்லைன் முறைப்பாட்டுப் பொறிமுறையானது, பகிடிவதை, துன்புறுத்தல், அச்சுறுத்தல், கொடுமைப்படுத்துதல் ஆகிய சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகளைச் செய்வதற்காக பல்கலைக்கழக சமூகத்தின் எந்தவொரு உறுப்பினருக்காகவுமான ஒரு வழிமுறையாக அமைக்கப்பட்ட பல்கலைக்ககழக மானிய ஆணைக்குழுவின் ஒரு புதிய முன்னெடுப்பாகும். செய்யப்பட்ட எல்லா முறைப்பாடுகளும் விசாரிக்கப்படும் என்பதுடன் அத்தகைய சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்கள் ஆதரவு மற்றும் நிவாரணம் ஆகியவை அளிக்கப்படுவார்கள்

## 11 பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிதி உதவி

### 11.1 அறிமுகம்

பிரதான திட்டத்தின் கீழ் மாணவர்கள் நிதி உதவி வழங்கப்படுகின்றனர்.அவையாவன

- மஹாபொல புலமைப்பரிசில் திட்டம்
- பல்கலைக்கழக நிதி உதவித் திட்டம்

- அறக்கொடைப் புலமைப்பரிசில் திட்டம்

மேற்கூறப்பட்ட இம்மூன்று திட்டங்களின் கீழ் மஹாபொல புலமைப்பரிசில் மற்றும் அறக்கொடைப் புலமைப்பரிசிலுக்குரிய மாணவர்தெரிவு ப.மா.ஆ வில் வருடந்தோறும் மேற்கொள்ளப்படுவதுடன் நிதி உதவி தொகைக்கான தெரிவானது உரிய பல்கலைக்கழகங்கள்/ உயர் கல்விநிறுவனங்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

1 **மஹாபொல புலமைப்பரிசில் திட்டம்**

மஹாபொல புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் மஹாபொல உயர் கல்வி நம்பிக்கை நிதியமானது 2 வகையான புலமைப்பரிசில்களை வழங்குகின்றது.அதாவது மஹாபொல உயர் கல்வி திறமைப்புலமைப்பரிசில்கள் மற்றும் மஹாபொல உயர் கல்வி சாதாரணபுலமைப்பரிசில்கள்

2 **உதவு தொகைக் கொடுப்பனவு மற்றும் மஹாபொல புலமைப்பரிசில்**

மஹபொல மற்றும் உதவுதொகைக்கொடுப்பனவுகளுக்குரிய விருப்பானது உத்தேசிக்கப்பட்ட மஹபொல /உதவுதொகை பெறுனர்கள் உடன் நிலவுகின்ற புலமைப்பரிசில் தவணைக்குரிய பெறுமதி சேர்ந்து ப.மா.ஆ வுக்குகிடைக்கின்றது/ ஒதுக்கப்படுகின்றது.

| மாணவர்களுக்கு வழங்கப்பட்ட நிதி உதவிகளின் வகைகள் | மஹாபொல புலமைப்பரிசில் | | | | உதவு தொகைக | | | | அறக்கொடைப் புலமைப்பரிசில்/ஏனைய நிதி உதவிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **2013** | **2014** | **2015** | **2016** | **2013** | **2014** | **2015** | **2016** | **2013** | **2014** | **2015** | **2016** |
| மாணவர்களின் எண்ணிக்கை | 39,471 | 45,000 | 45,440 | 47,704 | 28,983 | 29,484 | 32,509 | 24,609 | 55 | 20 | 34 | 84 |
| செலுத்தப்பட்ட மொத்தத தொகை(மில்லியனில்) | 94.95 | 109.21 | 827.0 | 1,168.74 | 385.9 | 414.5 | 937.0 | 984.36 | 2.5 | 0.776 | 2 | 2.82 |

3 அறக் கொடைப் புலமைப்பரிசில்
விமர்சனைக்குரிய காலப்பகுதியில் மேற்குறிப்பிடப்பட்ட புலமைப்பரிசில்களுக்கு மேலதிகமாக பின்வரும் புலமைப்பரிசில் திட்டங்களும் செயற்பாட்டில்இருந்தன.

(அ) **மிட்சுபிஷி கோர்பரேசன் சர்வதேச புலமைப் பரிசில்கள்**

மிட்சுபிஷிகோர்பரேசன் நிறுவனத்தால் நிதியளிக்கப்படுகின்ற ஒரு புலமைப்பரிசில்திட்டத்துக்காக ப.மா.ஆ வுக்கும் மிட்சுபிசி கோர்பரேசனுக்கும் இடையில் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

<table>
<tr><td>புலமைப்பரிசிலின் பெயர்</td><td colspan="8">மிட்சுபிஷி கோர்பரேசன் சர்வதேச புலமைப் பரிசில்கள்</td></tr>
<tr><td rowspan="6">புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை</td><td colspan="2">2008/2009</td><td colspan="2">2009/2010</td><td colspan="2">2010/2011</td><td colspan="2">2011/2012</td></tr>
<tr><td colspan="2">20</td><td colspan="2">20</td><td colspan="2">30</td><td colspan="2">30</td></tr>
<tr><td>கொழு<br>10</td><td>ஜய<br>10</td><td>கொழு<br>11</td><td>ஜய<br>09</td><td>கொழு<br>15</td><td>ஜய<br>15</td><td>கொழு<br>13</td><td>ஜய<br>17</td></tr>
<tr><td colspan="2">2012/2013</td><td colspan="2">2013/2014</td><td colspan="4" rowspan="3"></td></tr>
<tr><td colspan="2">30</td><td colspan="2">30</td></tr>
<tr><td>கொழு<br>13</td><td>ஜய<br>17</td><td>கொழு<br>15</td><td>ஜய<br>15</td></tr>
<tr><td>புலமைப்பரிசிலின் தொகை</td><td colspan="8">• ஒரு மாதத்திற்கு ருபா 4,000/-. 12 மாதங்கள் (ஒரு வருடம் மட்டும்))<br>• ஒரு மாதத்திற்கு ருபா 12 மாதங்கள் (ஒரு வருடம் மட்டும்))2013/2014 கல்வியாண்டிலிருந்த அமுலாகும் வண்ணம்</td></tr>
<tr><td>தகுதிப் பிரமாணம்</td><td colspan="8">கொழும்பு பல்கலைக்கழக நிதி முகாமைத்துவ பீடத்தில் அல்லது ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவம் மற்றும் வர்த்தக பீடத்தில் கற்கை நெறிகளைத் தொடர்வதற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள்</td></tr>
</table>

## ஆ பொலிஸ் சி.டபிள்யு.சி. நலன் திட்டம்

பொலிஸ் மத்திய நலன்புரி சபை (cwc) நலன்திட்டமானது இலங்கைப் பொலிஸ் சேவையில் கடமையாற்றும் பெற்றோர்களின் மாணவர்கள்களுக்கான புலமைப்பரிசில்திட்டமாகும். நிதி உதவியானது மஹாபொல உதவி தொகை, ஏனைய எந்தவொரு புலமைப்பரிசில்திட்டத்தினாலும் நிதி உதவி பெறாத இளமானிப் பட்டதாரிகளுக்கு வழங்கப்படுகின்றன.

1980ம் ஆண்டைய இலங்கை பொலிஸ் வர்த்தமானி இல. 94-ஜுன் 25, இன் பகுதி III இன் பிரகாரம் கற்கை பாடநெறிகளின் முன்னுரிமை அடிப்படை பின்வருமாறு

1. பொறியியல
2. விவசாயம்
3. விலங்கியல் விஞ்ஞானம்
4. உயிரியல் விஞ்ஞானம்
5. கலை
6. மருத்துவம்
7. பல் மருத்துவம்
8. பௌதீக விஞ்ஞானம்
9. வர்த்தகம்

ஒரு குறிப்பிட்ட கல்வியாண்டிற்காக ஒரு பாடநெறிக்காக ஒரு புலமைப்பரிசில் மட்டுமே வழங்கப்படும்

| புலமைப்பரிசிலின் பெயர் | பொலிஸ் சி.டபல்யு.சி. நலன் திட்ட பல்கலைக்கழக புலமைப் பரிசில்கள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | **2008/2009** | | **2009/2010** | | **2010/2011** | | **2011/2012** | |
| | 03 | | 03 | | 03 | | 03 | |
| | மொர 01 | ஜய 01 | பேரா 02 | றுஹு 01 | மொர 01 | பேரா 01 | மொர 01 | ஜய 01 |
| | றுஹு 01 | | | | வய 01 | | வய 01 | |
| | **2012/2013** | | | | **2013/2014** | | | |
| | மொர01 | ஜய 01 | பேரா01 | | மொர01 | ஜய 01 | பேரா01 | |
| புலமைப்பரிசிலின் தொகை | **2009/10, 2010/11**–உரிய பாடநெறிக்கான கால எல்லைக்காக (வருடாந்தம்) 10 தவணைகளில் செலுத்தக்கூடியதாக வருடம் ஒன்றுக்கு ருபா. 20,000/-<br>**2008/09** - –உரிய பாடநெறிக்கான கால எல்லைக்காக (வருடாந்தம்) 10 தவணைகளில் செலுத்தக்கூடியதாக வருடம் ஒன்றுக்கு ருபா. 19,000/- | | | | | | | |
| தகுதிப் பிரமாணம் | ஏனைய எந்தவொரு புலமைப்பரிசில் திட்டத்தினாலும் நிதி உதவி பெறாத இலங்கைப் பொலிஸ் சேவையில் கடமையாற்றும் பெற்றோர்களின் மாணவர்கள் | | | | | | | |

## இ. மகளிர் இளம் பட்டதாரிகளுக்கான, பல்கலைக்கழக பெண்களின் இலங்கை சம்மேளனத்தின் வைர விழா கொண்டாட்ட புலமைப்பரிசில் திட்டம்-2016

| புலமைப்பரிசிலின் பெயர் | மகளிர் இளம் பட்டதாரிகளுக்கான, பல்கலைக்கழக பெண்களின் இலங்கை சம்மேளனத்தின் வைர விழா கொண்டாட்ட புலமைப்பரிசில் திட்டம்-2016 | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| புலமைப்பரிசில் வழங்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | **2014/2015**<br>84 | | | | | | |
| | கொழு 06 | பேரா 06 | ஜப 06 | கள 06 | யாழ் 06 | றுஹு 06 | மொற 06 |
| | கிப 06 | இதெகிப 06 | ரஜரட 06 | சபக 06 | வபக 06 | ஊவெ 06 | கஅப 06 |

| | |
|---|---|
| புலமைப்பரிசிலின் தொகை | ஒரு முறை செலுத்தப்படக்கூடிய வகையில் ரூபா 10,000/- பெறுமதியான புலமைப்பரிசில் |
| தகுதிப் பிரமாணம் | 1. எந்தவொரு பல்கலைக்கழகத்திலும் பதிவு செய்யப்பட்டு, மஹபொல புலமைப்பரிசிலுக்கு தகைமை பெற்ற ஆனால் மஹபொல புலமைப்பரிசில் கிடைக்கப் பெறாத பெண் மாணவர்கள் இப் புலமைப்பரிசில் திட்டத்திற்காக கவனத்தில் எடுக்கப்படுவார்கள்.<br>2. 2014க.பொ.த உ/த பரீட்சையில்(2014/2015 கல்வியாண்டு) எந்தவொரு துறையிலும் பெற்ற திறமை அடிப்படையில்<br>3 பெற்றோரது வருடாந்த வருமானம்<br>பெற்றோரது வருடாந்த வருமானம் ரூபா 350,000/-ஐ விட குறைவாக இருத்தல்<br><br>பின்வரும் சலுகைகள் மஹபொல புலமைப்பரிசிலுக்கு என பின்பற்றப்படும் பிரமாணத்தின் பிரகாரத்தைப் போல் மேலே குறிப்பிடப்பட்ட பெற்றோரது வருடாந்த வருமானத்துக்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்றன<br>அ. உச்ச தொகையாக மூன்று பிள்ளைகளைக் கொண்ட, 19 வயதுக்கு கீழ்ப்பட்ட ஒவ்வொரு பாடசாலை செல்லும் சகோதரி/ சகோதரருக்கு வருடாந்தம் 24 000/- சலுகை<br>ஆ. மஹபொல புலமைப்பரிசில் அல்லதுஉதவுதொகை பெறாத பல்கலைக்ழகத்தில் கற்கை நெறியைத் தொடரும் ஒவ்வொரு சகோதரி/ சகோதரருக்கும் வருடாந்தம் ரூபா 36000 சலுகை<br>இ. மாணவர் தொழில் செய்பவராயின் அவரது/அவளது வருமானம் பெற்றோரது வருமானத்துக்கு சேர்த்துக்கொள்ளளப்பட வேண்டும் |

ஈ டயலொக் தொழில்நுட்ப புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம்

<table>
<tr><td>புலமைப்பரிசிலின் பெயர்</td><td colspan="9">டயலொக் திறமைப்புலமைப்பரிசில்</td></tr>
<tr><td rowspan="6">புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை</td><td colspan="2">2008/2009</td><td colspan="2">2009/2010</td><td colspan="3">2010/2011</td><td colspan="2">2011/2012</td></tr>
<tr><td colspan="2">27</td><td colspan="2">27</td><td colspan="3">27</td><td colspan="2">27</td></tr>
<tr><td>மொரா 24</td><td>பேரா 03</td><td>மொரா 23</td><td>பேரா 04</td><td>மொரா 21</td><td colspan="2">பேரா 06</td><td>மொரா1 9</td><td>பேரா08</td></tr>
<tr><td colspan="2">2013/2014</td><td colspan="3">2014/2015</td><td colspan="4">2015/2016</td></tr>
<tr><td colspan="2">27</td><td colspan="3">27</td><td colspan="4">27</td></tr>
<tr><td>மொரா 24</td><td>பேரா 03</td><td>மொரா 23</td><td>பேரா 02</td><td>யாழ் 02</td><td>மொரா 22</td><td>பேரா 02</td><td>றுஹுº 01</td><td>யாழ் 02</td></tr>
<tr><td>புலமைப்பரிசிலின் தொகை</td><td colspan="9">மாதாந்தம் ருபா. 4,000/-பாடநெறியைப் பொறுத்து 36 - 60 மாதங்களுக்கு 10 தவணைகளுக்கு செலுத்தக்கூடிய வகையில்</td></tr>
<tr><td>தகுதிப் பிரமாணம்</td><td colspan="9">1.) 2011 க.பொ.த (உ/த)வில் முதல்அமர்வில் பௌதீக விஞ்ஞான துறையில் அதிகூடிய இஸட் புள்ளியைப் பெற்ற மாணவர்<br>2.) 2011 க.பொ.த (உ/த)வில் முதல்அமர்வில் பௌதீக விஞ்ஞான துறையில் அதிகூடிய இஸட் புள்ளியைப் பெற்ற பெண் மாணவர்<br>3.) 2011 க.பொ.த (உ/த)வில் முதல் அமர்வில் பௌதீக விஞ்ஞான துறையில் இலங்கையின் 25 நிருவாக மாவட்டங்களிலும் ஒவ்வொரு அதிகூடிய இஸட் புள்ளியைப் பெற்ற 25 மாணவர்கள்</td></tr>
</table>

**12. கௌரவ உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் மற்றும் கௌரவ உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஆகியோருடனான முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள்**

பல்கலைக்கழக கல்வி முறைமையை சீராக்குதல் மற்றும் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை மேற்பார்வை செய்தல் ஆகியவற்றை இலக்காக கொண்டு கல்வி சார், நிர்வாகம் சார்பான மற்றும் வேறு சாராரை உள்ளடக்கிய பல்கலைக்கழக சமூகத்துடன் இணைந்து, கௌரவ உயர் கல்வி ராஜாங்க அமைச்சர் மற்றும் கௌரவ உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஆகியோர் தொடர்ச்சியாக சந்திப்புகளை மேற்கொண்டனர்.

2016இல் சில சந்திப்புகள் நடைபெற்றதுடன் பின்வரும் குழுக்களுடன் இச்சந்திப்புக்கள் இடமபெற்றன.

1. தொழிநுட்பத்துறை செயற்றிட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம் 2016 மே மாதம் 10ம் திகதி நடைபெற்றது.( ஸ்ரீஜப, யாப, றுப,கிப, இதெகிப,ரஜப, சபக,வபக,ஊவெப, ஆகியவற்றின் உப வேந்தர்கள் மற்றும் வவுனியா வளாகத்தலைவர் ஆகியோருடன்)

2. பல்கலைக்கழகங்களுக்கான 5 வருட அபிவிருத்தி திட்டம் பற்றி கலந்துரையாடுவதற்கும் பல்கலைக்கழக அனுமதிச் செயன்முறையை விரைவு படுத்துவதற்குமான சந்திப்பு 2016.01.12 ம் திகதி நடைபெற்றது.
3. HETC செயற்றிட்டம் - ப.மா.ஆ வின் செயற்றிட்ட விளைவுகள் மற்றும் திட்டங்களின் பேண்தகைமைகளை அளவிடுவதற்கு உலக வங்கியுடனான செயற்றிட்டம் ஒன்று 2016.01.13 ம் திகதி நடைபெற்றது.

4. தொழிநுட்பத்துறையின் கீழ் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம் உயர் கல்வி அமைச்சின் இராஜாங்க அமைச்சருடன் 2016.01.18 ம் திகதி நடைபெற்றது.

5. தொழிநுட்பத்துறை பாடங்களுக்காக மாணவர்களை அனுமதிப்பதற்கான உப வேந்தருடனான கூட்டம்2016.03.01 ம் திகதி நடைபெற்றது.

6. பல்கலைக்கழகங்களின் திணைக்களத்தலைவர்கள் வளாகத் தலைவர்கள் மற்றும் பணிப்பாளர்கள் ஆகியோருடனான கௌரவ இராஜாங்க அமைச்சின் சந்திப்பு 2016.03.08 ம் திகதி நடைபெற்து.

7. வினைத்திறனான ஆசிரியர் அபிவிருத்தி செயற்றிட்டம் ஊடாக தரமான கல்வி நிகழ்ச்சியானது (கல்வி இராஜாங்க அமைச்சர் மற்றும் யுனெஸ்கோ நிறுவன பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கிடையில் 2016.08.17 ம் திகதி நடைபெற்றது.

8. தாதியர் பீடத்தை தாபிப்பது பற்றிய கலந்துரையாடலுக்கான சந்திப்பு 2016.02.16 ம் திகதி அன்று நடைபெற்றது.

9. தொழிநுட்பத்துறை செயற்றிட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம் 2016.09.14 ம் திகதி நடைபெற்றது.(ஸ்ரீஜப, யாப, றுப,கிப, இதெகிப,ரஜப, சபக,வபக,ஊவெப, ஆகியவற்றின் உப வேந்தர்கள் மற்றும் வவுனியா வளாகத்தலைவர் ஆகியோருடன்)

10. நடைபெற்றுக்கொண்டிருக்கும் கட்டுமான செயறிட்டங்கள் மற்றும் மூலதன செயற்றிட்டப் பாவனை தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம் 2016.10.13 ம் திகதி நடைபெற்றது.

11 2017 ஆம் ஆண்டுக்கான கொள்வனவுத்திட்டம் மற்றும் வருடாந்த நிதி ஒதுக்கீட்டுக்கான சந்திப்பு உப வேந்தர்கள்,வளாகத் தலைவர்கள் பணிப்பாளர்கள், அமைச்சு மற்றம் ஆணைக்குழு உறுப்பினர்கள் ஆகியோருடன் ப.மா.ஆவின் நிருவாக சபைக் காரியாலயததில் 2016.12.28ம் திகதி நடைபெற்றது.

## 13 சட்ட விவகாரங்கள்

### 13.1 புதிய சட்டம்

விமர்சனைக்குரிய ஆண்டு காலப்பகுதியில் ஆணைக்குழுவின் சட்டப் பிரிவினால் 24 கட்டளைகளையும் 03 கட்டளைச் சட்டத்தினையும் பிரசுரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் அது 24 நீதிமன்ற வழக்குகளையும் கையாண்டது.

#### 13.1.1 வருடகாலத்தில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகள்

- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 27(1)பிரிவின் கீழ் செய்யப்பட்ட, இலங்கை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் மனித நேயங்கள் பீடத்தின் ஆங்கிலப் பிரிவை, ஆங்கிலம் மற்றும் மொழியியல் திணைக்களமாக மீள் பெயரிடும் கட்டளை மற்றும் 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 27(1) பிரிவின் கீழ் செய்யப்பட்ட, இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் உள்ள விலங்கியல் திணைக்களத்தை விலங்கியல் மற்றும் சுகாதார விஞ்ஞானங்கள் திணைக்களமாக மீள் பெயரிடும் கட்டளை ஆகியவை 2016 ஜனவரி 08 ஆம் திகதிய விஷேட அரசாங்க வர்த்தமானி இல 1948/58 ல் பிரசுரிக்கப்பட்டது.

- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 27(1)பிரிவின் கீழ் செய்யப்பட்ட, இலங்கை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் தொழிநுட்ப பீடம் மற்றும் பொறியியல் பீடம் ஆகிய இரண்டு பீடங்களை நிறுவுவதற்கான கட்டளை 2016 ஜனவரி 08 ஆம் திகதிய விசேட அரசாங்க வர்த்தமானி இல 1948/59 ல் பிரசுரிக்கப்பட்டது.

- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 27(1)பிரிவின் கீழ் செய்யப்பட்ட இலங்கை றுஹுணு பல்கலைக்கழகத்தில் உள்ள மீன்பிடி மற்றும் கடல்விஞ்ஞானங்கள் மறறும் தொழிநுட்ப பீடத்தில்உள்ள நன்னீரியல் திணைக்களத்தை நன்னீரியல் திணைக்களம் மற்றும் நீர் தொழிநுட்ப திணைக்களம் என மீள் பெயரிடும் கட்டளை ஆகியவை 2016 ஜனவரி 08 ஆம் திகதிய விஷேட அரசாங்க வர்த்தமானி இல 1948/60 ல் பிரசுரிக்கப்பட்டது.

- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 27(1)பிரிவின் கீழ் செய்யப்பட்ட இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் உள்ள பூகோளவியல் பீடத்தில் உள்ள வரைபடவியல் மற்றம் தகவல் முறைமைத் திணைக்களம் என்பதை தொலை உணர்வு மற்றம் புவியயில் தகவல்முறைமைத் திணைக்களமாக மீள் பெயரிடும் கட்டளை ஆகியவை

2016 பெப்ரவரி 19 ஆம் திகதிய விஷேட அரசாங்க வர்த்தமானி இல 1954/45 ல் பிரசுரிக்கப்பட்டது.

- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 27(1)பிரிவின் கீழ் செய்யப்பட்ட இலங்கை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் மனித நேயங்கள் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தில் குற்றவியல் மற்றும் குற்றவியல் நீதி ஆகிய புதிய திணைக்களத்தை தாபிப்பதற்கான கட்டளையானது 2016 பெப்ரவரி 19 ஆம் திகதிய விஷேட அரசாங்க வர்த்தமானி இல 1954/44 ல் பிரசுரிக்கப்பட்டது.

- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 27(1)பிரிவின் கீழ் செய்யப்பட்ட இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தில் விவசாயம் மற்றும் பயிர்ச்செய்கை முகாமைத்துவ பீடத்தில் மருத்துவ பீடம் மற்றும் உயிரியல் முறைப்பொறியியல் பீடம் என்ற புதிய பிரிவு என்பவற்றை தாபிப்பதற்கான கட்டளையானது 2016 பெப்ரவரி 19 ஆம் திகதிய விஷேட அரசாங்க வர்த்தமானி இல 1954/43 இல் பிரசுரிக்கப்பட்டது.

- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 27(1)பிரிவின் கீழ் செய்யப்பட்ட இலங்கை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் தொழிநுட்ப பீடம் ஒன்றைதாபிப்பதற்கான கட்டளையானது 2016 பெப்ரவரி 29 ஆம் திகதிய விஷேட அரசாங்க வர்த்தமானி இல 1960/9 இல் பிரசுரிக்கப்பட்டது.

- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 27(1)பிரிவின் கீழ் செய்யப்பட்ட இலங்கை பேராதெனிய பல்கலைக்கழகத்தில் இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தில் அடிப்படை விஞ்ஞானங்கள் பிரிவு ஒன்றை தாபிப்பதற்கான கட்டளையானது 2016 மார்ச் 29 ஆம் திகதிய விசேட அரசாங்க வர்த்தமானி இல 1960/8 இல் பிரசுரிக்கப்பட்டது.

- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 20(4) பிரிவின் கீழ் செய்யப்பட்ட பேராசிரியர் ஜயந்த வெலிஹின்ட என்பவரை கம்பஹா விக்ரமராய்ச்சி ஆயுர்வேத நிறுவகததின் பணிப்பாளர் பதவியுடன் சேர்த்து திறன் வாய்ந்த அதிகாரியாக நியமிப்பதற்கான கட்டளை 2016 மார்ச் 29 ஆம் திகதிய விஷேட அரசாங்க வர்த்தமானி இல 1960/10 இல் பிரசுரிக்கப்பட்டது.

- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 20(4) பிரிவின் கீழ் செய்யப்பட்ட இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திறன் வாய்ந்த அதிகாரி நியமனத்தை இரத்துச் செய்வதற்கான கட்டளை 2016 மார்ச் 29 ஆம் திகதிய விஷேட அரசாங்க வர்த்தமானி இல 1960/11 இல் பிரசுரிக்கப்பட்டது.

- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 27(1)பிரிவின் கீழ் செய்யப்பட்ட இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் கலை மற்றும் கலாச்சார பீடத்தில் பொருளியல் மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களத்தை தாபிப்பதற்கான கட்டளையானது 2016 ஏப்ரல் 26 ஆம் திகதிய விஷேட அரசாங்க வர்த்தமானி இல 1964/11 இல் பிரசுரிக்கப்பட்டது.

- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 27(1)பிரிவின் கீழ் செய்யப்பட்ட இலங்கை றுஹுணு பல்கலைக்கழகத்தில் தொழிநுட்ப பீடம் ஒன்றை தாபிப்பதற்கான கட்டளையானது 2016 பெப்ரவரி 29 ஆம் திகதிய விஷேட அரசாங்க வர்த்தமானி இல 1964/10 இல் பிரசுரிக்கப்பட்டது.

- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 20(4) பிரிவின் கீழ் செய்யப்பட்ட பேராசிரியர் ஜயந்த வெலிஹின்ட என்பவரை கம்பஹா விக்ரமராய்ச்சி ஆயர்வேத நிறுவகததின் பணிப்பாளர் பதவியுடன் சேர்த்து திறன் வாய்ந்த அதிகாரியாக நியமிப்பதற்கான கட்டளை 2016 மே 30 ஆம் திகதிய விஷேட அரசாங்க வர்த்தமானி இல 1969/2 இல் பிரசுரிக்கப்பட்டது.

- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 27(1)பிரிவின் கீழ் செய்யப்பட்ட இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் தொழிநுட்ப பீடம் ஒன்றை தாபிப்பதற்கான கட்டளையானது 2016ஜுன்29 ஆம் திகதிய விஷேட அரசாங்க வர்த்தமானி இல1973/28 இல் பிரசுரிக்கப்பட்டது.

- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 27(1)பிரிவின் கீழ் செய்யப்பட்ட இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தில் பிரயோக விஞ்ஞான பீடத்தில் ஒரு புதிய பொறியியல் தொழிநுட்ப பீடம் ஒன்றை தாபிப்பதற்கான கட்டளையானது 2016 ஜுலை 01 ஆம் திகதிய விசேட அரசாங்க வர்த்தமானி இல 1973/76 இல் பிரசுரிக்கப்பட்டது.

- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 27(1)பிரிவின் கீழ் செய்யப்பட்ட இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தில் மருத்துவ கல்வி, மருத்துவ மனித நேயங்கள், மற்றும் இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் ஆகிய புதிய பீடங்களையும்,கலை கலாச்சார பீடத்தில் பௌத்த கற்கைகள் என்ற புதிய பீடம் ஒன்றையும் தாபிப்பதற்கான கட்டளையானது 2016 ஆகஸ்ட்09 ஆம் திகதிய விஷேட அரசாங்க வர்த்தமானி இல 1979/20 இல் பிரசுரிக்கப்பட்டது.

- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 20(4) பிரிவின் கீழ் செய்யப்பட்ட பேராசிரியர் ஜயந்த வெலிஹின்ட என்பவரை கம்பஹா விக்ரமராய்ச்சி ஆயுர்வேத நிறுவகததின் பணிப்பாளர் பதவியுடன் சேர்த்து திறன் வாய்ந்த அதிகாரியாக நியமிப்பதற்கான கட்டளை 2016மே30 ஆம் திகதிய விஷேட அரசாங்க வர்த்தமானி இல 1969/2 இல் பிரசுரிக்கப்பட்டது.

- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 27(1)பிரிவின் கீழ் செய்யப்பட்ட இலங்கை பேராதெனிய பல்கலைக்கழகத்தின மருத்துவ பீடத்தில் உள்ள மயக்க மருந்தியல் திணைக்களத்தை மயக்க மருந்தியல் மற்றும் தீவிர கண்ணாணிப்பு திணைக்களமாக மீள் பெயரிடும் கட்டளையானது 2016ஒக்டொபர்26 ஆம் திகதிய விசேட அரசாங்க வர்த்தமானி இல 1990/16 இல் பிரசுரிக்கப்பட்டது.

- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 27(1)பிரிவின் கீழ் செய்யப்பட்ட இலங்கை களனி பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் ஒரு புதிய மருத்துவ கல்வி திணைக்களத்தை தாபிப்பதற்கான

கட்டளையானது 2016 நவம்பர் 03 ஆம் திகதிய விஷேட அரசாங்க வர்த்தமானி இல 1991/43 ல் பிரசுரிக்கப்பட்டது.

- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 27(1)பிரிவின் கீழ் செய்யப்பட்ட இலங்கை மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தில் ஒரு புதிய மொழிகள் திணைக்களத்தை தாபிப்பதற்கான கட்டளையானது 2016 நவம்பர் 03 ஆம் திகதிய விசேட அரசாங்க வர்த்தமானி இல 1991/44 ல் பிரசுரிக்கப்பட்டது.

- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 27(1)பிரிவின் கீழ் செய்யப்பட்ட இலங்கை றுஹுணு பல்கலைக்கழகத்தின மருத்துவ பீடத்தில் ஒரு புதிய மயக்க மருந்தியல் திணைக்களத்தைதாபிக்கும் கட்டளையானது 2016டிசம்பர்01 ஆம் திகதிய விசேட அரசாங்க வர்த்தமானி இல 1995/26 இல் பிரசுரிக்கப்பட்டது.

- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 27(1)பிரிவின் கீழ் செய்யப்பட்ட இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின்பிரயோக விஞ்ஞான பீடத்தில் ஒரு புதிய நனோ விஞ்ஞான தொழிநுட்ப திணைக்களத்தை தாபிக்கும் கட்டளையானது 2016 டிசம்பர் 01 ஆம் திகதிய விஷேட அரசாங்க வர்த்தமானி இல 1995/25 இல் பிரசுரிக்கப்பட்டது

- 2016 டிசம்பர் 01 ஆம் திகதிய விஷேட அரசாங்க வர்த்தமானி இல 1995/24 இல் பிரசுரிக்கப்பட்டது

- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 27(1)பிரிவின் கீழ் செய்யப்பட்ட இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை மற்றும் கலாச்சார பீடத்தில் ஒரு புதிய மெய்யியல் மற்றும் பெறுமானக் கற்கைகள் திணைக்களத்தை தாபிக்கும் கட்டளையானது 2016 டிசம்பர் 01 ஆம் திகதிய விசேட அரசாங்க வர்த்தமானி இல 1995/27 இல் பிரசுரிக்கப்பட்டது

### 13.1.2 வருட காலத்தில் பிறப்பிக்கப்பட்ட கட்டளைச் சட்டம்

- 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 91 ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 1 ம் இலக்க பல்கலைக்கழக சேமலாப நிதிய (திருத்தம்) கட்டளைச் சட்டமானது 2016 ஆகஸ்ட் 25 ஆம் திகதிய விஷேட அரசாங்க வர்த்தமானி இல 1981/79 இல் பிரசுரிக்கப்பட்டது

- 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 140 ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 2 ம் இலக்க சுதேச மருத்துவ நிறுவக (திருத்தம்) கட்டளைச் சட்டமானது 2016 ஒக்டோபர் 13 ஆம் திகதிய விஷேட அரசாங்க வர்த்தமானி இல 1988/22 இல் பிரசுரிக்கப்பட்டது

- 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24அ மற்றும் 24 ஆ பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும்18 ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 3 ம் இலக்க கம்பஹா விக்ரமராய்ச்சி ஆயுர்வேத நிறுவக (திருத்தம்) கட்டளைச் சட்டமானது 2016 ஒக்டோபர் 13 ஆம் திகதிய விசேட அரசாங்க வர்த்தமானி இல 1988/22 இல் பிரசுரிக்கப்பட்டது

### 13.1.3 நீதிமன்ற வழக்குகள்

விமர்சனைக்குரிய ஆண்டு காலப்பகுதியில் பல்கலைக்கழக மானிய ஆனைக்குழுவுக்கு எதிராக சட்டமன்ற நீதிமன்றம் மற்றும் நியாயாதிக்க சபைகளில் தொகுக்கப்பட்ட பின்வரும் வழக்குகளை ஆணைக்குழுவின் சட்டப்பிரிவு கையாண்டது.

| | |
|---|---|
| மீஉயர் நீதிமன்றம் - | 24 வழக்குகள் |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் - | 24 வழக்குகள் |
| மாவட்ட நீதிமன்றம் - | 03 வழக்குகள் |
| தொழில் நியாயாதிக்க சபை - | 02 வழக்குகள் |
| நடுத்தீர்ப்பு வழக்கு - | 01 வழக்குகள் |
| பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீடு சபை - | 18 வழக்குகள் |

### 13.1.4 ஏனைய செயற்பாடுகள்

ஆசிரியர்கள் தவிர்ந்த ஏனைய ஊழியர்களுக்கான ஓய்வுக்கான விருப்பு வயது தொடர்பான பல்கலைக்கழக சட்டத்தின் 75 வது பிரிவுக்கு ஒரு மாற்றத்தை உள்ளடக்கிய பல்கலைகக்ழக சட்டத்துக்கான திருத்தம் பாராளுமன்றிற்கு அனுப்பப்பட்டதுடன் திருத்தம் வெளியிடப்பட்டது.

## 14 பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீடுகள் சபை

பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீடுகள் சபையானது விமர்சனத்துக்குரிய ஆண்டு காலப்பகுதியில் 18 அமர்வுகளை மேற்கொண்டுள்ளது.2016 ஆம் ஆண்டில் இருபத்திரண்டு (22) மேன்முறையீடுகள் பதிவு செய்யப்பட்டன. 14 மேன்முறையீடுகள் மீதான கட்டளைகள் வழங்கப்பட்டது.அவற்றில் தள்ளுபடியாகிய மேன்முறையீடுகள் 08 மற்றும் அனுமதிக்கப்பட்டவை 02 ஆகும். இரண்டு மேன்முறையீடுகள் விலகிக்கொண்டன.ஒரு மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டதுடன் ஒரு மேன்முறையீடு தீர்த்துவைக்கப்பட்டது. எந்தவொரு ஆரம்பக் கட்டளையும் பிறப்பிக்கப்படவிலலை என்பதுடன் ஒதுக்கி வைக்கப்படவும் இல்லை. மூன்று கட்டளைகள் எழுதப்பட்டுக் கொண்டிருப்பதுடன் இடைக்காலக் கட்டளைகள் பிற்ப்பிக்கப்படவில்லை.ஆண்டின் இறுதியில் 24 மேன்முறையீடுகள் நிலுவையிலிருந்தன.பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீடு சபை வழங்கிய 01 கட்டளைகளுக்கு எதிராக மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் 01 வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.உச்ச நீதி மன்றத்திற்கு எதிராக எந்த வழக்கும் தாக்கல் செய்யப்படவில்லை.

## 15 நிதி முகாமைத்துவம் மற்றும் மத்திய உள்ளக கணக்காய்வு ஆகியவற்றினை முன்னேற்றுதல்

**மத்திய உள்ளக கணக்காய்வு பிரிவின் கட்டமைப்பு மற்றும் செயற்பாடுகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தாபனக் கோவையின் 1ம் அத்தியாயத்தின் 3ம் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் உள்ளக கணக்காய்வு ஒப்படைகள் மற்றும் விசாரணைகள் ஆகிய இலக்குகள் ஒப்படைக்கப்பட்டுள்ள பிரிவே **மத்திய உள்ளக கணக்காய்வு** பிரிவாகும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மறறும் உயர் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் நிருவாகத்தின் எல்லா அம்சங்கள் மற்றும் செயற்பாட்டு

நடவடிக்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய வருடத்துக்கான கணக்காய்வு நிகழ்ச்சித்திளட்டம் தயாரிக்கப்படுகிறது.பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மத்திய உள்ளக கணக்காய்வு பிரிவானது முறைமைகளுக்கிடையில் நல்லாட்சியைப் பேணுவதற்காக பல்கலைக்கழகங்களின் மத்திய உள்ளக கணக்காய்வு பிரிவுகளுடன் ஒருங்கிணைந்து செயற்படுகின்றது.

ப.மா.ஆ வின் உள்ளக கணக்காய்வாளர் ஒரு அவதானிப்பாளராக பல்கலைக்கழகங்கள் நிறுவனங்கள் ஆகியவற்றின் கணக்காய்வுக் குழுச் சந்திப்புக்களில் கலந்து கொள்கிறார்.

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுச் சந்திப்புக்கள்**

கணக்காய்வுக் குழுவானது,பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒரு உப குழுவாகும். இக்குழுவானது ஒரு சுதந்திரமான நிறைவேற்றுத் தரம் சாராப் பணிப்பாளரால் தலைமை தாங்கப்படும் மூன்று நிறைவேற்றுத் தரம் சாராப் பணிப்பாளர்களை உள்ளடக்கிய குழுவாகும்.

கணக்காய்வுக் குழுவானது, ஏற்கனவே காணப்படும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளை மதிப்பீடு செய்தல், நடைமுறைத் தேவைப்பாடுகளுடன் தொடர்புபட்டு இருக்கின்ற மாற்றங்களை வேண்டி நிற்கும் விடயங்களை மதிப்பிடல்,உள்ளக கணக்காய்வு செயற்பாட்டை வழிநடாத்துதல் ஆகிய செயற்பாடுகளை மீள்நோக்குதல் அத்துடன் செயல் வினைத் திறனை மீளாய்வு செய்தல் ஆகிய கடமைகள் ஒப்படைக்கப்பட்ட ஒரு அமைப்பாகும்.

தலைவரை உளள்டக்கிய 2/3 இன் வேண்டப்பட்ட அமைப்பை திருப்திப்படுத்திய ஆறு கணக்காய்வுக் குழுக்கள் 2016 டிசம்பர் 31 உடன் முடிவடைந்த வருட காலப்பகுதிக்குள் நடைபெற்றன. ப.மா.ஆ வின் உள்ளக கணக்காய்வாளர் கணக்காய்வுக் குழுவின் செயலாளராக சந்திப்புகளை நடாத்துவார். ஒரு வெளியக கணக்காய்வாளராக செயற்படும் கணக்காய்வாளர் நாயக திணைக்களத்திலிருந்தான பிரதிநிதி ஒருவர் அவதானிப்பாளராக கடமையாற்ற சந்திப்புக்காக அழைக்கப்பட்டார்.அத்துடன் ப.மா.ஆ வின் செயலாளர், கணக்காய்வாளர் ஆகியோரும் சந்திப்புக்காக அழைக்கப்பட்டனர்.

**பாராளுமன்றத்தின் பொது முயற்சிகள் குழு சந்திப்பகள்**

பாராளுமன்றத்தின் பொது முயற்சிகள் குழு சந்திப்புகள் தொடர்பான மத்திய உள்ளக கணக்காய்வுப் பிரிவானது 15 பல்கலைக்கழகங்கள் மற்றும் 18 நிறுவனங்கள்ஆகியவை தொடர்பான விடயங்களை ஒருங்கிணைப்பதுடன் பாராளுமன்றத்தின் பொது முயற்சிகள் குழுவினால் வேண்டப்பட்ட தகவல்களை வழங்குவதற்கும் உதவிபுரிகின்றது.

**முன் கணக்காய்வு**

கொடுப்பனவுகளின் துல்லியத் தன்மைகளை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் பரப்புக்களில் முன் கண்காய்வுகள் நடத்தப்பட்டன.

- சேமலாப நிதிய விடுவிப்பு
- அறக்கொடைக் கொடுப்பனவு
- ஓய்வூதிய விடுவிப்பு

**உள்ளக கணக்காய்வு அறிக்கைகள்**

பல்கலைக்கழகக மானியங்கள் ஆணைக்குழுவின் மத்திய உள்ளக கணக்காய்வுப் பிரிவானது 18 உள்ளக கணக்காய்வு அறிக்கைகளை வெளியிட்டது. இதில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தொடர்பாக 7 அறிக்கைளும் உயர் கல்வி நிறுவனங்கள் தொடர்பாக 11 அறிக்கைகளுமாகும்.

**பயிற்சிப் பட்டறைகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்**

பல்கலைக்கழக முறைமையின் எல்லாப் பதவித் திறத்தினரதும் நன்மைக்காக நிலையான சொத்துப் பதிவு மற்றும் கட்டுமான ஒப்பந்தங்கள் ஆகியவற்றின் தயாரிப்புக்காக முறையே இரண்டு பயிற்சிப் பட்டறைகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்டன. இதற்கு மேலதிகமாக பல்கலைக்கழகங்கள்/ நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு இணைத்துக் கொளள்ளப்பட்ட ஊழியர்களுடன் அறிவைப் பகிர்ந்து கொள்வதற்காக இரண்டு ஊடாட்ட அமர்வுகள் நடாத்தப்பட்டன.

## 16 ஆய்வுகள் வெளியீடுகள் மற்றும் ஆராய்ச்சிக் கற்கைகள்

- "இலங்கை பல்கலைக்கழக புள்ளிவிபரவியல் 2015" எனப்படும் அத்தொடரினது பதினான்காவது தொகுதி வெளியீடு ஜூன் மாதம் பிரசுரிக்கப்பட்டது.
- "இலங்கை தரச் சட்டக வேலை 2015" எனப்படும் அத்தொடரினது பதின்மூன்றாவது தொகுதி வெளியீடு 2016 ம் ஆண்டு ஜுலை மாதம் பிரசுரிக்கப்பட்டது
- 2015 இல் பல்கலைக்கழகங்களின் மாணவர் விடுதிகளின் தற்போதைய நிலைமை ஆராயப்பட்டு 2015 இல் ஆணைக்குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.
- உ.க.நி களில் ஒப்பந்த முறிவு தொடர்பாக உத்தியோகத்தர்களிடமிருந்து பெற வேண்டிய தொகையை அறவிடுவதற்காக மேற்கொள்ளபட்ட நடவடிக்கையின் முன்னேற்றத்தை ஆய்வு செய்து 2015 இல் ஆணைக்குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.
- 2015 ஆம் ஆண்டு கல்வியாண்டிற்கான பல்கலைக்ககழகங்களின் அலகு மீண்டெழும் செலவானது ஆராயப்பட்டு, அதன் அறிக்கையாகிய 'பல்கலைக்ககழகங்களின் ஒரு இளங்கலை மாணவருக்குரிய அலகு மீண்டெழும் செலவின் ஆய்வு- 2015' ஆனது முகாமைத்துவக்குழு மற்றும் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.
- 2016 இல் உ.க.நி களில் மாணவர் விடுதிகளின் தற்போதைய நிலைமை ஆராயப்பட்டு முகாமைத்துவக்குழு மற்றும் ஆணைக்குழுவுக்கு அறிக்கை சம்ரப்பிக்கப்பட்டது.
- ஆய்வு மற்றும் அபிவிருத்தி மதிப்பீட்டுச் சுருக்கம்-2014 அறிக்கையானது முகாமைத்துவக்குழு மற்றும் ஆணைக்குழுவுக்கு சம்ரப்பிக்கப்பட்டது.
- தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மதிப்பீடு

(அ) 2014 மதிப்பீடானது பூரணப்படுத்தப்பட்டு உரிய தரவுகள் NSFக்கு அனுப்பப்பட்டன.

(ஆ) 2015 மதிப்பீடானது பல்கலைக்கழகத்தின் முக்கிய குறிப்புகளின் உதவியுடன் நடாத்தப்பட்டு அதன் சுருக்க அறிக்கையானது NSFக்கு 2017 ல் சமர்ப்பிக்கப்பட்டது. பல்கலைக்கழகங்களில் இடைவெளி மதிப்பீடானது நடாத்தப்பட்டு அதன் தகவல்கள் இன்னும் பெறப்பட வேண்டியுள்ளன.

- 2008/09 உள்ளெடுக்கைக்கான இறுதி எம்.பி.பி.எஸ் (மீட்டல்) பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு எம்.பி.பி.எஸ் பட்டதாரிகளின் இறுதி திறமை ஒழுங்கு வரிசைப்பட்டியல் தொகுக்கப்பட்டதுடன், உள்ளகப் பயிற்சி நியமன நோக்கத்திற்காக சுகாதார அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

- 2009/10 உள்ளெடுக்கைக்கான இறுதி எம்.பி.பி.எஸ் (பிரதான) பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு எம்.பி.பி.எஸ் பட்டதாரிகளின் இறுதி திறமை ஒழுங்கு வரிசைப் பட்டியல் தொகுக்கப்பட்டதுடன் உள்ளகப் பயிற்சி நியமன நோக்கத்துக்காக சுகாதார அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

- 2007/08உள்ளெடுப்பின் மீட்டல் பரீட்சையை அடிப்படையாகக் கொண்ட ஆயுர்வேத வைத்தியர்களுக்கான திறமை ஒழுங்கு வரிசைப்பட்டியல் தயாரிக்கப்பட்டு ஆயுர்வேத திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

- சித்த மருத்துவத்திற்கான பொதுத் திறமை ஒழுங்கு வரிசைப் பட்டியல் தயாரிப்பதற்கான முறை ஏற்படுத்தப்பட்டு,2007/08உள்ளெடுக்கைக்கான இறுதிப் பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு சித்த மருத்துவ வைதத்தியர்களுக்கான இறுதி திறமை ஒழுங்கு வரிசைப்பட்டியல் ஆயுர்வேத திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

- ப.மா.ஆ வுக்கான நிறுவக பெறுபேற்றுச் சட்டக வேலைகள் தயாரிக்கப்பட்டு செயற்றிட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டது. அத்துடன் 2016 ஆம் ஆண்டிற்கான 3வது கால் பகுதி முன்னேற்ற விபரம் திட்டமிடல் பணிப்பாளரின் ஆலோசனையுடன் சமர்ப்பிக்கப்பட்டது.
- நிலையான குழுவுக்கான'உயர் கல்வித் தகவலின் முக்கியத்துவம்' தொடர்பான முன்மொழிவானது திட்டமிடல் பணிப்பாளரால் முன்னெடுக்கப்பட்டது.2016 டிசம்பரில் மனித நேயங்கள் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் மற்றும் பல் விஞ்ஞானங்கள் தொடர்பான நிலையான குழுக்களின் இரண்டு முன்மொழிவுக்காக வேண்டப்பட்ட முன்மொழிவுகளின் அபிவிருத்தியுடனான உதவி வழங்கப்பட்டது.

- 2015 ஆம் ஆண்டிற்கான யுனெஸ்கோ நிறுவன புள்ளி விபரவியலுக்கான உயர் கல்வித் தகவல் பூரணப்படுத்தப்பட்டு கையளிக்கப்பட்டது.

- ப.மா.ஆ விற்கான அரச மற்றம் அரை அரசாங்க நிறுவனங்களின் தொழிற்றிறன் தொகை மதிப்பீடு-2016, நவம்பர்17 ம் திகதி வெற்றிகரமாக நடாத்தப்பட்டு , சுருக்க அறிக்கைகள் மற்றும் தொகை மதிப்பீட்டு வினாக் கொத்துகள் தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

## 17 பால் நிலைப்பங்கு /சமத்துவத்துக்கான நிலையம் (பா.ச.நி)

**பின்னணி**

இன்று பல்கலைக்கழக வாழ்வை மிகவும் பாதிக்கக் கூடிய மிகவும் அடிப்படையான பிரச்சினையாக காணப்படுவது வன்முறையாகும். பகிடிவதை சம்பிரதாயமானது ஒரு அடிமைத்தனக் கலாச்சாரம்,அர்ப்பணிப்பு மற்றும் மனநிறைவை விதிக்கின்றது.பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவானது 2015 ஒக்டோபரில் நியமிக்கப்பட்ட,பால் நிலைப்பங்கு /சமத்துவத்துக்கான நிலையான குழுவினூடாக,பகிடிவதைத் தொல்லை மற்றும் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையான வன்முறைகளை பூஜ்யமாக்குவதற்கு இணங்கக்கூடிய ஒரு கொள்கையுடன் கூடிய, மாணவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுடைய கௌரவம் மற்றும் சமஉரிமை ஆகியவை உறுதிப்படுத்தப்படக்கூடிய ஒரு வன்முறையற்ற பாதுகாப்பான இடம் ஒன்றை உருவாக்குவதை நோக்காகக்கொண்டு, 2016 ஆம் ஆண்டில் ஒரு குறிப்பிடத்தக்கதும் காலத்துக்கேற்றதுமான தேசிய முன்னெடுப்பு ஒன்றை மேற்கொண்டது. இதன் பிரதான நோக்கமானது, அரச பல்கலைக்கழகங்களை ,கொள்கை அமுலாக்கம், பணியாற்றக்கூடிய நிறுவனப் பொறிமுறை மற்றும் நிருவாக பயிற்சியை உருவாக்குதல், அத்துடன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் உள்ளடங்கல் நிகழ்ச்சிகள் ஆகியவற்றை நடாத்துதல் ஆகியவற்றினூடாக, அவற்றினுடைய ஆதிக்க வரம்பின் கீழ் பணியாற்றுவதற்கு ஆர்வமூட்டுதல் மற்றும் வசதிகளை ஏற்படுத்துதல் ஆகும்.

பகிடிவதை மற்றும் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையான வன்முறைகளை தீர்ப்பது தொடர்பான செயற்பாட்டுத் திட்டமானது,காப்பீடு,இடையீடு மற்றும் கொள்கைத் துணை ஆகியவற்றைக் கொண்ட ஒரு முழுமையான மூன்றுபக்க அணுகு முறையைக் கெண்டுள்ளது

இவ் அறிக்கையானது தடுத்தல், தலையீடு செய்தல் மற்றும் கொள்கைத் துணை ஆகிய மூன்று தலைப்பின் கீழ் பால் நிலைப்பங்கு /சமத்துவத்துக்கான நிலையான குழு மற்றும் பால் நிலைப்பங்கு /சமத்துவத்துக்கான ப.மா.ஆ செயலகம் ஆகியவற்றினால் 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றத்தை சுருங்கக் கூறுகின்றது. மேற்கூறப்பட்ட மூன்றுதலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

### 17.1 காப்பீடு

- பகிடிவதை மற்றும் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையான வன்முறைகளை தடுத்தல் தொடர்பாக எல்லா அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் ப.ா.மா.ஆ வின் சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றம் நிர்வாகிகளுக்கான உயர் மட்ட ஆலோசனைக் கலந்துரையாடல் ஒன்று பொதுநலவாய பல்கலைக்கழகங்களுக்கான அமைப்பு மற்றும் இந்திய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆகியவற்றுடன் இணைந்து நடாத்தப்பட்டது. பாதிக்கப்பட்ட சனங்களுக்கான உரிமையைப் பாதுகாப்பதற்கு பகிடிவதை மற்றும் பாலியல்,பால்நிலை அடிப்படையான வன்முறைகள் தொடர்பான துணைச் சட்டங்கள் கொள்கைகள், மற்றும் வழிமுறைகளை அமுல்படுத்துவதன் முக்கியத்துவம் பற்றி பிரதான தீர்மானம் மேற்கொள்பவர்கள் அறிந்துள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்காக, இக்கலந்துரையாடலுக்கு உப வேந்தர்கள், திணைக்களத் தலைவர்கள், பதிவாளர்கள், நிதியாளர்கள்,சிரேஷ்ட மாணவ ஆலாசகர்கள் மற்றும் ஒழுங்கு நிலைநாட்டுபவர்கள் ஆகியோர் வருகை தந்தனர்.இது மேலும் பல்கலைக்கழகங்களுக்கிடையில் கல்வி முகாமைத்துவ அமைப்புகளின் உதவியுடன் பகிடிவதை மற்றும் பாலியல்,பால்நிலை அடிப்படையான வன்முறைகளை

பூஜ்யமாக்குவதன் ஊடாக அவர்களை ஊக்கப்படுத்துவதும் விழிப்புணர்வு உருவாக்குவதையம் கூட நோக்காகக் கொண்டுள்ளது.

- அரச பல்கலைக்கழகங்களில் பாலியல்,பால்நிலை அடிப்படையான வன்முறைகளை தடுத்தல் தொடர்பாக நிலையான ஆவணம் ஒன்றை உருவாக்குவதன் ஊடாக பங்களிப்புச் செய்தல் மற்றும் பால்நிலைப் பங்கு மற்றும சமத்துவம் தொடர்பான திறனைக் கட்டியெழுப்புதல் அத்துடன் அது தொடர்பான கூர் உணர்வை ஏற்படுத்துதல் ஆகியவற்றுக்காக,'பயிற்சியாளர்களுக்கான பயிற்சி' தொடர்பான பயிற்சிப்பட்டறைகள் ஊடாக, உததியோகத்தர் அபிவிருத்தி நிலையப்பணிப்பாளர்கள் ,தொழில் வழிகாட்டல் பிரிவின் பணிப்பாளர்கள், சிரேஷ்ட கல்வியியலாளர்கள் ஆகியோர் அவர்களுடன் இணைந்து 15 அரச பல்கலைக்கழகங்களின் பிரதி நிதிகள் ஆகியோர் திறன் உயர்வு செய்யப்பட்டதுடன், அது தொடர்பாக கூர்உணர்வு அளிக்கப்பட்டனர்.

- பல்கலைக்கழகங்களின் ஒத்துழைப்புடன் பல்கலைக்கழக முகாமைத்துவம், கல்வி சார் மற்றும் கல்வி சாரா துறையினருக்கான திறன் உருவாக்கத்துக்கான வசதி ஏற்படுத்தப்பட்டது. அவர்கள் பகிடிவதை மற்றும் பாலியல்,பால்நிலை அடிப்படையான வன்முறைகள் தொடர்பாக விழிப்புணர்வு செய்யப்பட்டதுடன் பால்நிலை ரீதியான கூருணர்வளிக்கப்பட்டனர். அத்துடன் இதனுடைய உடற்றொழில் மற்றும் சமூகவியல் விளைவுகள் என்பவற்றுடன் சட்ட ரீதியான அம்சங்கள் பால்நிலை அடிப்படையான வன்முறைகளின் அறிகுறிகளை இனங்காண்பதற்கு ஏற்படுத்தப்பட்டதுடன் பல்கலைக்கழகத்திற்குள் பால்நிலை அடிப்படையான வன்முறைச் சமபவங்களை கையாள்வதற்கும் பயன்படுத்தப்பட்டது. இச் செயற்பாடானது எல்லாப் 14 பல்கலைக்கழகங்களிலும் மீட்டப்படும்.

- மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட இலங்கையில் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளைத் தீர்ப்பதற்கான தேசிய செயற்பாட்டுத் திட்டம் மற்றும் கொள்கைப் பணிச் சட்டகம் தொடர்பான பல்துறைசார் பயிற்சிப் பட்டறை ஒன்றுக்கு நிலையான குழு உறுப்பினர்கள் சமுகமளித்தல் உயர் கல்வியின் உபதுறை தொடர்பாக பா.மா.ஆ வானது 2016-2020 க்கான செயற்பாட்டுத்திட்டம் ஒன்றைக் கையளித்தது.

### 17.2 இடையீடுகள்

- பகிடிவதைகள் தொடர்பான முறைப்பாடுகளைக் கோவைப்படுத்துவதற்கான ஒரு மத்திய மயப்படுத்தப்பட்ட ஒன்லைன் முறைப்பாட்டு முறையொன்று (தாமாகவே அறிந்து கொள்ளக்கூடிய வகையில் அல்லது அறியாத வகையில் இந்திய ப.மா.ஆ வினதும் மற்றும் இந்தியாவினுடைய அமான் டிரஸ்ட் ஆகியவற்றுடண் இணைந்து தாபிக்கப்பட்டதுடன் பா.மா.ஆ வினுடைய முகாமைத்துவத்தின் கீழ் ப.மா.ஆவில் பிரதானமாகச் செயற்பட்டது. இது பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பகிடிவதை சம்பவத்தை அவதானித்த ஏனையோர் ஆகியோருக்கு இலகுவாச் செயற்படக்கூடிய வழிமுறை ஒன்றை வழங்குகின்றது.இது 15 அரச பல்கலைக்கழகங்களுக்கிடையே செயற்படக் கூடியதாக உள்ளது.

- இது மாணவர்கள் அல்லது சம்பவங்களை அவதானிப்போர் ஆகிய நபர்கள் தொலைபேசி மற்றும் எழுத்து மூலம் போன்ற ஏனைய வழிமுறைகளுளுக்கு மேலதிகமாக ஒன்லைன் மூலம் முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்கு ஏதுவாக இருக்கும் (www.eugc.lk/ helpme@ugc.ac.lk) எல்லா முறைப்பாடுகளும் ஒன்லைன் முறைப்பாட்டு முறை மூலம் பதிவு செய்யப்படும். இது தன்னியக்கமாக மின்னஞ்சல் /

குறுந்தகவல் அகியவை ஊடாக செய்தியை ப.மா.ஆ தலைவர் மற்றும் / பணிப்பாளர் பா.ச.ச.நி ஆகியோருக்கு அனுப்பும் உரிய பல்கலைக்கழகங்கள் ப.மா.ஆவினால் தொடர்பு கொள்ளப்படும். பல்கலைக்கழகங்களானவை காலத்திற்கேற்றதும் பொருத்தமானதுமான நடவடிக்கையை எடுத்தல் மற்றும் இதற்குப் பதிலளித்தல் தொடர்பாக உறுதி செய்வதற்கு ப.மா.ஆவினால் பல்கலைக்கழகங்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் கண்காணிக்கப்படும். பகிடிவதையானது அதன் ஆரம்ப நிலையைக் கடந்து ஒரு வன்முறையாக உருவாகினால் உபவேந்தர் கட்டாயமாக அதனை ப.மா.ஆவிற்கு அறிக்கை செய்ய வேண்டும்.

- பல்கலைக்கழக நிறைவேற்று அதிகாரிகளுக்கான (எல்லா அரச பல்கலைக்கழகங்களினதும் பேரவை உறுப்பினர்கள் உபவேந்தர்கள் மற்றும் பதிவாளர்கள் திணைக்களத் தலைவர்கள்) புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்லைன் முறைப்பாடு தொடர்பாக விழிப்பணர்வு மற்றும் செயல் விளக்க நிகழ்ச்சித் திட்டமொன்று நடைபெற்றது.

- எல்லாப் பல்கைக்கழகங்களும் தமது சொந்த நுட்பங்களை விருத்தி செய்வதற்காக வசதி செய்துகொடுப்பதற்கு மனக்குறை நுட்பங்களை தாபித்தல் மற்றும் அறிக்கை செய்தல் தொடர்பான வழிமுறைகள் பல்கலைக்கழகங்களுக்கு பரவலாக்கப்பட்டது.

- ஏழு பல்கலைக்கழகங்களில் பகிடிவதை மற்றும் பாலியல்,பால்நிலை அடிப்படையான வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகளைத் தீர்ப்பதற்காக ஒரு நம்பகரமானதும் இயங்கு முறையானதுமான மனக்குறை நுட்பம் அமைந்துள்ளது.

- பகிடிவதை மற்றும் பாலியல்,பால்நிலை அடிப்படையான வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகளின் திறமையான விசாரணையாளர்களாக தமது சொந்த பல்கலைக்கழகங்களிலேயே இனங்காணப்பட்ட 15 பல்கலைக்கழகங்களைப் பிரதி நிதித்துவப்படுத்தக் கூடிய தொண்ணூற்றெட்டு சிரேஷ்ட கல்வியியலாளர்கள் பாலியல் துன்புறுத்தல் விசாரணை தொடர்பாக 2016 டிசம்பரில் பயிற்சியளிக்கப்பட்டனர்.

## 17.3 கொள்கைத் துணைச் சட்டகம்

- பால்நிலைப் பங்கு, சமத்துவம் ஆகியவற்றுக்கான நிலையமானது ஒரு பணிப்பாளரைக் கொண்டு பல்கலைக்ககழக மானிய ஆணைக்குழுவிற்குள் தாபிக்கப்பட்டுள்ளதுடன் இது பகிடிவதை மற்றும் பாலியல்,பால்நிலை அடிப்படையான வன்முறைகள் தொடர்பான எல்லாப் பிரச்சினைகளுக்கும் நிவாரணம் வழங்குவதில் செயற்படுதிலும், பல்கலைக்கழகங்களில் பகிடிவதை மற்றும் பாலியல்,பால்நிலை அடிப்படையான வன்முறைகள், பால்நிலைப் பங்கு, சமத்துவம்

  தொடர்பானபொருத்தமானகட்டமைப்பு/முறைமைகள்,கொள்கைகள்/துணைச்சட்டங்கள் /வழிமுறைகள் ஆகியவற்றின் முன்னேற்றம்/ தாபிப்பு என்பவற்றை ஆலாசனை ரீதியாக நிறுவுவதிலும், பால்நிலைப் பங்கு, சமத்துவம் தொடர்பான ப.மா.ஆ வின் கொள்கையை அமுல்படுத்துவதிலும் அவற்றிற்கு பொறுப்புக் கூறுவதிலும் பல்கலைக்கழகங்களுக்கு உதவுதல் மற்றும் கண்காணித்தல் ஆகிய தொழிற்பாடுகளை ஆற்றுகின்றது.

- பகிடிவதை மற்றும் பாலியல்,பால்நிலை அடிப்படையான வன்முறைகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு பல்கலைக்கழகத்தின் எல்லா மட்டங்களிலும் பால்நிலை

கவனத்தில் எடுக்கப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கான அதிகாரங்களுடன் ஒன்பது பல்கலைக்கழகங்களில் பல்கலைக்கழகத்திற்குள் பணிப்பாளர்/ ஒருங்கிணைப்பாளருடன் அவதான மையங்கள்( நிலையம், குழு,அலகு, குறிக்கோள் படை)

- ஒரு ஆலோசனை ரீதியான செயற்பாட்டை பின்பற்றுவதானது பல்கலைக்கழகங்களுக்கான பால்நிலைக் கொள்கையை முன்னேற்றுவதற்கு பல்கலைக்கழகங்களை வசதியாக ஆக்கியதுடன் பால்நிலைப் பங்கு, சமத்துவ கொள்கையின் செயற்பாட்டு நடவடிக்கையைப் பொறுப்பேற்பதற்கான பல்கலைக்கழகத்தின் முயற்சிகளை வலுப்படுத்தியது. பால்நிலைப் பங்கு, சமத்துவ கொள்கையை அமுல்படுத்துவதற்காக ஆறு பல்கலைக்கழகங்களில் பால்நிலைப் பங்கு, சமத்துவ கொள்கை மற்றும் வழிமுறைகள் அமைந்துள்ளன.ஒரு பல்கலைக்கழகமானது அக் கொள்கையை முழுமையாக அமுல்படுத்துகின்றது.

- எல்லாப் பல்கலைக்கழகங்களும் பால்நிலைப் பங்கு, சமத்துவம் ஆகியவற்றுக்கான நிலையத்தால் மற்றவர்களுக்கிடையில் பகிடிவதை மற்றும் பாலியல்,பால்நிலை அடிப்படையான வன்முறைகளை ஒழிப்பதற்கான உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவர்களுக்கான நடத்தைக் கோவை உருவாக்கம் தொடர்பான வசதிகளை வழங்கியுள்ளது. இரண்டு பல்கலைக்கழகங்கள் ஆனவை உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவர்களுக்கான நடத்தைக் கோவை/ சாசனம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளதுடன் அவற்றுள் ஒரு பல்கலைக்கழகமானது மாணவர்களுக்கான பீட ரீதியான கற்கைத் தெளிவுபடுத்தல் நிகழ்ச்சிகளின் போது விழிப்புணர்வை உருவாக்கியுள்ளது.

- அரச பல்கலைக்கழகங்களில் பகிடிவதை மற்றும் பாலியல்,பால்நிலை அடிப்படையான வன்முறைகள் தொடர்பாக காணப்படும் மனத்தாங்கல் நிவாரண நடைமுறைகளை வலுப்படுத்தியதுடன் ஆதரவும் வழங்கியது.
பல்கலைக்கழக சமூகத்திற்கான பால்நிலை தொடர்பான உள்ளீடுகளுக்கு பங்களிப்பு செய்வதற்காக பல்கலைக்கழகங்களுக்கு பால்நிலைப் பங்கு, சமத்துவம் தொடர்பான நிபுணத்துவத்தை வழங்கியது.

## 18. பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம்

பல்கலைக்கழக ஓய்வு நிதியம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 1999 ஜுன் 10ம் திகதி வெளியிடப்பட்ட ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல.747 இன் பிரமாணங்களுக்கு அமைவாக 1999ம் ஆனி, செப்டெம்பர் மாதம் 01ம் திகதியன்று

பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம் ஸ்தாபிக்கப்பட்டது.

### ஆளுகையும் முகாமைத்துவமும்

பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் ஆளுகையினையும் முகாமைத்துவத்தினையும் மேம்படுத்தவும் மற்றும் பலப்படுத்தவும் 2013ம் ஆண்டில் பிரேரிக்கப்பட்டது. அதன் பிரகாரம் ,ஆணைக்குழு பல்கலைக்கழக ஓய்வூதிய திட்டத்தினை முகாமைத்துவப்படுத்துவதற்கும் நிர்வகிப்பதற்கும் சீரமைப்பதற்குமான ஒரு கட்டளைச்சட்டத்தினை வரைவற்காக ஒரு குழுவை நியமிப்பதற்கும் அவ்வப்பொழுது பல்கலைக்கழக ஓய்வூதிய திட்டத்தின் செயற்பாடுகளை மீளாய்வு செய்வதற்காக ஒரு ஆலோசனை/மேற்பார்வை குழுவை அமைப்பதற்கும் தீர்மானித்தது. தற்போது கட்டளைச் சட்டத்தின் வரைவானது சட்டவரைவுத் திணைக்கள அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.நிதியினுடைய வருடாந்த

கணக்குகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்காக கணக்காளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது. முதலீடுகள் அரச விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக மேற்கொள்ளப்படுகின்றது













## 19 பல்கலைக்கழக ஊழியர சேமலாநிதியம்

1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 89 - 96 வரையிலான பிரிவுகளுக்கிணங்க ஸ்தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக சேமலாபநிதி பல்கலைக்கழக முறைமையிலுள்ள ஊழியர்களுக்கு இளைப்பாற்று காலத்தில் தமது வாழ்வாதாரத்தினை உறுதிப்படுத்துகின்ற திட்டமாகும். நிதியினை மிகவும் திறமையான முகாமைப்படுத்துவதன் மூலம் ஊழியர்கள் இளைப்பாறி செல்கின்றபோது அல்லது சேவையை விட்டு விலகுகின்றபோது உறுப்பினர்களுக்கு நல்ல வருவாயை பெற்றுக்கொடுக்கும் நோக்கத்தினை பல்கலைக்கழக சேமலாபநிதி கொணடுள்ளது.

## சேமலாபநிதியின் நிதியியல் சிறப்புப்பார்வை பின்வருமாறு

நிதியியல் சிறப்புப் பார்வை

| | | திகதி வரை | 2011 ஓய்வூதிய நிதியம் | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | அங்கத்துவம் | | | | | | | |
| | செயற்பாட்டு அங்கத்தவர் | 31 டிசம்பர் | 27,892 | 28,291 | 30,103 | 29,398 | 30,276 | 32,055 |
| | செயற்படா அங்கத்தவர் | 31 டிசம்பர் | 5,288 | 5,272 | 5,251 | 5,234 | 5,222 | 5,218 |
| 02 | பிணைப்புக்கள் | | | | | | | |
| | பிணைப்பு எண்ணிக்கைகள் | 31 டிசம்பர் | 2,663 | 2,349 | 2,722 | 3,130 | 2,864 | 2,845 |
| | பிணைப்பு பெறுமதி | 31 டிசம்பர் | 997 | 1,031 | 1,543 | 1,799 | 1,803 | 1,737 |
| 03 | நிதி மீதி (மில் ) | 31 டிசம்பர் | 18,502 | 20,832 | 23,457 | 26,504 | 29,419 | 33,052 |
| 04 | கடன் மீதி (மில் ) | 31 டிசம்பர் | 4,031 | 4,174 | 4,652 | 4,710 | 4,662 | 4,745 |
| 05 | பொது ஒதுக்கீடு (மில்) | 31 டிசம்பர் | 124 | 391 | 430 | 116 | 250 | 220 |
| 06 | வட்டிவீதம் ஒதுக்கீடு (ஐசுநுசு) (மில் ) | 31 டிசம்பர் | 282 | - | - | - | - | - |
| 07 | வருட காலத்தில் வழங்கப்பட்ட கடன் (மில்) | 31 டிசம்பர் | 859 | 784 | 1,243 | 892 | 804 | 916 |
| 08 | மொத்த முதலீடு (மில்) | 31 டிசம்பர் | 13,582 | 15,692 | 16,607 | 18,592 | 18,543 | 23,763 |
| 09 | முதலீட்டு வருமானம் (மில்) | 31 டிசம்பர் | 1,561 | 1,751 | 2,455 | 2,671 | 2,678 | 2,852 |
| 10 | வருமான வரி (மில்) | 31 டிசம்பர் | 1,561 | 1,751 | 2,455 | 2,671 | 2,678 | 2,852 |
| 11 | முதலீட்டு மீளப்பெறல் | 31 டிசம்பர் | 11.50% | 11.16% | 14.78% | 14.37% | 13.82% | 12.87% |
| 12 | முன்கொண்டுவரப்பட்ட மீதியின் மீது வெளியிடப்பட்ட வட்டி | 1 ஜனவரி | 9.5% | 11.0% | 13.50% | 15.00% | 11.00% | 11.30% |

| | பல்கலைக்கழக மானியங்கள்ஆணைக்குழு | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
| 1 | அங்கத்தவர்கள் | | | | | |
| | செயற்படு உறுப்பினர்கள் | 8167 | 9124 | 10002 | 10831 | 11722 |
| | செயற்படா உறுப்பினர்கள் | 1778 | 2003 | 1316 | 1412 | 1451 |
| | | | | | | |
| | மொத்த அங்கத்தினர் | 9945 | 11127 | 11318 | 12243 | 13173 |
| 2 | மொத்த அங்கத்துவம் | 11122 | 12619 | 13887 | 15027 | 16230 |
| 3 | ஓய்வூதியம் பெறும் அங்கத்தவரின் எண்ணிக்கை | 121 | 149 | 172 | 193 | 222 |
| 4 | மீளளிக்கப்படும் மொத்தப்பணத்தொகையைப் பெறும் அங்கத்தவர்கள் | 362 | 489 | 638 | 712 | 812 |
| 5 | நிதியத்திற்கான மிகுதி | | | | | |
| | பங்களிப்பாளர் நிதி | 2432 | 3079 | 3871 | 4756 | 5805 |
| | ஓய்வு பெற்றோர் நிதி மற்றும் ஒதுக்கீடு | 299 | 403 | 435 | 501 | 590 |
| | நிதியத்தின் வளர்ச்சி வீதம் | 22% | 28% | 23% | 22% | 21% |
| 6 | மொத்த முதலீடு (ரூ.மி) | 2454 | 2937 | 3546 | 4494 | 5704 |
| 7 | மொத்த முதலீட்டு வருமானம் (ரூ.மி) | 236 | 491 | 504 | 543 | 595 |
| 8 | ளவருமானவரி (ரூ.மி) | 20 | 41 | 36 | 29 | 1 |
| 9 | மூலதனத்தின் மீதான திருப்பல் | 10% | 17% | 15% | 12% | 10% |
| 10 | அங்கதத்வர்களுக்கு பிரகடனப்படுத்தப்பட்ட வட்டி | 9% | 13.50% | 14% | 11% | 10.50% |
| 11 | ஓய்வதிய கொடுப்பனவு(ரூ.மி) | 17 | 27 | 28 | 32 | 39 |
| 12 | ஓய்வுதிய் கொடுப்பனவு வீதத்தின் வளர்ச்சி | 0 | 59% | 4% | 14% | 21% |
| | | | | | | |




நிதிப் பெறுமதி



**வருடாந்த முதலீட்டு வருமானம்**




**வருமான மூலகங்கள்**




## 20. 2016ம் ஆண்டுப்பகுதியில் வெளியிடப்பட்ட ஆணைக்குழு சுற்றறிக்கைகள் மற்றும் ஸ்தாபன சுற்றறிக்கை கடிதங்கள்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது 1978ம் ஆண்டு 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்கள்,கடமைகள் செயற்பாடுகளுக்கமைவாகவும் அத்துடன் உரிய அரச அமைப்புக்களால் சம்பளங்கள், பணியாளர் சேர்ப்புத்திட்டங்கள் மற்றும் நிரந்தர சேவைக்கான ஆளெடுப்புச்செய்கை மற்றும் ஏனைய நிர்வாக விடயங்கள் சம்பந்தமாக விடுவிக்கப்பட்ட கட்டளைகள் ஆகியவற்றிற்கேற்பவும் விமர்சனைக்குரிய ஆண்டு பகுதியில், ப.மா.ஆ மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் சீர் செயற்பாட்டிற்காக பின்வரும் ஆணைக்குழு சுற்றிக்கைகள் மற்றும் ஸ்தாபன சுற்றறிக்கை கடிதங்கள் வெளியிடப்பட்டன.2016 ஆம் ஆண்டு ப.மா.ஆ புதிய விடயங்கள் தொடர்பாக 19சுற்றிக்கைகளை (2015 இல் 14)வெ திறைசேறி வ நிலையான ன்னைய சுற்றறிக்கைகள் இற்றைப்படுத்தப்பட்டன.

குறிப் கடன் வேறு மா.ஆணைக்குழுவானது ப.மா.ஆணைக்குழுவினதும் மற்றும் பல்கலைக்கழகங்களினதும் 1984ம் ஆண்டு வெளியிடப்பட்ட தாபனக்கோவைதனை 2015 ஆம் ஆண்டு மீள்பதிப்பு செய்ய ஆரம்பித்து, இது 2016 ஆம் ஆண்டு பூரணப்படுத்தப்பட்டுள்ளது.குறிக்கோளினது முக்கியத்துவம் மற்றும் ஆலோசனைகள்,உதவி ஒத்தாசைகள் யாவும் பல்கலைககழக ஓய்வு பெற்ற புகழ்மிக்க அதிகாரிகளிடமிருந்தும் மற்றும் பல்கலைக்கழகங்கள், ப.மா. ஆணைக்குழுவில் சேவையாற்றும் நிர்வாகிகளிடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டது.

ஆ) ஆணைக்குழு சுற்றறிக்கை

| சுற்றறிக்கை இலக்கம | விடயம் | சுற்றறிக்கை திகதி |
|---|---|---|
| 01/2016 | வெளிவாரிப்பரீட்சைகள் மற்றும் அது தொடர்பான செயற்பாடுகளை நடாத்துவதற்கும்,வெளிவாரிப்பட்டங்கள் மற்றும் விரிவாக்கற் கற்கை நெறிக்கான நிலையம் / அலகுகளை நிர்வகிப்பதற்குமான கொடுப்பனவு விகிதத்தை தீர்மானிப்பதற்கான வழிகாட்டுதல்கள் | 01.01.2016 |
| 02/2016 | கல்வி முற்கொடுப்பனவு மீள் திருத்தம் / | 21.01.2016 |
| 03/2016 | தங்குமிட பணிப்பாளர் பதவியின் மீள் வடிவமைப்பானது மாணவர் தங்குமிட பணிப்பாளர் ஆக மாற்றப்படல் | 05.02.2016 |
| 04/2016 | பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் சுய நிதிச் செயற்பாட்டின் மூலம் உருவாக்கப்பபட்ட நிதிகளைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டுதல்கள் | 01.03.2016 |
| 07/2014 (i) | பல்கலைக்கழக பதவியணியினருக்கான மேலதிக மாதாந்த முற்கொடுப்பனவு | 24.03.2016 |
| 03/2015 (i) | 2015 ஆம் ஆண்டையவரவு செலவுத் திட்டப் பிரேரணையின் பிரகாரம் அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், மற்றும் முற்றாக அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள் ஆகியவற்றில் ஒப்பந்த அடிப்படையில் கடமை புரியும் ஊழியர்களுக்கான இடைக்கால முற்கொடுப்பனவு | 22.04.2016 |
| 09/2015(i) | கணணிப் பிரயோக உதவியாளர்/ காசாளர்/ பண்டக காப்பாளர்/எழுது வினைஞர் பதவிகளின் தரம் ii பதவி உயர்வுக்கான எழுத்துப் பரீட்சை | 26.04.2016 |
| 08/2015(i) | விஷேட தரம் மற்றும் தரம்-I க்கு பதவி உயர்த்தப்பட்ட உப விடுதிமேற்பார்வையாளர்களுக்கான வேண்டப்பட்ட சேவைக் காலத்தைக் குறைத்தலின் இலாபங்களை வழங்குதல் | 03.05.2016 |
| 05/2016 | டிப்ளோமாதாரிகள் மற்றும் பட்டதாரிகள் ஆகியோர்க்கு ஊக்குவிப்பாக உயர்வுக்கொடுப்பனவு | 12.05.2016 |
| 06/2016 | பல்கலைக்கழக முறைமையில் சுகாதார நிலையங்களுக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட பற் சத்திர சிகிச்சை நிபுணர் மற்றும் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான சமப்படுதத்ல் முற்கொடுப்பனவு திருத்தம் | 27.05.2016 |
| 07/2016 | நிதியாளர் பதவிகளுக்ான தெரிவுக்குழுக்கான திருத்தம் | 03.06.2016 |
| 08/2016 | விரிவுரையாளர் (தகுதிகாண்), சிரேஷ்ட விரிவரையாளர் தரம்II & I( மருத்துவம் /பல் மருத்துவம்) மற்றும் ( மருத்துவம் /பல் மருத்துவம்) சாரா சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II & Iஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புத் திட்டத் திருத்தம் | 14.06.2016 |
| 09/2016 | பல்கலைக்கழக முறைமையில் உள்ள கல்வி சாரா பதவிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புதல் | 21.06.2016 |
| 10/2016 | அரச பல்கலைக்கழகங்களில் பல்கலைக்கழக வியாபாரத் தொடர்பை வலுப்படுத்துதல் | 25.07.2016 |
| 11/2016 | வர்த்தக சங்க நடவடிக்கை | 04.08.2016 |
| 11/2016(i) | வர்த்தக சங்க நடவடிக்கை | 05.08.2016 |
| 11/2016(ii) | வர்த்தக சங்க நடவடிக்கை | 18.08.2016 |

| | | |
|---|---|---|
| 12/2016 | பல்கலைக்கழக ஊழியர்களுக்கு அவர்கள் கடமையில் இருக்கும்போது ஏதேனும் காயம் ஏற்பட்டால் அதற்கான இழப்பீடு | 18.08.2016 |
| 13/2016 | பல்கலைக்கழகங்கள் /உயர் கல்வி நிறுவனங்களால் வெளிவாரிப்பரீட்சைகள் மற்றும் விரிவாக்கற் கற்கைநெறிகள் ஆகியவற்றை வழங்குவதற்கான கொள்கைச் சட்டகம் மற்றும் வழிகாட்டல்கள் ஆகியவற்றின் திருத்தம் | 31.08.2016 |
| 14/2016 | உப வேந்தர் பதவி நியமனம் | 28.09.2016 |
| 15/2016 | முகாமைத்துவ உதவியாளர்மற்றும் அலுவலக உதவியாளர் ஆகிய பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத்திட்டம் | 04.10.2016 |
| 08/2016(i) | விரிவுரையாளர் (தகுதிகாண்), சிரேஷ்ட விரிவரையாளர் தரம் II & I( மருத்துவம் /பல் மருத்துவம்) மற்றும் ( மருத்துவம் /பல் மருத்துவம்) சாரா சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II & Iஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புத் திட்டத் திருத்தம் | 17.11.2016 |
| 16/2016 | பல்கலைக்கழக முறைமையில் உள்ள ஆசிரியர்கள் தவிர்ந்த ஏனைய உழியர்களுக்கான ஓய்வு வயது | 17.11.2016 |
| 17/2016 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பதவியணியினர் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் உள்ளகல்வி மற்றும் கல்வி சாரா ஊழியர்களுக்கான சம்பள சீர்திருத்தம்- 2016 | 05.12.2016 |
| 17/2016(i) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பதவியணியினர் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் உள்ளகல்வி மற்றும் கல்வி சாரா ஊழியர்களுக்கான சம்பள சீர்திருத்தம்- 2016 | 08.12.2016 |
| 18/2016 | ஆசிரியர்களுக்கான கற்கை விடுமுறை | 15.12.2016 |
| 19/2016 | ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்க்கான கற்கை விடுமுறை | 16.12.2016 |

ஆ) தாபனச் சுற்றறிக்கைக் கடிதங்கள்

| தாபனச் சுற்றறிக் கை கடித இல | தாபனச் சுற்றறிக்கை கடித திகதி | விடயம் |
|---|---|---|
| 01/2016 | அரச வெசாக் பண்டிகைக் கொண்டாட்டம் -2016 | 27.04.2016 |
| 02/2016 | பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 31/(2001)(XI) பயன்படுத்துதல்-ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்களின் பெயர் வரிசை | 05.05.2016 |
| 03/2016 | ரமழான் கால விஷேட விடுமுறை வழங்குதல் -2016 | 07.06.2016 |
| 04/2016 | பதவியணி மற்றம் சம்பள முகாமைத்துவ செயற்றிட்டம் | 10.08.2016 |
| 05/2016 | சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் வழங்குதல் | 22.08.2016 |
| 06/2016 | சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் வழங்குதல் | 22.09.2016 |
| 07/2016 | விடுமுறை நாட்கள் மற்றும் வார இறுதி நாட்களில் கடமை புரிந்த நிர்வாக உத்தியோகத்தர்களுக்கான விடுமுறைக்கொடுப்பனவு | 22.09.2016 |
| 08/2016 | மருத்துவ பட்டப்பின் நிறுவனத்தின் சபைச் சான்றிதழைப் பெற்று சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II பதவி உயர்வுக்கான (மருத்தவம்/ பல் மருத்துவம்) அமுலாகும் திகதியைத் தீர்மானித்தல் | 11.10.2016 |
| 09/2016 | மொழி பெயர்ப்பு , உரைபெயர்ப்பு மற்றும் தட்டச்சுக் கட்டணத் திருத்தம் | 03.11.2016 |

| | | |
|---|---|---|
| 10/2016 | வெள்ளம், மண் சரிவு மற்றும் பாதை இடையூறுகளால் கடமைக்கு சமூகமளிக்க முடியாத பல்கலைக்கழக ஊழியர்களுக்கு விடுமுறை-2016 | 21.11.2016 |
| 11/2016 | சமூக மருத்துவ திணைக்களத்தில் விரிவுரையாளர் (தகுதிகாண்), சிரேஷ்ட விரிவரையாளர் தரம்II/ சிரேஷ்ட விரிவுரையாளர் Iபதவிக்குஆட்சேர்ப்பு | 30.11.2016 |
| 05/2016(i) | சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் வழங்குதல் | 06.12.2016 |
| 12/2016 | சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் ii பதவி உயர்வுக்கான அமுலாகும் திகதியைத் தீர்மானித்தல் | 15.12.2016 |
| 13/2016 | பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 27/2016 பயன்படுத்துதல். | 27.12.2016 |
| 14/2016 | பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 31/2016 பயன்படுத்துதல் விஷேட விடுமுறைக் கொடுப்பனவு | 28.12.2016 |

நிதி நிலைமை பற்றிய கூற்று

LKR

| 2016 டிசம்பர் 31 ஆம் திகதியன்றுள்ளவாறு | Note | 2016 | 2015 (மீள் கூற்று) |
|---|---|---|---|
| சொத்துக்கள் | | | |
| அசையாச் சொத்துக்கள் | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 1 | 1,038,442,452 | 541,262,961 |
| பெறப்பட வெண்டிய கணக்குகள் | 2 | 126,275,566 | 98,052,511 |
| இருப்புக்கள் | | 2,840,786 | 3,160,572 |
| எதிர்காலத்திற்கான செலுத்துகை ∴ வைப்புக்கள் | 3 | 22,721,409 | 26,972,666 |
| மொத்த அசையும் சொத்துக்கள் | | **1,190,280,213** | **669,448,710** |
| அசையாச் சொத்துக்கள் | | | |
| சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் | 4 | 69,012,086 | 65,247,143 |
| காணிகள் மற்றும் கட்டிடங்கள் | 4 | 507,046,286 | 503,950,186 |
| மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைகள் | | 18,703,990 | 1,563,240 |
| முதலீடுகள் | 5 | 55,582,534 | 73,458,127 |
| பிணைப்பத்திர பிரீமியங்கள் | | 7,938,241 | 8,864,795 |
| அன்பளிப்புக்கள் ∴ புலமைப் பரிசில் முதலீடுகள் | 6 | 19,278,187 | 18,671,455 |
| மொத்த அசையாச் சொத்துக்கள் | | **677,561,323** | **671,754,946** |
| மொத்த சொத்துக்கள் | | **1,867,841,536** | **1,341,203,656** |
| பங்குகள் மற்றும் பொறுப்புக்கள் | | | |
| அசையும் பொறுப்புக்கள் | | | |
| செலுத்த வேண்டிய கணக்குகள் | 7 | 619,624,518 | 524,052,613 |
| மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் | 8 | 6,116,534 | 6,555,898 |
| மொத்த அசையும் பொறுப்புக்கள் | | **625,741,051** | **530,608,511** |
| அசையாச் பொறுப்புக்கள் | | | |
| ஓய்வூதிய அனுகூலங்களுக்கான ஒதுக்கீடு | 9 | 42,006,685 | 36,587,518 |
| மானியங்கள் நிதியம் | 10 | 23,899,632 | 22,464,024 |
| ஆராய்ச்சி நிதியம் | 11 | 12,624,243 | 12,705,985 |
| விசேட நிதியம் | 12 | 32,002,312 | 31,146,210 |
| மொத்த அசையாப் பொறுப்புக்கள் | | **110,532,872** | **102,903,737** |
| | | **736,273,923** | **633,512,248** |
| தேறிய சொத்துக்கள் | | **1,131,567,614** | **707,691,409** |
| திரட்டு நிதியம் | | | |
| ஒத்திவைக்கப்பட்ட மூலதன உட்பாய்ச்சல்கள் | 13 | 69,109,707 | 63,740,608 |
| செலவு செய்யப்படாத மூலதன மானியங்கள் | 14 | 65,286,501 | 41,578,491 |
| நிலையான சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு மானியங் | 15 | 11,680,636 | 3,419,437 |
| செலவு செய்யப்படாத மனித வளங்கள் அபிவிருத்தி நிதியம் | 16 | - | 34,224,316 |
| வரவுசெலவு திட்ட முன்மொழிவு- 2017 | 17 | 409,054,248 | - |
| ஊழியர் அபிருத்தி நிதியம் | | 31,655,391 | 37,497,213 |
| ருபுஹூ அபிவிருத்தி நிதியம் | | 15,000,000 | - |
| மீள் மதிப்பீட்டு மேலதிகம் | | 509,313,767 | 509,313,767 |
| திரட்டப்பட்ட மிகை∴ (குறைபாடு) | | 20,467,362 | 17,917,576 |
| **TOTAL NET ASSETS/ EQUITY** | | **1,131,567,614** | **707,691,406** |

இந்த நிதிக்கூற்று 05 தொடக்கம் 09 மற்றும் பக்கங்கள் 10 தொடக்கம் 20 வரையான கணக்கு கொள்கையின் உள்ளெடுக்கப்பட்ட பகுதியாகும். பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழுவின அங்கத்தவர்கள் இந்நிதிக்கூற்று தயாரிக்ததில் பொறுப்புடையவர்கள் ஆவார்கள். இந்நிதிக்கூற்று பல்கலைக்கழக மானியங்கள் அங்கத்தவர்களால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக ஒப்பமிடுகின்றேன்

Prof. P. S. M. Gunaratne
பிரதித் தலைவர்

R.A.U Ranaweera
கணக்காளர்

## வருமானம் பற்றிய கூற்று

LKR

| 2016 டிசம்பர் 31 ஆம் திகதியன்றுள்ளவாறு | Note | 2016 | 2015 |
|---|---|---|---|
| வருமானம் | | | |
| அரச மானியங்கள் | 18 | 2,300,145,995 | 1,591,484,503 |
| ஏனைய வருமானங்கள் | 19 | 57,403,216 | 49,226,246 |
| | | - | - |
| மொத்த வருமானம் | | **2,357,549,210** | **1,640,710,749** |
| | | | |
| செலவுகள் | | | |
| ஆளுக்கான வேதனாதிகள் | 20 | 193,794,398 | 166,264,184 |
| வழுங்கல்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள் | 21 | 81,858,147 | 58,021,613 |
| மானியங்கள் மற்றும் ஏனைய மாற்றல்கள் | 22 | 1,993,861,505 | 1,312,190,878 |
| தேய்மானங்களுக்கான ஒதுக்கீடுகள் மற்றும் கடன்தீர் நித | 23 | 24,371,220 | 24,330,392 |
| புனரமைப்புச் செலவுகள் | 24 | 9,490,326 | 9,450,828 |
| ஏனைய செலவுகள் | 25 | 37,215,126 | 27,371,421 |
| மொத்தச் செலவுகள் | | **2,340,590,721** | **1,597,629,316** |
| | | | |
| மிகை ∴ குறைபாடு | | **16,958,489** | **43,081,432** |

## உரிமை மாற்றம் சம்பந்தமான கூற்று
## 2016 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவுறும் வருடத்திற்கு

| விபரம் | ஒத்திவைக்கப்பட்ட மானியங்கள் | மனித வளங்கள் அபிவிருத்தி நிதியம் | தக்க வைத்த இலாபம் ∴ நட்டம் | பல்கலக்கழகமானியங்கள் ஆனைக்குழுஅபிவிருத்தி நிதியம் | மீள் மதிப்பீட்டு மேலதிகம் | பணியாட் தொகுதி அபிவிருத்தி நிதியம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2016.1.1 திகதியன்று மீதி | 63,740,608 | 79,222,244 | 17,917,576 | - | 509,313,767 | 37,497,213 | 707,691,408 |
| முன்னைய ஆண்டுகளுக்கான சீர்படுத்துகை | | | 591,297 | | | | 591,297 |
| 2016.1.1 திகதியன்று மீதி | 63,740,608 | 79,222,244 | 18,508,873 | - | 509,313,767 | 37,497,213 | 708,282,705 |
| மூலதன ஒதுக்கீட்டின் அதிகரிப்பு | 5,369,099 | | | | | | 5,369,099 |
| வருடத்திற்கான மேலதிகம் ∴ குறைவு | | | 16,958,489 | | | | 16,958,489 |
| செலவழிக்கப்படாத நிதியின் அதிகரிப்பு | | 406,799,141 | | | | | 406,799,141 |
| அதிகரிக்கப்பட்ட ஊழியர் அபிவருத்தி நிதி | | | | - | | (5,841,822) | (5,841,822) |
| ப.மா.ஆ அபிவிருத்தி நிதிக்கு மாற்றப்பட்டது | | | (15,000,000) | 15,000,000 | | | - |
| 2016.12.31 திகதியன்று மீதி | 69,109,707 | 486,021,385 | 20,467,362 | 15,000,000 | 509,313,767 | 31,655,391 | 1,131,567,614 |

## காசுப் பாய்ச்சல் கூற்று

LKR

| 2016 டிசம்பர் 31 ஆம் திகதியன்றுள்ளவாறு | 2016 | 2015 (மீள் கூற்று) |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகள் ஊடாக பெற்ற பணம் | | |
| செயற்பாட்டு மேலதிகம் ∴ (குறைபாடு) | 16,958,489 | 43,081,432 |
| சீர்படுத்துகை | | |
| முன்னைய ஆண்டின் சீர்படுத்துகை | 591,297 | (6,494,225) |
| பல்கலைக்கழகமானியங்கள் ஆனைக்குழுவிற்கு மாற்றப்பட்ட அபிவிருத்தி நிதி | (15,000,000) | - |
| தேய்மானம் | 24,371,220 | 24,330,392 |
| கடன்தீர் நிதி திரட்டல் | (33,861,545) | (33,781,219) |
| பிணைப்பத்திர பிரீமியங்கள் | 926,555 | 926,555 |
| இருப்புக்களின் அதிகரிப்பு | 319,786 | (973,642) |
| வர்த்தக கடனாளிகளின் அதிகரிப்பு | 95,132,540 | 385,880,197 |
| பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள் | 8,353,634 | 1,819,521 |
| நிலையான சொத்துக்களின் விற்பனை (இலாபம்)∴ நட்டம் | 100,606 | 47,492 |
| எதிர்காலத்திற்கான செலுத்துகைகளின் அதிகரிப்பு | 4,251,257 | (15,757,493) |
| அறவீடுகளின் அதிகரிப்பு | (28,223,055) | (5,853,353) |
| வட்டி கிடைப்பனவு | | - |
| வட்டி செலுத்துகை | - | - |
| பணிக்கொடை செலுத்துகை | (2,934,468) | (3,201,458) |
| செயற்பாட்டு நடவடிக்கைகள் ஊடாக பெற்ற தேறிய பணம் | **70,986,316** | **390,024,199** |
| | | |
| முதலீட்டுச் செயற்பாடுகள் ஊடான காசுப் பாய்ச்சல்கள் | | |
| சொத்து, உபகரணங்கள் கொள்வனவு | (24,438,015) | (40,875,441) |
| நிலையான சொத்துக்களை அகற்றுதல் | | - |
| நிலையான சொத்துக்கள் மீதான முதலீடுகள் . | 17,268,861 | (259,132) |
| மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகளின் அதிகரிப்பு | (17,140,750) | (278,751) |
| முதலீட்டுச் செயற்பாடுகளின் ஊடாகப் பெற்ற தேறிய காசுப் பாய்ச்சல் | **(24,309,904)** | **(41,413,324)** |
| | | |
| நிதிச் செயற்பாடுகளின் ஊடாகப் பெற்ற காசுப் பாய்ச்சல்கள் | | |
| மூலதன உதவிகள் உட்பாய்ச்சல்கள் | 53,805,000 | 64,704,614 |
| புனரமைப்பு உதவிகள் உட்பாய்ச்சல்கள் | 10,500,000 | 10,000,000 |
| ஆராய்ச்சி நிதியங்களின் அதிகரிப்பு | (81,742) | (237,765) |
| விசேட அலுவலகளுக்கான நிதியங்களின் உட்பாய்ச்சல்கள் | 856,102 | 10,021,208 |
| புலமைப் பரிசில் நிதியம் உட்பாய்ச்சல்கள் ∴ வெளிப்பாய்ச்சல்கள் | 1,435,608 | 421,467 |
| பணியாட் தொகுதி அபிவிருத்தி நிதியத்தின் அதிகரிப்பு | 9,158,178 | (25,768,695) |
| வாகனங்களுக்கான குத்தகை செலுத்துகை | | - |
| மனித வளங்கள் அபிவிருத்தி நிதியத்தின் குறைவு | (34,224,316) | 24,557,906 |
| வரவுசெலவு திட்ட முன்மொழிவு அதிகரிப்பு- 2017 | 409,054,248 | - |
| நிதிச் செயற்பாடுகளின் ஊடாகப் பெற்ற தேறிய காசுப் பாய்ச்சல்கள் | **450,503,079** | **83,698,735** |
| | | |
| மொத்த அதிகரிப்பு∴( குறைவு) நிதி அல்லது நிதிக்கு சமமான பெறுமதி | 497,179,491 | 432,309,610 |
| ஆண்டின் ஆரம்பத்தில் நிதி அல்லது நிதிக்கு சமமான பெறுமதி | 541,262,961 | 108,953,351 |
| ஆண்டின் இறுதியில் நிதி அல்லது நிதிக்கு சமமான பெறுமதி | **1,038,442,452** | **541,262,961** |

| குறிப்பு-1 | | |
|---|---|---|
| இலங்கை வங்கி -2323284 | 432,552 | 4,703,238 |
| இலங்கை வங்கி-பல்கலைக்கழக புலமைப்பரிசில் நிதி | 7,331,659 | 6,559,723 |
| இலங்கை வங்கி - குறகிய கால முதலீடுகள் | 850,000,000 | 530,000,000 |
| 80045617 இற்கு முதலிடப்பட்டவை | 180,678,240 | - |
| | **1,038,442,452** | **541,262,961** |

# විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
# கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
# AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } එච්ඊඩී/ඒ/යූජීසී/6/16/1

මබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2017 නොවැම්බර්

සභාපති,

විශ්වවිද්‍යාල ප්‍රතිපාදන කොමිෂන් සභාව.

විශ්වවිද්‍යාල ප්‍රතිපාදන කොමිෂන් සභාවේ 2016 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 1978 අංක 16 දරන විශ්වවිද්‍යාල පනතේ 12(5) වගන්තිය ප්‍රකාර විගණකාධිපති වාර්තාව

---

මාගේ සමාංක හා 2017 ඔක්තෝබර් 16 දිනැති ලිපියට යොමුවේ.

02. ඉහත සඳහන් ලිපිය සමඟ එවන ලද මාගේ වාර්තාවේ දෙමළ අනුවාදය මේ සමඟ එවා ඇත.

ඩබ්ලිව්.ප්‍රේමනන්ද

අතිරේක විගණකාධිපති

විගණකාධිපති වෙනුවට.

පිටපත් -: 1. ලේකම් - උසස් අධ්‍යාපන හා මහාමාර්ග අමාත්‍යාංශය

2. ලේකම් - මුදල් හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல. / My No. } எச்ஈடீ/ஏ/யூஜீசீ/6/16/1

මබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2017 ஒக்தோபர் 16

UNIVERSITY GRANTS COMMISSION 08 JAN 2018 CHAIRMAN

தலைவர்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது 1978 இல் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 12 (5) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 12(4) மற்றும் (8) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 12(5) இன் பிரகாரம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்படாமை

ஆணைக்குழுவின் உப தலைவர், தலைவர் பதவியினை வகித்து பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பணிப்பாளர் சபையின் அங்கத்துவத்தினை வகித்து பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்திற்கு இணங்காத வகையில் பிணையால் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாக லங்கா எடியுகேசன் என்ட் ரிசர்ச் நெட்வக்ஸ் கம்பனி 2009 யூன் 25 ஆந் திகதி 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது. அந்த கம்பனியால் உயர்கல்வி நிறுவனங்களுக்கான இணையத்தள வசதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

ஆணைக்குழுவின் பதவியணிக்காக வெளியிடப்படும் கடன் பணம் மற்றும் மாதாந்த நட்டக்கழிவு உள்ளடங்கலான கடன் பதிவேடொன்று முறையாகப் பேணிச் செல்லப்பட்டிராததுடன், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டோலைகளின் பிரகாரம் ரூபா 1,958,127 தொகையான ஊழியர் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை நட்டக்கழிவு பதிவேட்டு மீதியுடன் இணக்கம் செய்யும் போது ரூபா 1,109,059 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.3 பெறவேண்டிய கணக்குகள்

2011 ஆம் ஆண்டின் போது வரிசை அமைச்சிற்காக செலுத்தப்பட்ட ரூபா 893,271 கூட்டுத்தொகையான செலவினத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், தொடர்ந்தும் முற்பணமாக முன்கொண்டு வரப்பட்டவாறு காணப்பட்டது.

2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

2015 யூலை 14 ஆந் திகதிய 04/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்திக்கு முரனாக போட்டி நிறுவனங்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படாமல் காப்புறுதி நிறுவனமொன்றை தெரிவு செய்து மீளாய்வாண்டின் போது 17 வாகனங்களுக்காக 2014 ஆம் ஆண்டிற்காக வாகனங்களின் சந்தைப் பெறுமதியினை அடிப்படையாகக் கொண்டு காப்பீட்டினைப் பெற்று ரூபா 1,317,405 தொகையான காப்புறுதி தவணைப்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 16,958,489 ஆன மிகையொன்றாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 43,081,432 ஆனமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 26,122,943 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. சம்பளம் மற்றும் படிகள் மற்றும் ஊழியர் நலன்புரி செலவினம் ரூபா 27,530,214 இனால் அதிகரித்தமை மேற்படி வீழ்ச்சி தொடர்பில் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் மற்றும் கடந்த 4 வருடங்களின் நிதி விளைவுகளை பகுத்தாராய்ந்து பார்க்கும் போது 2012 ஆம் ஆண்டின் ரூபா 17,835,677 தொகையான மிகை 2016 ஆம் ஆண்டு வரையிலும் தளம்பளடைந்தவாறு காணப்பட்டது. எவ்வாறெனினும், நிதி விளைவிற்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லா சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு ஆகியவற்றை மீள சீராக்கும் போது 2012 ஆம் ஆண்டிற்கான ரூபா 171,093,830 தொகையான பங்களிப்பானது, 2013 ஆம் ஆண்டின் போது சிறிய அளவினால் குறைவடைந்திருந்ததுடன், 2014 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக அதிகரித்து 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 235,124,107 ஆக இருந்தது.

3.2 நிறுவனத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ஆணைக்குழுவிற்கு எதிராக நீதிமன்றங்களில் மற்றும் ஏனைய நிறுவனங்களில் 54 சட்டரீதியான சம்பவங்கள் விசாரணை செய்யப்பட்டவாறு இருந்ததுடன், அவற்றுள் 30 மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டவைகளாகும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், தேசிய கொள்கைக்கமைய பல்கலைக்கழக கல்வியினை திட்டமிடல் மற்றும் இணைப்பு செய்தல், பல்கலைக்கழக கல்விக்காக பாராளுமன்றத்தால் நிதியேற்பாடு செய்யப்பட்ட பணத்தை உயர்கல்வி நிறுவனங்களுக்கு பகிர்ந்தளித்தல் மற்றும் அந்த உயர்கல்வி நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் செலவினங்களை கட்டுப்படுத்தல், உயர்கல்வி நிறுவனங்களின் கல்வி நிலையினை பேணுதல், உயர்கல்வி நிறுவனங்களின் நிர்வாகத்தினை முறைமைப்படுத்தல், ஒவ்வொரு உயர்கல்வி நிறுவனங்களுக்கும் மாணவர்களை இணைத்துக் கொள்ளல் ஆகியவற்றை முறைமைப்படுத்தல் சபையின் நோக்கமாகும்.

அந்த நோக்கங்களை அடைந்து கொள்ளல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளல்

கடந்த 04 வருடங்களினுள் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் 2012/2013 கல்வியாண்டு முதல் 2015/2016 கல்வியாண்டு வரையிலும் பல்கலைக்கழக கல்விக்கு தகைமை பெற்ற மாணவர்களில் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

(ஆ) பல்கலைக்கழகங்களுக்கு உள்நாட்டு மாணவர்களை இணைத்துக் கொண்டதன் பின்னர் ஏற்படும் வெற்றிடங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஆணைக்குழுவினால் கொழும்பு, களனி, ஸ்ரீ ஜயவர்த்தனபுர போன்ற பிரதான பல்கலைக்கழகங்களைப் போன்று ஏனைய பல்கலைக்கழகங்களில் நடாத்தப்படும் பௌதீக விஞ்ஞானம், விவசாய தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம், உணவு விஞ்ஞானம் மற்றும், தொழில்நுட்பம், கணனி விஞ்ஞானம், உயிரியல்

விஞ்ஞானம் போன்ற பாடநெறிகளுக்கான தகைமைகளை பூர்த்தி செய்த மாணவர்கள் அந்த பாடநெறிகளின் கீழ் பதிவு செய்யப்படாமையால் ஏற்படும் மாணவர் வெற்றிடங்களுக்கு தொடர்ந்தும் விண்ணப்பித்துள்ள மாணவர்களிடையே மீண்டும் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்காமையால் 2013/2014 கல்வியாண்டு முதல் 2015/2016 கல்வியாண்டு வரையிலும் முறையே 1,794, 1,455 மற்றும் 1,695 வெற்றிடங்கள் நிலவின. அதன் பிரகாரம், பல்கலைக்கழகங்களுக்கு நுழையும் தகுதியினை பெற்றுள்ள பெரும் எண்ணிக்கையான மாணவர்களுக்கு பல்கலைக்கழக நுழைவிற்கான வாய்ப்பு இழக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) 2015/2016 ஆம் கல்வியாண்டில் நிலவிய 1,695 வெற்றிடங்களின் 990 வெற்றிடங்களுக்காக பல்கலைக்கழகங்களில் பல்வேறு பாடநெறிகளுக்கான தகுதியினை பெற்றுள்ள மாணவர்களுக்கு பதிவு செய்யுமாறு அறிவித்து அனுப்பப்பட்டிருந்த போதிலும், சில பாடநெறிகளில் காணப்படும் காலத்துக்கு ஒவ்வாத மற்றும் நடைமுறைக்குப் பொருந்தாமை போன்றவற்றால் பல்கலைக்கழக நுழைவினை கையேற்காமையால் ஏற்பட்ட வெற்றிடங்கள் என்பது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே பீடாதிபதிகளால் பல்கலைக்கழகங்களின் கல்விசார் பணிகளை ஆரம்பித்ததன் பின்னர் மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படகூடாது என மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டிருந்தமையால் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

**(இ) பல்கலைக்கழகங்களுக்கு வெளிநாட்டு மாணவர்களை இணைத்துக்கொண்டதன் பின்னர் ஏற்படும் வெற்றிடங்கள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2011 சனவரி 25 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், இலங்கையின் பல்கலைக்கழகங்களுக்கு வெளிநாட்டு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், கடந்த மூன்று கல்வியாண்டுகளுக்காக பல்கலைக்கழகங்களுக்கு வெளிநாட்டு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் போது எதிர்பார்க்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை மற்றும் இணைத்துக் கொள்ளப்பட்ட மாணவர் எண்ணிக்கை ஆகியவற்றுக்கிடையே பின்வரும் முரண்கள் நிலவின.

| கல்வியாண்டு | உத்தேசிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | இணைத்துக் கொள்ளப்பட்ட மாணவர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2013/2014 | 62 | 41 | 21 |
| 2014/2015 | 36 | 27 | 09 |
| 2015/2016 | 61 | 17 | 44 |

(ii) உள்நாட்டு பல்கலைக்கழகங்களுக்காக தெரிவு செய்யப்படும் வெளிநாட்டு மாணவர்கள் கொழும்பிற்கு வெளியேயுள்ள பல்கலைக்கழகங்களுக்கு நுழைவினைப் பெறாத போக்கானது இந்த வெற்றிடங்கள் தொடர்பில் பிரதானமாக தாக்கமளித்திருந்ததுடன், அந்த பல்கலைக்கழகங்களின் தரத்தினை உயர்த்துவதுடன் போக்குவரத்து வசதிகள், தங்குமிடம், உணவு மற்றும் சுகாதார வசதிகள் உள்ளடங்கலான ஏனைய வசதிகளும் சர்வதேச தரத்திற்கு பொருந்தும் வகையில் அபிவிருத்தியடையாமை இதற்கான காரணமாக அமைந்துள்ளதாகவும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 4.2 முகாமைத்துவ தொழிற்பாடுகள்

ஆணைக்குழுவினால் 2015 ஆம் ஆண்டின் போது தாபிக்கப்பட்ட ஆண்/ பெண் சமூக நிலையின் சமனான தன்மை/ நியாயத்தன்மை தொடர்பான கேந்திரம் மற்றும் தரத்தினை பாதுகாத்தல் தொடர்பில் சபைக்காக இட வசதிகளை பெற்றுக்கொள்ளல் போன்றவற்றுக்காக தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம், மாதாந்த வாடகை ரூபா 150,000 ஆன கட்டிடமொன்று ரூபா 225,000 தொகையான மாதாந்த வாடகைக்கு ஒரு வருட காலப்பகுதிக்காக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

## 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவிற்கு பல்கலைக்கழகங்களின் மனிதவள அபிவிருத்திக்காக 2014 மற்றும் 2015 ஆகிய வருடங்களில் மூலதன மானியமாக திறைசேரியிலிருந்து வழங்கப்பட்டிருந்த ரூபா 190 மில்லியன் பணத்தில்

எஞ்சியிருந்த ரூபா 24 மில்லியன் பணம் திறைசேரியின் அங்கீகாரமின்றி சபையினால் மீளாய்வாண்டின் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) திறைசேரியின் இணக்கப்பாடின்றி ஆணைக்குழுவின் தீர்மானமொன்றின் அடிப்படையில் வெளியிடப்பட்ட 2014/6(ii) மற்றும் 2015 மே 07 ஆந் திகதிய உள்ளக சுற்றறிக்கைக்கமைய ஒழுங்கமைக்கப்பட்ட சம்பளத்தினை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு சதவீதங்களின் அடிப்படையில் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களுக்கு 2014 மே 28 ஆந் திகதி முதல் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 1,301,220 தொகையான பணம் உபசரணை செலவினமாக மீளளிக்கப்பட்டிருந்தது.

(இ) உடன்படிக்கை மீறப்பட்டமையின் காரணமாக பேராசிரியர்களிடமிருந்து அறவிடப்பட்ட பணம் பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 10(2) மற்றும் 99(1) ஆம் பிரிவுகளின் பிரகாரம், பல்கலைக்கழக நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். எவ்வாறெனினும், அதற்கு முரணாக திறைசேரியின் அங்கீகாரமின்றி 1998 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய 737 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கையின் பிரகாரம், உடன்படிக்கையை மீறிய பேராசிரியர்களின் நிதியம் "Band Violation / Breach Fund" எனும் பெயரிலான நிதியமொன்றை தாபித்து அந்த பணத்தினை முதலீடு செய்வதன் மூலம் கிடைக்கும் வருமானம் நிறுவனத்தின் மற்றும் பல்கலைக்கழகங்களின் பல்வேறு செலவினங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம், ஆணைக்குழுவின் மற்றும் 6 பல்கலைக்கழகங்களில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறாக முறையே ரூபா 1,198,916 மற்றும் ரூபா 266,413,842 தொகையான "Bond Violation" நிதியங்கள் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) தெரிவுப் பரிசோதனைக்கமைய 4 பல்கலைக்கழகங்களின் உடன்படிக்கையினை மீறிய பேராசிரியர்களிடமிருந்து மீளாய்வாண்டு இறுதியில் உள்ளபடியாக ரூபா 189,232,994 தொகையான பணம் அறவிடப்பட வேண்டியதாக இருந்ததுடன், அந்த பணத்தை அறவிடுதல் தொடர்பில் பல்கலைக்கழக தாபன விதிக்கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 7.6 மற்றும் 7.8 ஆம் பந்திகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.4 நிதியங்களின் குறைப்பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திறைசேரியினால் மீளாய்வாண்டினுள் குறைநிரப்பு மதிப்பீடுகளினூடாக 05 மூலதன பணிகளுக்காக ரூபா 3,855,000,000 தொகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அவற்றுள் 03 மூலதன பணிகளுக்காக ரூபா 1,750,000,000 தொகையான பணம் திறைசேரியினால் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் 2016 திசெம்பர் 29 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த ரூபா 900,000,000 தொகையில் ரூபா 409,054,248 தொகையான பணம் எஞ்சியிருந்தது.

(ஆ) பல்வேறு வகையிலான புலைமைப்பரிசில்களை வழங்குவதற்காக ஆணைக்குழுவினால் ரூபா 23,899,632 ஆன 30 நிதியக் கணக்குகள் பேணிச் செல்லப்பட்டிருந்த போதிலும், புலமைப் பரிசில் பணிகளுக்காக 05 நிதியக் கணக்குகளில் ரூபா 15,336,221 தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. பயன்படுத்தப்படாத 25 நிதியக் கணக்குகளில் ரூபா 8,563,411 தொகையான மீதியொன்று நிலவியதுடன், அந்த பணம் வங்கி நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

4.5 தாமதமடைந்த செயற்திட்டங்கள்

ஆணைக்குழுவின் நான்கு மாடிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 59,842,180 தொகையான ஒப்பந்த பெறுமதிக்கு 2015 யூன் 22 ஆந் திகதி ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம், பணியினை பூர்த்தி செய்ய வேண்டிய திகதி 2016 செப்தெம்பர் 14 ஆந் திகதி ஆக இருந்த போதிலும், அத் திகதியில் உள்ளவாறான செயற்திட்டத்தின் பௌதீக செயன்முன்னேற்றம் 35 சதவீதமாகும். ஒப்பந்ததாரரின் 2016 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய கோரிக்கையினை கவனத்தில் கொண்டு ஆணைக்குழுவால் ஒப்பந்தக் காலமானது 2017 சனவரி 12 ஆந் திகதி வரையிலும், அதன் பின்னர் 2017 ஏப்ரல் 10 ஆந் திகதி வரையிலும் நீடிப்பு செய்யப்பட்டிருந்த போதிலும், 2017 யூன் 20 ஆந் திகதி முடிவடையும் வரையிலும், கட்டிடத்தின் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை என்பது பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

## 4.6 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவின் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 318 ஆகவும், உள்ளபடியான பதவியணி 259 ஆகவும் இருந்ததுடன், வெற்றிடங்களின் எண்ணிக்கை 59 ஆகும்.

(ஆ) 2014 நவம்பர் தொடக்கம் வெற்றிடமாக காணப்பட்ட பணிப்பாளர் திட்டமிடல் பதவிக்காக ஆட்சேர்ப்பு நடைமுறையினை பின்பற்றி நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு பதிலாக, அறுவைச் சிகிச்சை மருத்துவ விஞ்ஞானம் தொடர்பான பட்டப் பின் படிப்பு உடைய மருத்துவரொருவர் 2016 ஒக்தோபர் 03 ஆந் திகதி பணிக் கையளிப்பு அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டு, திறைசேரியின் அங்கீகாரமின்றி ரூபா 200,000 படியான மாதாந்த படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

(இ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாத ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தினை வலுவூட்டுவதற்கான இணைப்பாளர் பதவியொன்றிற்காக திறைசேரியின் அங்கீகாரமின்றி ரூபா 200,000 படியான மாதாந்த படியொன்றின் அடிப்படையில் 2016 ஒக்தோபர் 03 ஆந் திகதி பெண் உத்தியோகத்தரொருவர் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

## 5. கணக்களி தகைமையும் நல்லாளுகையும்

### பெறுகைகள் திட்டம்

ஆணைக்குழுவின் பிரதான கட்டிடத்தில் 09 இடங்களில் பாதுகாப்பு கமரா முறைமையொன்றினை பொருத்துவதற்கு ரூபா 3.5 மில்லியன் தொகை மற்றும் மனிதவள தகவல் கட்டமைப்பினை தாபிப்பதற்கு ரூபா 3 மில்லியனுமாக 2016 ஆண்டிற்கான பெறுகைகள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் அந்த பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன், 2017 ஆம் ஆண்டிற்கான பெறுகைகள் திட்டத்தில் இந்த பணிகள் மீண்டும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் தொடர்பில் அவ்வவ்போது ஆணைக்குழுவின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பரப்புகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நிதியக் கட்டுப்பாடு | நிதியங்கள் உரிய முறையில் பயன்படுத்தப்பட்டிருக்காமை |
| (ஆ) நிதிக் கட்டுப்பாடு | பதவியணிக்கு வழங்கப்பட்ட கடன் பணம் மற்றும் நட்டக்கழிவு உள்ளடக்கப்பட்ட கடன் பதிவேடொன்று முறையாக பேணப்பட்டிராமை |
| (இ) செயற்திட்டக் கட்டுப்பாடு | பெறுகைகள் திட்டம் உரிய முறையில் தயாரிக்கப்படாமை, உரிய இலக்குகளை அண்மிக்காமை மற்றும் நிர்மாணச் செயற்திட்டங்களின் தாமதங்கள் நிலவுகின்றமை. |
| (ஈ) பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை சேர்த்தல் | நடைமுறைக்கு பொருந்தும் பாடநெறிகளை அறிமுகப்படுத்தாமை. |

டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் 2016 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரங்கள் சட்டத்தின் 12(5) உறுப்புரைக்கமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள் | உத்தேச நடவடிக்கைகள், தற்போதைய நிலைமை மற்றும் செயற்பாடு |
|---|---|---|---|
| 1. தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்தாமை | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டிருந்த வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாக லங்கா கல்வி மற்றும் ஆய்வு நெட்வெர்க்ஸ் ஆனது 2009 ஜுன் 25 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் இந்தக் கம்பனியின் பணிப்பாளர் சபையின் தலைவராகவும்இ பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராகவும் நின்று பல்கலைக்கழக அதிகாரங்கள் சட்டத்திற்கு பொருத்தமில்லாத விதத்தில் உருவாக்கப்பட்டிருப்பினுமஇ இவ் வரையறுக்கப்பட்ட கம்பனியால் உயர் கல்வி நிறுவனங்களுக்கு இணையத்தள வசதிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்ததுடன்இ எவ்வாறாயினும் இந்த தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள் நிதிக் கூற்றுக்களின் ஊடாக | உடன்படுகிறோம்<br><br>உரிய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்தப்படுவதனை இலங்கை கணக்கீட்டு தர இலக்கம் 24 இன் ஊடாகவே பரிந்துரை செய்யப்படுகின்றது. ஆனாலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவானது 2011 மார்ச் 01 ஆம் திகதிய 3/2011 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கைக்கமையவே அரச கணக்கீட்டு கொள்கைகளை பின்பற்றி வருகின்றது என்பதுடன் உரிய தரப்பினருடனானகொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆயினும்இ கணக்காய்வுப் பரிந்துரை என்ற அமைப்பில் 2017 ஆம் ஆண்டில் இருந்து அதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | உடன்படுகின்றது<br><br>கணக்காய்வு பரிந்துரை என்ற அமைப்பில் 2017 ஆம் ஆண்டில் இருந்து உரிய தரப்பினருடன் இருக்கும் கொடுக்கல் வாங்கல்களின் கீழ் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள் | உத்தேச நடவடிக்கைகள், தற்போதைய நிலைமை மற்றும் செயற்பாடு |
|---|---|---|---|
| | வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள் | ஆணைக்குழுவின் பதவியணியினருக்காகாக வெளியிடப்படும் கடன்தொகை மற்றும் மாதாந்தக் கடன் தொகை சமர்ப்பிப்பு என்பவற்றை உள்ளடக்கிய கடன் ஆவணமானது வினைத்திறனான முறையில் முன்னெடுக்கப்படாதிருந்ததுடன்இ 2016 டிசம்பர் 31 ஆந் திகதியிற்கு நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த உப ஆவணத்தின் படி ரூபா.1இ958இ127 தொகையான சேவையாளர் கடன் மீதிகளின் மொத்தமானது சமர்ப்பிக்கப்பட்ட கடன் தொகை ஆவணத்தின் மீதியுடன் ஒப்பிடும் போது ரூபா.1இ109இ059 அளவான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது. | உடன்படவில்லை<br><br>நிதிக் கூற்றுக்களில் சேவையாளர்கள் கடன் மிகுதிகளில் மற்றும் உப ஆவணங்களிலன் மீதிகளிற்கிடையிலான வித்தியாசத்திற்கான காரணங்கள் கீழே தெளிவுறுத்தப்பட்டுள்ளது | உடன்படவில்லை<br><br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது எப்பொழுதுமே சேவையாளர் கடன் மிகுதி மற்றும் உப ஆவணங்களில் உள்ள மிகுதிகளை ஒப்புநொக்கியதன் பிற்பாடே நிதிக் கூற்றுக்களில் உள்வாங்கும். |

| சேவை இல | உப ஆவண அடிப்படையில் பெறுமதி 2016.12.31 | சேவையாளர் கடன் ஆவண அடிப்படையில் பெறுமதி | தெளிவுபடுத்தல் |
|---|---|---|---|
| 157 | 250,000,00 | 134,108,26 | உப ஆவணத்தின் படி,கடன் மீதி மற்றும் சேவையாளர் கடன் ஆவணப் படிஇ கடன் மிகுதியானது சரியாகப் பொருந்தும். |
| 363 | 243,450,00 | 30,591,50 | |
| 417 | 250,000.00 | 137,499,91 | |
| 432 | 210,250,00 | 123,339.94 | |
| 489 | 171,870,00 | -- | |
| 518 | 250,000,00 | 16,000.13 | |
| 538 | 193,690,00 | -- | |

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள் | | | | உத்தேச நடவடிக்கைகள், தற்போதைய நிலைமை மற்றும் செயற்பாடு |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | 417 | 10,200.00 | -- | | |
| | | 417 | 30,000,00 | -- | | |
| | | 417 | 120,000.00 | -- | | |
| | | 216 | (-927) | 191,666.62 | | |
| | | 239 | 208,333.31 | 207,362.51 | 2016 செப்டெம்பர் மாத பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சம்பளௗ உருவாக்கத்திற்காக வேண்டி புதிய கணிணிப் மென்பொருளொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. 2016 ஒக்டோபர் மாதம் இப் புதிய மென்பொருளின் ஊடாக ஆரம்ப மிகுதியை முன்னே கொண்டு வரும் பொழுது முறைமையின் ஒரு கோளாறு காரணமாக இவ் வித்தியாசம் ஏற்பட்டுள்ளதுடன் இ மேற்படி தவறானது ஏலவெ சரிப்படுத்தப்பட்டுள்ளது. | |

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள் | | | | உத்தேச நடவடிக்கைகள், தற்போதைய நிலைமை மற்றும் செயற்பாடு |
|---|---|---|---|---|---|---|
| | | 41 | 731.00 | -- | சேவையாளர் ஒருவர் ஓய்வு பெறும் போது அவ்வாறு ஓய்வு பெற்ற மாதத்தின் உடனடியான அடுத்த மாதத்திலிருந்து அவ் ஊழியரின் பெயரானது சம்பள முறைமையில் இருந்து நீக்கப்படும்.அதன டிப்படையில் சேவையாளர் கடன் ஆவணத்திலிருந்து கணக்காய்வு விசாரணையின் பொது குறிப்பிட்டுள்ள பெயரானது 2016 நவம்பர் மாதத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளது.. ஆயினும்இநிரந்தர கடன் ஆவணத்தில் இந்த சேவையாளர் கடன் குறிப்பிடப்பட்டுள்ள து. அதனடிப்படையில் இஇந்த சேவையாளரின் கடன் தொகையானது செலுத்தப்பட்டதன் | |
| | | | 11,000.00 | -- | | |

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள் | | | | உத்தேச நடவடிக்கைகள், தற்போதைய நிலைமை மற்றும் செயற்பாடு |
|---|---|---|---|---|---|---|
| | | 432 | 10,200.00 | 8,500.00 | பிற்பாடு மாத்திரமே கடன் ஆவணத்திலிருந்து குறித்த மிகுதியானது நீக்கப்டும். | |
| | | 393 | (170) | - | 2016 செப்டெம்பர் மாத பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சம்பளத்தினை அமைப்பதற்காக புது கணிணி மென்பொருளொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 2016 ஒக்டோபர் மாதம் இப் புதிய மென்பொருளின் ஊடாக ஆரம்ப மிகுதியை முன்னே கொண்டு வரும் பொழுது முறைமையின் ஒரு கோளாறு | |
| | | 375 | (500) | - | | |

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள் | உத்தேச நடவடிக்கைகள், தற்போதைய நிலைமை மற்றும் செயற்பாடு |
|---|---|---|---|
| | | காரணமாக இவ் வித்தியாசம் ஏற்பட்டுள்ளதுடன் இ மேற்படி தவறானது ஏலவெ சரிப்படுத்தப்பட்டுள்ளது. | |
| 2.3 பெற வேண்டிய கணக்குகள் | 2011 ஆம் ஆண்டின் போது நிரல் அமைச்சுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா.893,271 செலவினம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், அது தொடர்ந்தும் முற்பணமாக முன் நோக்கிக் காண்பிக்கப்பட்டிருந்தது. | உடன்படுகிறது.<br><br>நிரல் அமைச்சிடமிருந்து இந்த நிதியை தீர்ப்பதற்கு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் இது குறித்த நிரந்தரமான தேடுதல் நடாத்தப்படும். | உடன்படுகிறது.<br><br>நிரல் அமைச்சிடமிருந்து இந்த நிதியை தீர்ப்பதற்கு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் இது குறித்த நிரந்தரமான தேடுதல் நடாத்தப்படும். |
| 2.4. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் இமற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை | 2015 ஜுலை 14 அந் திகதிய இல 04/2015 அரச நிதிச் சுற்றறிக்கையின் 02 ஆவது பந்திக்கு எதிரான அமைப்பில் போட்டி நிறுவனங்களின் விலை மனுக்கோரல் ஏதும் இன்றி காப்புறுதி நிறுவனமொன்றைத் தேர்வு செய்து மீளாய்வாண்டின் போது 17 வாகனங்களுக்காக வேண்டி 2014 ஆம் ஆண்டு தொழிற்சந்தையில் | இப்போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் மூலம் போட்டிக்குரிய விலைமனுக்களை வரவழைத்து மோட்டார் வாகன காப்புறுதியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் போட்டிக்குரிய விலைமனுக்களை வரவழைத்து மோட்டார் வாகன காப்புறுதியை மேற்கொள்ள நடவடிக்கை |

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள் | உத்தேச நடவடிக்கைகள், தற்போதைய நிலைமை மற்றும் செயற்பாடு |
|---|---|---|---|
| | வாகனங்களின் பெறுமதியினை அடியொட்டி காப்புறுதித்திட்டம் ஒன்றைப் பெற்று ரூபா.1இ317இ405 தொகையானது தவணைக்குரிய காப்புறுதித் தொகையாகச் செலுத்தப்பட்டது. | | எடுக்கப்பட்டுள்ளது. |
| 3.நிதி மீளாய்வு<br><br>3.1 நிதி விளைவுகள் | | | |
| 5. <u>கணக்கீட்டு நடவடிக்கை மற்றும் நல் ஆளுகை</u><br><br>பெறுகைகள் திட்டம் | (இ) அனுமதிக்கப்பட்ட பதவியணிக்கு உட்சேர்க்கப்படாத ஆங்கில மற்றும் தகவல் தொழில்நுட்பத்தினை உறுதியாக்கிக் கொள்வதற்கான ஒருங்கிணைப்பாளர் பதவியொன்றிற்காக திறைசேறியின் அனுமதியின்றி ரூபா.200,000 மாதாந்தக் கொடுப்பனவின் அடிப்படையில் 2016 ஒக்டோபர் 03 ஆந் திகதி பெண் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டார். | பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறும் மாணவர்களின் பட்டத்தின் பொருத்தப்பாடு மற்றும் சிறப்புத் தரத்தினை மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்டு செயற்படுத்துவதற்கு உத்தோசிக்கப்பட்ட ஆங்கில மொழி மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான கருத்திட்டத்தின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைக்காக கணக்காய்வு விசாரணையில் குறிப்பிட்டுள்ள படி சம்பந்தப்பட்ட பெண் பேராசிரியர் ரூபா.200,000 கொடுப்பனவு அடிப்படையில் பணி ஒப்படைப்பு அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார்.<br><br>மேலே (அ) (ஆ) (இ) கீழான சகல நியமனங்கள் மற்றும் அதனுடன் இணைந்தசெயற்பாடுகள் மற்றும் பணிகள் 1978 ஆம் ஆண்டின் இல 16 பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 100 (2) பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அவ் அதிகாரச் சட்டத்தின் மூலம் கிடைத்த அதிகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | ஆங்கில மற்றும் தொழில்நுட்பவியல் பாடங்களுக்காக ஒருங்கணைப்பாளர் ரீதியில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பேராசிரியையின் சேவையானது அக் கருத்திட்ட அறிக்கையானது பூரணமுற்றதன் பின்னர் நிறுத்தப்பட்டது. |
| | ஆணைக்குழுவின் பிரதான கட்டிடத்தின் 9 இடங்களில் பாதுகாப்புக் கேமரா முறைமையொன்றை பொருத்துவதற்கு ரூபா.3.5 மில்லியன் பெறுமதியும் | 4 மாடிக் கட்டிட நிர்மாண நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டின் பெறுகைகள் நடவடிக்கைகள் ஆரம்பித்து 2016 அம் ஆண்டில் முடிவு பெறுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் கீழ் வரும் காரணிகள் இந் நடவடிக்கையானது தாமதிப்பதற்குக் | 2017 ஆம் ஆண்டின் பெறுகைகள் திட்டத்திற்கு உட்சேர்க்கப்பட்டுள்ள 5 விடயங்களுக்கு உட்பட்ட விடயங்கள் கீழ் வரும் |

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள் | உத்தேச நடவடிக்கைகள், தற்போதைய நிலைமை மற்றும் செயற்பாடு |
|---|---|---|---|
| | மற்றும் மனிதவள தகவல் முறைமை ஒன்றைத் தாபிப்பதற்கு ரூபா. 3 மில்லியன்பெறுமதியும் என 2016 ஆம் ஆண்டில் கொள்வனை வழங்கல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது இவ் விடயங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் 2017 ஆம் ஆண்டின் பெறுகைகள் திட்டத்திற்கு அச் செயற்பாடுகள் மீள இணைக்கப்பட்டது. | காலாய் அமைந்தன.<br>• ஆணைக்குழு உறுப்பினர்கள் விலகிச் சென்று புதிய ஆணைக்குழு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு பெறுகைகள் குழுவை நியமித்துக் கொள்வதற்காக வெண்டி 2015 பெப்ரவரி மாதம் தொடக்கம் ஏப்ரில் மாதம் வரையான கால நீடிப்பு தாமதத்திற்கு காரணமாகியது.<br>• கட்டுமானப் பணியின் போது மழை உட்பட வேறு இயற்கைக் காரணிகளின் செல்வாக்கினால் தாமதமடைதல்<br>இது வரைக்கும் கட்டுமானச் செயற்திட்டங்கள் கால எல்லையானது 2017 ஏப்ரில் மாதம் வரை கால நீடிப்புச் செய்யப்பட்டதுடன் 4 மாடிக் கட்டிட நிர்மாணிப்பு 2017 பெறுகைகள் திட்டத்திற்கு உட்சேர்க்கப்பட்டமை.<br>நிதித் திணைக்களம் மற்றும் வரவேற்பு உத்தியோகத்தர் கவுன்டர் ஆகியவற்றை புதுப்பிக்கும் நடவடிக்கை 2015,2016 ஆண்டுகளில் செய்யப்படுவதற்கு எதிர்பார்பினும் பிரதபன கட்டுமானப் பணியானது இடம்பெற்றுக்கொண்டிருப்பதால் இப் புதுப்பிக்கும் நடவடிக்கைகளை அதனோடு இணைந்து ஒ்ன்றாகச் செய்யும் பொழுது நிறுவக வளாகத்தினுள் ஏற்படும் தடைகளினைக் கருத்திற் கொண்டு நிதித் திணைக்களம் மற்றும் வரவேற்புக் கவுன்டர் ஆகியவற்றை புதுப்பிக்கும் நடவடிக்கைகளை நிறுத்தப்பட்டன.தற்போது இந் 4 மாடிக் கட்டிடத்தின் பணிகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ள படியால் நிதித் திணைக்களத்தினைப் புதுப்பிக்கும் நடவடிக்கைகள் | அமைப்பில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.<br>• 4 மாடிக் கட்டிடத்திற்கு 2017.09.15 ஆந் திகதி முதல் பதவியணியினர் உள்வாங்கப்பட்டுள்ளனர்<br>• நிதித் திணைக்களத்தினை புணர்நிர்மாணம் செய்தல் 2017 ஜூலை மாதத்துடன் நிறைவு பெற்றுள்ளது<br>• வரவேற்பு கவுன்டர் உருவாக்கம் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.<br>• மனித வள தகவல் முறைமையான |

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள் | உத்தேச நடவடிக்கைகள், தற்போதைய நிலைமை மற்றும் செயற்பாடு |
|---|---|---|---|
| 6.முறைமைகளும் கட்டுப்பாடுகளும் | | ஆரம்பிக்கப்பட்டுள்ளன.அதனடிப்படையில் இச் செயற்பாடானது 2017 ஆம் ஆண்டின் பெறுகைகள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டது.<br><br>அதே வேளை மக்கள் தொடர்பு அதிகாரிக் காரியாலயதினை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் 2017 பெறுகைகள் திட்டத்தில் உட்சேர்க்கப்பட்டுள்ளன.<br><br>பாதுகாப்புக் கேமரா முறைமை உருவாக்கும் விடயம் 2015, 2016 கொள்வனை வழங்கல் திட்டத்தில் உள்ளடங்கியிருந்த போதிலும் புதிய 4 மாடிக் கட்டிடமும் உள்ளடங்கும் விதமாக இந் நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டியிருந்ததால் இந் நடவடிக்கைகள் இரண்டும் 4 மாடிக் கட்டிடமானது பூர்த்தி செய்யப்பட்டு முடியும் வரைக்கும் காலந் தாழ்த்தப்பட்டது.<br><br>புதிய கட்டிட உருவாக்கமானது தற்போது கடைசிக் கட்டத்தில் இருப்பதுடன் பாதுகாப்புக கேமரா தொகுதி பொருத்தும் நடவடிக்கைகள் 2017 பெறுகைகள் திட்டத்திற்கு உட்சேர்க்கப்பட்டு விலைமனுக் கோரல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>மனிதவள மென்பொருள் ஆனது 2016 ஆம் ஆண்டு உருவாக்குவதற்காக வேண்டி ஒப்பந்தக்காரர் ஒருவரைத் தெரிவு செய்து கையளிப்புச் செய்த போதிலும் அவ் ஒப்பந்தக்காரர் அதனை நிறைவேற்றவில்லை.அதற்குப் பதிலாக ஒப்பந்தக்காரருக்கு எந்தவிதக் கொடுப்பனவையும் செலுத்தாது இருந்ததுடன் பின்னர் 2017 ஆம் ஆண்டில் உத்தேசிக்கப்பட்ட முகாமைத்துவத் தகவல் முறைமை மென்பொருளின் மூலம் அவ் விடயம் பூர்தியாக்கப்படுகின்றதென்பதால் மனித வளங்கள் | து உத்தேசிக்கப்பட்ட தகவல் முறைமை மென்பொருள் வாயிலாக தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.முகாமைத்துவ தகவல் முறைமைக்காக வேண்டி தற்போது விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. |

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள் | உத்தேச நடவடிக்கைகள், தற்போதைய நிலைமை மற்றும் செயற்பாடு |
|---|---|---|---|
| | | முறைமையை மீண்டும் பெறுகை செய்தல் நிறுத்தப்பட்டது. இது வரைக்கும் முகாமைத்துவ தகவல் முறைமைக்காக விலைமனுக் கோரப்பட்டுள்ளது. | |
| | ஆய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் தொடர்பில் அடிக்கடி ஆணைக்குழுத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிறது.கீழ் வரும் அதிகாரத் முறைகள் தொடர்பில் விஷேட கவனமானது செலுத்தப்படல் வேண்டும்<br>(அ) நிதியக் கட்டுப்பாடு<br>(ஆ) நிதிக் கட்டுப்பாடு<br>(இ)கருத்திட்ட கட்டுப்பாடு<br>(ஈ)பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல் | அவதானிப்புக்களில் காண்பிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டுத் துறைகளான நிதியக் கட்டுப்பாடு, நிதிக் கட்டுப்பாடுஇ கருத்திட்டக் கட்டுப்பாடு, மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல் தொடர்பில் விஷேட கவனம் செலுத்துவதற்கு உடன்படுகிறது | அவதானிப்புக்களில் காண்பிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டுத் துறைகளான நிதியக் கட்டுப்பாடு, நிதிக் கட்டுப்பாடு, கருத்திட்டக் கட்டுப்பாடு, மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல் தொடர்பில் விஷேட கவனம் செலுத்துவதற்கு உடன்படுகிறது |

பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம்

2016 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியியல் செயலாற்றுகைக் கூற்று

| | | குறிப்பு | 2016 ரூபா | 2015 ரூபா |
|---|---|---|---|---|
| வருமானம் | | | | |
| முதலீட்டு வருமானம் | | 13 | 594,737,836 | 542,857,419 |
| கூட்டுக: வரும | | | 1,498,181 | 29,273,663 |
| வரி நீங்கலான தேறிய வருமானம் | | | 596,236,017 | 513,583,756 |
| கழிக்குக: | செலவுகள் | | | |
| | ஓய்வூதிய நிதியத்தின் சீர்படுத்துகை | 14 | 7,323,848 | 5,554,648 |
| | தொழிற்பாட்டுச் செலவுகள் | 15 | 391,199 | 739,657 |
| | | | 7,715,047 | 6,294,305 |
| செலவுகளை கழித்த பின்னர் தேறிய வருமானம் | | | **588,520,971** | **507,289,450** |
| கூட்டுக: | முன்கொணரப்பட்ட நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம் | | 349,024,903 | 305,275,982 |
| பங்கிட முடியுமான தேறிய வருமானம் | | | 937,545,874 | 812,565,432 |
| கழிக்குக: | அங்கத்துவர் வட்டி | | | |
| | பங்களிப்பு நிதியத்திற்கான வட்டி | | 529,512,380 | 449,951,283 |
| | ஓய்வூதிய நிதியத்திற்கான வட்டி | | 16,002,363 | 13,589,245 |
| | | | 545,514,743 | 463,540,528 |
| முன்கொணரப்பட்ட நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம் | | | 392,031,131 | 349,024,903 |

## பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம்
## 2016 டிசம்பர் 31 ஆம் திகதியன்றுள்ளவாறான நிதியியல் நிலைமைக் கூற்று

| | குறிப்பு | 2016 ரூபா | 2015 ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **அசையாச் சொத்துக்கள்** | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 5 | 56,906,793.00 | 157,270,759 |
| கிடைக்க வேண்டிய முதலீட்டு வருமானம் | 6 | 672,795,030 | 622,687,721 |
| கிடைக்க வேண்டிய பங்களிப்புத் தொகை | 7 | 70,847,929 | 41,178,831 |
| | | 800,549,752 | 821,137,311 |
| நடைமுறையல்லாத சொத்துக்கள் | | | |
| நீண்ட கால முதலீடுகள் | 8 | 5,644,879,590 | 4,493,876,369 |
| | | 5,644,879,590 | 4,493,876,369 |
| மொத்தச் சொத்துக்கள் | | 6,445,429,342 | 5,315,013,680 |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| நானாவித கடன் வழங்குநர்கள் | 9 | 450,260 | 323,026 |
| அங்கத்தவர்களுக்குச் செலுத்த வேண்டிய தொகை | 10 | 6,826,347 | 3,639,071 |
| வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுத் தொகை | 11 | 75,924 | 0 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 12 | 42,558,855 | 54,996,975 |
| | | 49,911,386 | 58,959,072 |
| **மொத்த தேறிய சொத்துக்கள்** | | **6,395,517,956** | **5,256,054,608** |
| **அங்கத்துவ நிதியம் மற்றும் இருப்புக்கள்** | | | |
| பங்களிப்பு நிதியம் | | 5,805,244,685 | 4,755,500,787 |
| ஓய்வூதிய நிதியம் | | 198,242,140 | 151,528,918 |
| ஒட்டுமொத்த வருமானம் | | 392,031,131 | 349,024,903 |
| **நிதியத்தின் தேறிய பெறுமதி** | | **6,395,517,956** | **5,256,054,608** |

ஒப்பம்:திஸ்ஸ நந்தசேன
செயலாளர்

ஒப்பம்:ஆர்.ஏ.யூ.ரணவீர
கணக்காளர்

பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம்

2016 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று

| | 2016 | 2015 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல் | | |
| வரி மற்றும் செலவுக்குப் பின்னரான தேறிய வருமானம் | 588,520,971 | 507,289,450 |
| கூட்டுக/(கழிக்குக): திறைசேரி முறிகள் மீதான கழிவு /உபரித்தொகை | 16,186,478 | 8,893,520 |
| விற்கப்பட்ட திறைசேரி முறிகள் மீதான லாபம்/நட்டம் | (1,579,569) | (1,175,969) |
| ஓய்வூதிய நிதியத்தின் சீர்படுத்துகை | 7,323,848 | 5,554,648 |
| வருமான வரி | (1,498,181) | 29,273,664 |
| | 608,953,547 | 549,835,313 |
| தொழிற்பாட்டு மூலதனம் செயற்பாட்டு நிதியங்களின் மாற்றல்கள் | | |
| பெறப்பட வேண்டிய முதலீட்டு வருமானம் (அதிகரிப்பு) / குறைவு | (50,107,310) | 181,091,488 |
| நானாவித கடன் தருநர்களின்(அதிகரிப்பு) /குறைவு | 127,235 | 29,372 |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான காசு உருவாக்கம் | 558,973,471 | 730,956,173 |
| கழிக்குக : செலுத்திய வருமான வரி | (10,939,939) | (48,878,995) |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலமாகப் பெற்ற தேறிய காசுப் பாய்ச்சல் | **548,033,532** | **682,077,178** |
| முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல் | | |
| நிலையான வைப்புக்களின் விருத்தி | 260,000,000 | 1,133,828,833 |
| நிலையான வைப்புக்களில் முதலீடு | (200,000,000) | - |
| முதிர்ச்சி - திறைசேரி முறிகள் | | 126,170,000 |
| விற்பனை .:.முதிர்ச்சி - திறைசேரி முறிகள் | 323,071,243 | 28,616,230 |
| கடன்பத்திரங்கள் கொள்வனவு | (400,000,000) | - |
| திறைசேரி முறிகள் கொள்வனவு | (1,148,681,373) | (2,244,288,390) |
| முதலீட்டு நடவடிக்கைகள் மூலமாக பெற்ற தேறிய காசுப் பாய்ச்சல் | **(1,165,610,130)** | **(955,673,327)** |
| நிதி நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல் | | |
| பங்களிப்புத் தொகை பெறுகை | 600,556,194 | 483,251,454 |
| பங்களிப்புத் தொகை மீளச் செலுத்தல் | (44,518,294) | (24,944,675) |
| ஓய்வூதியம் செலுத்துதல் | (38,825,270) | (31,861,064) |
| நிதி நடவடிக்கைகள் மூலமாக பெற்ற தேறிய காசுப் பாய்ச்சல் | **517,212,630** | **426,445,715** |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு | (100,363,966) | 152,849,566 |
| ஆரம்ப காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 157,270,759 | 4,421,193 |
| இறுதி காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 56,906,793 | 157,270,759 |
| குறுங்கால வைப்புக்கள் | 60,000,000 | 154,000,000 |
| வங்கிப் பணம் | (3,093,207) | 3,270,759 |
| நிதி மற்றும் நிதிச் சமப்படுத்தல்கள் | 56,906,793 | 157,270,759 |

## பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம்

## 2016 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமை மாற்றல் கூற்று

| | பங்களிப்பு நிதியம் ரூபா | ஓய்வூதிய நிதியம் ரூபா | ஒட்டுமொத்த நிதியம் ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|
| 2015 ஜனவரி 01 ஆம் திகதி மீதி | 3,871,077,850 | 130,105,997 | 305,275,982 | 4,306,459,829 |
| 2015 ஆம் ஆண்டிற்கான மேலதிகம் | - | | 507,289,449 | 507,289,449 |
| நடப்பு ஆண்டு வருமானத்தின் ஊடான பரிமாற்றல் | - | 5,554,649 | - | 5,554,649 |
| பற்றுச்சீட்டு இன்றி பெற்ற பங்களிப்பு நிதியம் | 147 | | - | 147 |
| ஓய்வூதியகாரர்களுக்காக பெற்ற பங்களிப்பு நிதியம் | | 419 | - | 419 |
| தவறான பங்களிப்பு மூலம் பெற்ற வட்டி | (48,228) | | - | (48,228) |
| நடப்பு ஆண்டின் பங்களிப்பு நிதியம் | 495,386,368 | - | | 495,386,368 |
| பூரணப்படுத்தப்பட்ட பங்களிப்புத் தொகையை மீளப் பெற்றுக்கொடுத்தல் | (26,246,280) | | - | (26,246,280) |
| பங்களிப்பு நிதியம், ஓய்வூதிய நிதியத்திற்கு மாற்றுதல் | (34,139,673) | 34,139,673 | - | |
| சேமலாப நிதியத்திற்கு மாற்றுதல் | (480,680) | | - | (480,680) |
| 2015 ஆம் ஆண்டில் ஓய்வூதியம் செலுத்துதல் | | (31,861,064) | | (31,861,064) |
| ஓய்வூதிய நிதியத்தின் , பங்களிப்பு நிதியத்தின் வட்டி | 449,951,283 | 13,589,245 | (463,540,528) | |
| 2015 டிசம்பர் 31 ஆம் திகதி மீதி | 4,755,500,787 | 151,528,919 | 349,024,903 | 5,256,054,609 |
| 2016 ஆம் ஆண்டிற்கான மேலதிகம் | - | - | 588,520,971 | 588,520,971 |
| நடப்பு ஆண்டு வருமானத்தின் ஊடான பரிமாற்றல் | - | 7,323,848 | - | 7,323,848 |
| சேமலாப நிதியத்தின் ஊடாகப் பெற்றுக் கொள்ளல் | 1,737,958 | | - | 1,737,958 |
| ஓய்வூதியகாரர்களுக்காகப் பெற்ற பங்களிப்பு நிதியம் | | 4,754 | - | 4,754 |
| வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு தொகையைப் பெறல் | 39,069,323 | 820,906 | - | 39,890,229 |
| தவறான பங்களிப்பினைச் சரிப்படுத்துதல் | | | | |
| நடப்பு ஆண்டின் பங்களிப்பு நிதியம் | 588,571,311 | | | 588,571,311 |
| பூரணப்படுத்தப்பட்ட பங்களிப்புத் தொகையை மீளப் பெற்றுக்கொடுத்தல் | (47,705,569) | - | - | (47,705,569) |
| பங்களிப்பு நிதியம்,ஓய்வூதிய நிதியத்திற்கு மாற்றுதல் | (61,386,620) | 61,386,620 | - | - |
| சேமலாப நிதியத்திற்கு மாற்றுதல் | (54,885) | | | (54,885) |
| 2016 ஆம் ஆண்டில் ஓய்வூதியம் செலுத்துதல் | | (38,825,270) | | (38,825,270) |
| ஓய்வூதிய நிதியத்தின், பங்களிப்பு நிதியத்தின் வட்டி | 529,512,380 | 16,002,363 | (545,514,743) | |
| | 1,049,743,898 | 46,713,221 | 43,006,228 | 1,139,463,347 |
| 2014 டிசம்பர் 31 ஆம் திகதி மீதி | **5,805,244,685** | **198,242,140** | **392,031,131** | **6,395,517,956** |

# විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
# கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
# AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } එච්ඊඩී/ඒ/පීඑන්එෆ්/01/16

ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2017 ජූලි 19 දින

ලේකම්

විශ්වවිද්‍යාල ප්‍රතිපාදන කොමිෂන් සභාව.

විශ්වවිද්‍යාල විශ්‍රාම වැටුප් අරමුදලේ 2016 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව විගණකාධිපති වාර්තාව

---

මාගේ සමාංක හා 2017 ජූනි 29 දිනැති ලිපියට යොමුවේ.

02. ඉහත සඳහන් ලිපිය සමඟ එවන ලද මාගේ වාර්තාවේ දෙමළ අනුවාදය මේ සමඟ එවා ඇත.

ඩබ්ලිව්. ප්‍රේමනන්ද
අතිරේක විගණකාධිපති
විගණකාධිපති වෙනුවට

පිටපත් - 1. ලේකම්, උසස් අධ්‍යාපන හා මහාමාර්ග අමාත්‍යාංශය
2. ලේකම්, මුදල් හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය

Pen - BK
recd
01/08/17

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. எச்ஈடீ/ஏ/பீஎன்எப்/01/16 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 2017 யூன் 29

செயலாளர்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

**பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 12(5) ஆம் உபபிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை, பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டிற்குரிய மொத்த வருமான வரித் தொகையான ரூபா 11,688,067 முன்னைய ஆண்டின் வருமான வரிக்கான மிகை ஒதுக்கக் கணக்கில் ரூபா 13,186,248 தொகையான மீதி ஈடுசெய்யப்பட்டு அதன் வேறுபாடான ரூபா 1,498,181 தொகை மாத்திரம் செயலாற்றல் கூற்றில் வருமானத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 97 ஆம் பிரிவின் பிரகாரம் ஓய்வூதிய நிதியத்தை முறைமைப்படுத்துதல், நிருவகித்தல் மற்றும் அதன் முகாமைத்துவ நிலைமைகளுக்காக ஆணைக்குழுவினால் வழிகாட்டியொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 588,520,971 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 507,289,450 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்

போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 81,231,521 தொகையான அதாவது 16 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இந்த அதிகரிப்பிற்கு தேறிய முதலீட்டு வருமானம் ரூபா 82,652,261 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

பல்கலைக்கழகத்தின் நிரந்தர ஊழியர்களுக்காக ஓய்வூதியத் திட்டமொன்றைத் தாபிப்பதற்கு ஓய்வூதிய நிதியம் உருவாக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 6,395,517,956 மீதியுடன் 13,173 அங்கத்தவர்களையும் உள்ளடக்கியிருந்தது. அதில் ஓய்வூதியம் பெறுகின்ற ஓய்வூதியக்காரர்களின் எண்ணிக்கை 222 ஆக இருந்ததுடன் அவர்களுக்காக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ஓய்வூதியத் தொகை ரூபா 38,825,270 ஆகும்.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டிருந்தது. கணக்கீட்டுத் துறை தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

**ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**

ஒப்பம் :- எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் 2016 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

| விடயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | கணக்காளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கும் கருத்துக்கள் | தற்போதைய நிலைமை (05.02.2018) |
|---|---|---|---|
| 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்<br><br>2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள் | மீளாய்வாண்டிறிகுரிய மொத்த வருமான வரித் தொகையான ரூபா 11,688,067 முன்னைய ஆண்டின் வருமான வரிக்கான மிகை ஒதுக்கக் கணக்கில் ரூபா 13,186,248 தொகையான மீதி ஈடுசெய்யப்பட்டு அதன் வேறுபாடான ரூபா 1.498,181 தொகை மாத்திரம் செயலாற்றல் கூற்றில் வருமானத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | நடைமுறை ஆண்டின் வருமான வரியைக் கணிப்பீடு செய்து மிகை ஒதுக்கீட்டைச் சரிசெய்ததன் பிற்பாடு தேறிய பெறுமதி மாத்திரம் ஆண்டின் வருமான வரியாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில் நிதிச் செயலாற்றல் கூற்றுக்கான தாக்கம் பூச்சியமாக இருப்பினும் முழுக்கணக்கீட்டுப் பதிவையும் இறுதிக்கணக்குகளில் வெளிப்படுத்தாமல் இருப்பது தொடர்பில் உடன்படுவதுடன் இதனைச் சரிவர முன்வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. | நடைமுறை ஆண்டின் வருமான வரியைக் கணிப்பீடு செய்து மிகை ஒதுக்கீட்டைச் சரிசெய்ததன் பிற்பாடு தேறிய பெறுமதி மாத்திரம் ஆண்டின் வருமான வரியாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில் நிதிச் செயலாற்றல் கூற்றுக்கான தாக்கம் பூச்சியமாக இருப்பினும் முழுக்கணக்கீட்டுப் பதிவையும் இறுதிக்கணக்குகளில் வெளிப்படுத்தாமல் இருப்பது தொடர்பில் உடன்படுவதுடன் அதனை 2017 அம் அண்டில் சரியான முறையில் இறுதிக் கணக்குளில் முன்வைப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| 2.3 சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை | 1978 இன் 16 அம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 97 ஆம் பிரிவின் பிரகாரம் ஓய்வூதிய நிதியத்தை முறைமைப்படுத்துதல், நிருவகித்தல் மற்றும் அதன் முகாமைத்துவ நிலைமைகளுக்காக ஆணைக்குழுவினால் வழிகாட்டியொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டளைச் சட்டத்தின் ஆரம்ப வரைவானது 2016 ஏப்ரில் மாதம் 28 ஆந் திகதி பல்கலைக்கழக மானியங்கள் அணைக்குழுவின் கண்காணிப்புக்காக வேண்டி பெறப்பட்டுள்ளது.இதனடிப்படையில் மீண்டும் 2016 டிசம்பர் மாதம் 22 ஆந் திகதி சட்டவரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன், சட்ட வரைஞர் திணைக்களத்தின் | திருத்தப்பட்ட கட்டளைச் சட்ட ஆரம்ப வரைவானது சட்ட வரைஞர் திணைக்களத்தினால் 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆந் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அவதானிப்பிற்காகப் பெறப்பட்டுள்ளதுடன், சட்ட வரைஞர் திணைக்களத்தின் இறுதி அங்கீகாரத்தைப் பெற்றதன் பிற்பாடு ஓய்வூதியக் கட்டளைச் சட்டமானது வர்த்தமானி அறிவித்தலிற்கு விடப்படும். |

## பல்கலைக்கழக சேமலாப நிதியம்

## 2016.12.31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்று

| | 2016ஆம் ஆண்டு ரூபா | (மீள வெளியிடப்பட்ட) 2016ஆம் ஆண்டு ரூபா |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| **அசையும் சொத்துக்கள்** | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமான சொத்துக்கள் | 129,574,612 | 2,583,171,028 |
| பெறப்பட வேண்டிய வட்டி | 4,783,185,642 | 4,152,091,729 |
| பெறப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை | 276,875,816 | 175,194,809 |
| பெறப்பட வேண்டிய சேமலாப நிதி கடன் தவணை | 47,517,338 | 53,159,006 |
| ஏனைய முற்பணங்கள் | 1,000 | 1,000 |
| கையிருப்பு | 168,102 | 219,576 |
| | 5,237,322,510 | 6,963,837,148 |
| **அசையாச் சொத்து** | | |
| சொத்துக்கள் பொறி உபகரணங்கள் | 686,545 | 887,485 |
| நீண்ட கால முதலீடுகள் | 23,762,567,591 | 18,543,270,542 |
| சேமலாபக் கடன்கள் | 4,745,330,371 | 4,662,145,689 |
| | 28,508,584,507 | 23,206,303,716 |
| **மொத்தச் சொத்துக்கள்** | 33,745,907,017 | 30,170,140,864 |
| **பொறுப்புக்கள்** | | |
| **கழிக்குக : அசையும் பொறுப்புக்கள்** | | |
| நானாவித கடன் உரிமையாளர்கள் | 2,316,687 | 2,310,427 |
| செலுத்த வேண்டிய வாழ்க்கைச் செலவுப் படி நிலுவை பங்க | 74,008,058 | 104,893,466 |
| செலுத்த வேண்டிய சேமலாப நிதிய அனுகூலங்கள் | 33,833,554 | 29,750,062 |
| செலுத்த வேண்டிய வரி | 348,084,600 | 349,905,309 |
| | 458,242,899 | 486,859,264 |
| **மொத்த தேறிய சொத்துக்கள்** | 33,287,664,118 | 29,683,281,600 |
| நிதியளிப்புக்களாவன, | | |
| அங்கத்துவ கணக்கு மீதி - செயற்பாடுடைய | 33,008,249,356 | 29,374,577,556 |
| அங்கத்துவ கணக்கு மீதி - செயற்பாடற்ற | 44,126,524 | 44,041,137 |
| செயற்பாடற்ற கணக்குகளுக்கான ஒதுக்கீடுகள் | 8,000,000 | 8,000,000 |
| வேண்டப்படாத அனுகூல இருப்புக்கள் | 6,965,536 | 6,956,641 |
| நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம் | 220,322,702 | 249,706,266 |
| நிதியத்தின் தேறிய பெறுமதி | 33,287,664,118 | 29,683,281,600 |

பல்கலைக்கழக சேமலாப நிதியம்

2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று

| | 2016ஆம் ஆண்டு<br>ரூபா | (மீள வெளியிடப்பட்ட)<br>2016ஆம் ஆண்டு<br>ரூபா |
|---|---|---|
| வருமானம் | | |
| முதலீட்டு வருமானம் | 2,850,587,743 | 2,676,277,840 |
| ஏனைய வருமானங்கள் | 1,745,830 | 1,500,000 |
| மொத்த வருமானம் | 2,852,333,573 | 2,677,777,840 |
| கழிக்குக: வருமான வரி | (57,488,495) | (131,887,945) |
| வரிக்குப் பின்னரான வருமானம் | 2,794,845,077 | 2,545,889,895 |
| கழிக்குக: செயற்பாட்டுச் செலவுகள் | (2,161,576) | (1,245,806) |
| செயற்பாட்டு இலாபம் | 2,792,683,501 | 2,544,644,089 |
| வருமானத்திற்கு சீர்படுத்தல் | 15,647,229 | 19,354,326 |
| கடந்த ஆண்டில் நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம் | 249,706,266 | 118,706,914 |
| பகிர்வதற்கான தேறிய இலாபம் | 3,058,036,997 | 2,682,705,329 |
| அங்கத்துவக் கணக்குகளுக்கான வட்டி | (2,836,533,872) | (2,420,426,697) |
| செயற்பாடற்ற அங்கத்துவக் கணக்குகளுக்கான வட்டி | (1,180,422) | (7,572,366) |
| செயற்பாடற்ற கணக்கிற்கான அதிகரிக்கப்பட்ட முன்மொழிவு | - | (5,000,000) |
| முன் கொண்டு செல்லப்படும் நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம் | 220,322,702 | 249,706,266 |

பல்கலைக்கழக சேமலாப நிதியம்

2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிப் பாய்ச்சல் கூற்று

| | 2016ஆம் ஆண்டு<br>ரூபா | (மீள வெளியிடப்பட்ட)<br>2015ஆம் ஆண்டு<br>ரூபா |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்கள் | | |
| வரி மற்றும் செலவுகளுக்குப் பின்னரான தேறிய இலாபம் | 2,792,683,501 | 2,544,644,089 |
| <u>சீர்படுத்துகைகள்</u> | | |
| திறைசேரி உண்டியல்கள் குறைந்த விலை / cr;r tpiy | 85,718,055 | 28,027,818 |
| திறைசேரி உண்டியல்கள் விற்பனை மூலமான இலாபம் / நட்டம் | (48,281,530) | (90,288,069) |
| பெறுமானத் தேய்வு | 200,940 | 117,215 |
| பதிவழிக்கப்பட்ட பெறவேண்டியவைகள் | 222,682 | - |
| வருமான வரி | 57,488,495 | 131,887,945 |
| | 2,888,032,143 | 2,614,388,998 |
| தொழிற்பாட்டு மூலதன மாற்றம் | | |
| கையிருப்பு மாற்றம் | 51,474 | (59,535) |
| பெறப்பட வேண்டிய முதலீட்டு வருமான மாற்றம் | (631,093,913) | (572,448,186) |
| கடன் மாற்றம் | (77,545,174) | 28,979,132 |
| செலுத்த வேண்டிய வாழ்க்கைச் செலவுப் படி மாற்றம் | (30,885,408) | (66,852,495) |
| நானாவித கடன் உரிமையாளர்களின் மாற்றம் | 6,196 | 1,932 |
| செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் ஈட்டிய தொகை | 2,148,565,318 | 2,004,009,846 |
| ஆண்டினுள் செலுத்திய வருமான வரி | (59,309,205) | (87,488,992) |
| செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் ஈட்டிய தேறிய காசுப் பாய்ச்சல் | 2,089,256,113 | 1,916,520,854 |
| முதலீட்டு செயற்பாடுகள் மூலம் ஈட்டிய காசுப் பாய்ச்சல்கள் | | |
| நிலையான வைப்புக்களின் முதிர்ச்சி | 1,410,000,000 | 2,395,500,000 |
| நிலையான வைப்புக்கள் முதலீடு | (400,000,000) | - |
| திறைசேரி முறிகள் விற்பனை / முதிர்ச்சி | 4,430,523,555 | 5,073,897,091 |
| கடன்பத்திர கொள்வனவு | (1,595,366,700) | (1,000,000,000) |
| திறைசேரி முறிகள் கொள்வனவு | (9,101,890,429) | (6,358,691,101) |
| முதலீட்டு நடவடிக்கைகள் மூலம் ஈட்டிய தேறிய காசுப் பாய்ச்சல் | (5,256,733,574) | 110,705,990 |
| நிதிச் செயற்பாடுகள் மூலம் ஈட்டிய காசுப் பாய்ச்சல் | | |
| அங்கத்துவப் பணம் வரவு | 2,447,215,828 | 2,266,902,028 |
| அங்கத்துவப் பணம் செலுத்துகை | (1,733,334,785) | (1,791,785,128) |
| நிதிச் செயற்பாடுகள் மூலம் ஈட்டிய தேறிய காசுப் பாய்ச்சல் | 713,881,042 | 475,116,900 |
| காசு மற்றும் காசுக்குச் சமமான சொத்துக்களின் தேறிய அதிகரிப்பு | (2,453,596,418) | 2,502,343,744 |
| ஆண்டின் தொடக்கத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமான சொத்துக்கள் | 2,583,171,028 | 80,827,285 |
| ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமமான சொத்துக்கள் | 129,574,612 | 2,583,171,028 |

பல்கலைக்கழக சேமலாப நிதியம்

2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான பங்கு மாற்றங்கள் பற்றிய கூற்று

| | அங்கத்துவ மீதிசெயற்பாடுடைய | அங்கத்துவ மீதி செயற்பாடற்ற | செயற்பாடற்ற கணக்குகளுக்கான ஒதுக்கீடுகள் | வேண்டப்படாத அனுகூலங்களின் இருப்பு | நிறுத்திவைக்கப்பட்ட இலாபம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 2015.01.01 ஆம் திகதியன்று மீதி | 26,463,190,362 | 40,352,106 | 3,000,000 | 6,954,807 | 118,706,914 | 26,632,204,189 |
| ஆண்டிற்கான அங்கத்துவப் பணம் | 2,308,161,949 | - | - | - | - | 2,308,161,949 |
| ஆண்டின் அங்கத்துவ வட்டி | 2,420,426,697 | - | - | - | (2,420,426,697) | - |
| ஆண்டிற்கான அங்கத்துவப் பணத்தை மீளச் செலுத்தல் | (1,795,183,598) | - | - | - | - | (1,795,183,598) |
| ஓய்வு விடுமுறைக்கான அறவீடுகள் | (6,545,028) | - | - | - | - | (6,545,028) |
| சீர்படுத்துகை | (15,472,826) | 3,689,032 | (7,572,366) | 1,835 | 19,354,326 | - |
| செயற்பாடற்ற அங்கத்துவக் கணக்குகளுக்கான வட்டி | - | - | 7,572,366 | - | (7,572,366) | - |
| செயற்படாக் கணக்குகளுக்கான அதிகரித்த ஒதுக்கீடு | - | - | 5,000,000 | | (5,000,000) | - |
| ஆண்டுக்கான மேலதிகம் (மீள வெளியிடப்பட்ட) | - | - | - | - | 2,544,644,089 | 2,544,644,089 |
| 2015.12.31 ஆம் திகதியன்று மீதி (மீள வெளியிடப்பட்ட) | 29,374,577,555 | 44,041,138 | 8,000,000 | 6,956,641 | 249,706,266 | 29,683,281,600 |
| ஆண்டிற்கான அங்கத்துவப் பணம் | 2,559,666,892 | - | - | - | - | 2,559,666,892 |
| ஆண்டின் அங்கத்துவ வட்டி | 2,836,533,872 | - | - | - | (2,836,533,872) | - |
| செயற்பாடற்ற அங்கத்துவக் கணக்குகளுக்கான வட்டி | - | - | 1,180,422 | - | (1,180,422) | - |
| ஆண்டிற்கான அங்கத்துவப் பணத்தை மீளச் செலுத்தல் | (1,737,418,277) | - | - | - | - | (1,737,418,277) |
| ஓய்வு விடுமுறைக்கான அறவீடுகள் | (10,547,376) | - | - | - | - | (10,547,376) |
| சீர்படுத்துகை | (14,563,310) | 85,386 | (1,180,422) | 8,895 | 15,647,229 | (2,222) |
| ஆண்டுக்கான மேலதிகம | - | - | - | - | 2,792,683,501 | 2,792,683,501 |
| 2015.12.31 ஆம் திகதியன்று மீதி | 33,008,249,356 | 44,126,524 | 8,000,000 | 6,965,536 | 220,322,702 | 33,287,664,118 |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல. / My No. } එච්ඊඩී/ඒ/යූපීඑෆ්/එෆ්ජ්/2016 මබේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 2017 ජූලි 19 දින

ලේකම්

විශ්වවිද්‍යාල ප්‍රතිපාදන කොමිෂන් සභාව.

විශ්වවිද්‍යාල අර්ථසාධක අරමුදලේ 2016 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව විගණකාධිපති වාර්තාව

---

මාගේ සමාංක හා 2017 ජුනි 29 දිනැති ලිපියට යොමුවේ.

02. ඉහත සඳහන් ලිපිය සමඟ එවන ලද මාගේ වාර්තාවේ දෙමළ අනුවාදය මේ සමඟ එවා ඇත.

ඩබ්ලිව්. ප්‍රේමනන්ද
අතිරේක විගණකාධිපති
විගණකාධිපති වෙනුවට

පිටපත් - 1. ලේකම්, උසස් අධ්‍යාපන හා මහාමාර්ග අමාත්‍යාංශය
2. ලේකම්, මුදල් හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

# විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
# கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
# AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } எச்ஈடீ/ஏ/யூபீஎப்/எப்ஏ/2016

මබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2017 யூன் 29

செயலாளர்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

**பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் உப பிரிவு மற்றும் 2015 இன் 1 ஆம் இலக்க பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் நெறிவழிகாட்டியின் 24 ஆவது பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 12(5) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 பெறவேண்டிய கணக்குகள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 44,126,524 தொகையான சேமலாப நிதியத்தின் செயற்பாடற்ற அங்கத்தவர் மீதியில் உடன்படிக்கை மீறிய அங்கத்தவர்களிடமிருந்து அறவிடவேண்டியிருந்த மீதியும் உள்ளடங்கியிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,792,683,501 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,544,644,089 ஆனமையால் முன்னைய ஆண்டுகள் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 248,039,412 தொகையான அதிகரிப்பொன்று அவதானிப்பட்டது. மீளாய்வாண்டின் போது முதலீட்டு வருமானம் ரூபா 174,309,903 ஆல் அதிகரித்தமை மற்றும் வருமான வரிச் செலவினம் ரூபா 74,399,450 இனால் குறைவடைந்தமை மேற்கூறப்பட்ட மிகை அதிகரிப்பு தொடர்பில் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

கடந்த 05 வருடங்களின் நிதி விளைவுகளை கருத்திற்கொள்ளும் போது அது ஒரே சீரான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டதுடன் அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்ட வருமான வரிக்கான சீராக்கங்களின் பின்னர் மீளாய்வாண்டின் இறுதியில் பங்களிப்பு ரூபா 2,850,171,996 ஆக இருந்தது. அது முன்னைய ஆண்டின் பங்களிப்புடன் ஒப்பீடு செய்த போது 6 சதவீத அதிகரிப்பாகும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1982 பெப்ரவரி 02 ஆந் திகதிய 155 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் உயர்கல்வி அமைச்சினால் அதில் சேவையாற்றிய, சேவையை பூர்த்திசெய்த ஊழியர்களின் சேமலாப நிதியத்தின் மீதியை விடுவிப்பதற்கு உரிய விபரங்கள் 02 மாதங்களுக்குள் ஆணைக்குழவின் செயலாளருக்கு வழங்க வேண்டியிருந்ததுடன் அந்த நடவடிக்கைகள் நிறுவனத்தின் தவறின் காரணமாக தாமதமடைந்ததன் அடிப்படையில் பங்களிப்பாளர்களுக்கு வட்டி செலுத்த வேண்டி ஏற்படுமாயின் அதனை உரிய பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு மிகைக்கட்டணமாக விதிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் தாமதக் காலம் 04 மாதங்கள் முதல் 252 மாதங்கள் வரையான விரிவடைந்திருந்த போதிலும் அந்த தாமதக் காலத்திற்காக செலுத்தப்பட்ட வட்டி ரூபா 110,805 ஆக இருந்த போதிலும், சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், சேவையைப் பூர்த்தி செய்த அங்கத்தவர்களின் நிதியை விடுவிக்கும் போது பல்கலைக்கழகத்தினால் குறித்த காலத்தில் கோவை சமர்ப்பிக்காமையினால் இவ்வாறு கொடுப்பனவுகள் தாமதமடைந்தற்காக பிரதானமாக தாக்கமளித்திருந்ததுடன் ஆணைக்குழவின் தாமதத்தையும் தவிர்த்துக்கொள்வதற்கு சரியான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழக சேமலாப நிதியத்திலிருந்து செலுத்தப்பட்ட கடன் தொடர்பாக 2007 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழவின் 739 ஆவது குழுக்கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் நிதியத்திலிருந்து கடன் வழங்குவதற்காக கடன் பணம் விண்ணப்பித்த உத்தியோகத்தர்களின் கடன் பணம் விண்ணப்பித்த மாதத்திற்கு முந்திய மாதத்தின் சேமலாப பங்களிப்புப் பணம் மற்றும் முன்னைய மாதக் கடன் தவணை, கடன் விண்ணப்பித்த மாதத்தின் 10 ஆந் திகதிக்கு முன்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் காசுப் பிரிவிற்கு நிதி கிடைக்கப்பெற வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் கிடைத்திராத சந்தர்ப்பம் அவதானிக்கப்பட்டத. அந்த தாமதம் தொடர்பாக சபையால் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் செயலாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. அவ்வப்போது அறிவிக்கப்பட்டிருந்தது. பின்வரம் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | இணங்காமைகள் |
|---|---|
| நிதிய முகாமைத்துவம் | (i) சேவையைப் பூர்த்தி செய்த அங்கத்தவர்களின் சேமலாப நிதியை விடுவிப்பதில் தாமதம்.<br>(ii) மாதாந்த கடன் தவைணப் பணம் மற்றும் ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பை அனுப்பிவைப்பதற்கு தாமதமடைந்தமை. |

ஒப்பம் :- எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**

பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் 2016 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

| விடயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள் | எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகள் |
|---|---|---|---|
| 2.நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்<br><br>2.2.பெற வேண்டிய கணக்குகள் | 2016 டிசம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா. 44,126,524 தொகையான சேமலாப நிதியத்தின் செயற்பாடற்ற அங்கத்தவர் மீதியில் உடன்படிக்கை மீறிய அங்கத்தவர்களிடமிருந்து அறவிட வேண்டியிருந்த மீதியும் உள்ளடங்கியிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படவில்லை.<br><br>பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் அங்கத்தவர்களாக இருப்பவர்கள் பல்கலைக்கழகங்களில் அல்லது உயர் கல்வி நிறுவகங்களில் கல்விசார் மற்றும் கல்வி சாராத ஊழியர்கள் ஆவர்.இவ் ஊழியர்களுடன் உடன் உடன்படிக்கைளை மேற்கொள்பவர்கள் அவ் அப் பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி நிறுவகங்கள் ஆகும் என்பதுடன் இதற்காக வேண்டி சேமலாப நிதியமானது நேரடியாகவோ மறைமுகமாகவோ சம்பந்தப்படாது.<br><br>இதனடிப்படையில் செயற்படா அங்கத்தவர்களுள் இருக்கும் உடன்படிக்கையினை மீறிய சேமலாப நிதிய அங்கத்தவர்களிடமிருந்து அத் தொகையைப் பெற்றுக்கொள்ளல் அல்லது சேமலாப நிதியினூடு அறவிட்டுக் கொள்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள சேமலாப நிதியத்திற்கு | இது குறித்து பல்கலைக்கழக அதிகாரங்கள் சட்டத்தின் 94 (a) உறுப்புரைக்கமைய, சேமலாப நிதியத்தின் உடன்படிக்கையினை முறித்த ஊழியர்களின் குறிப்பிட்ட அந்த அறவீடுகளை அறவிட்டுக் கொள்ள முடியுமா என்று விசாரித்த போது சட்டமா அதிபரின் 2016.10.13 ஆந் திகதிய கடிதம் மூலம் அவ்வாறு அறவிட்டுக் கொள்ள முடியாதென சட்ட மா அதிபர் அறிவித்துள்ளார்.<br><br>அதனடிப்படையில், செயற்படா ஊழியர்களுக்கு சம்பந்தப்பட்டதான உடன்படிக்கையினை மீறியமைக்காக நிறுவகத்திற்கு கிடைக்க வேண்டிய தொகையின் அளவை இனங்கண்டு கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| 3. <u>நிதி மீளாய்வு</u><br><br>3.1.<u>நிதி விளைவுகள்</u> | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா. | அதிகாரம் கிடையாது.<br><br>இது குறித்து பல்கலைக்கழக அதிகாரங்கள் சட்டத்தின் 94 (a) உறுப்புரைக்கமைய, சேமலாப நிதியத்தின் உடன்படிக்கையினை முறித்த ஊழியர்களின் அக் குறித்த தொகையினை குறைக்க முடியுமா என்பது குறித்த விசாரணையின் போது, சட்ட மா அதிபர் 2016.10.13 ஆந் திகதிய கடிதம் மூலம் கொள்ள முடியாதென சட்ட மா அதிபர் அறிவித்துள்ளார்.<br><br>அதனடிப்படையில், செயற்படா ஊழியர்களுடன் சம்பந்தப்பட்டதான உடன்படிக்கையினை மீறியமைக்காக நிறுவகத்திற்கு கிடைக்க வேண்டிய தொகையின் அளவை இனங்கண்டு கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | |

| | | | |
|---|---|---|---|
| | 2,792,683,501 மிகையாக இருந்ததுடன், அதற்கு நெரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா. 2,544,644,089 ஆனமையால் முன்னைய அண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 248,039,412 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது முதலீட்டு வருமானம் ரூபா 174,309,903 ஆல் அதிகரித்தமை மற்றும் வருமான வரிச் செலவினம் ரூபா 74,399,450 இனால் குறைவடைந்தமை மேற்கூறப்பட்ட மிகை அதிகரிப்பு தொடர்பில் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.<br><br>கடந்த 05 வருடங்களின் நிதி விளைவுகளை கருத்திற் கொள்ளும் போது அதில் ஒரு சீரான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டதுடன் அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்ட வருமான வரிக்கான சீராக்கங்களின் பின்னர் மீளாய்வாண்டின் இறுதியில் பங்களிப்பு ரூபா.2,850,171,996 ஆக இருந்தது. அது முன்னைய ஆண்டின் பங்களிப்புடன் ஒப்பீடு செய்த போது 6% | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. |
| 4.செயற்பாட்டு மீளாய்வு<br>4.1 செயலாற்றல் | சதவீத அதிகரிப்பாகும்.<br><br>(அ) 1982 பெப்ரவரி 02 ஆந் திகதிய 155 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம், உயர் கல்வி நிறுவகங்களினால் அதில் சேவையாற்றிய ,சேவையைப் பூர்த்தி செய்த ஊழியர்களின் சேமலாப நிதியத்தின் மீதியை விடுவிப்பதற்கு உரிய விபரங்களை 02 மாதங்களுக்குள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு வழங்க வேண்டியிருந்ததுடன் அந்த நடவடிக்கைகள் நிறுவனத்தின் தவறின் காரணமாக தாமதமடைந்ததன் அடிப்படையில் பங்களிப்பாளர்களுக்கு வட்டி செலுத்த வேண்டி ஏற்படுமாயின் அதனை | ஏற்றுக்கொள்ளப்படவில்லை.<br><br>1982.02.02 ஆந் திகதிய 155 ஆம் இலக்க பல்கலைக்கழக சுற்றறிக்கைப் படி பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களில் சேவையாற்றி சேவையைப் பூர்த்தி செய்ததன் பின்னர் அவ் ஊழியர்களை விடுவிப்பதற்கு உரிய விபரங்கள் அடங்கிய பத்திரங்களை 02 மாதங்களுக்குள் ஆணைக்குழுவிற்கு அனுப்புவதனை தாமதிக்கச் | 1982.02.02 ஆந் திகதிய 155 ஆம் இலக்க பல்கலைக்கழக சுற்றறிக்கைப் படி பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களில் சேவையாற்றி சேவையைப் பூர்த்தி செய்ததன் பின்னர் அவ் ஊழியர்களை விடுவிப்பதற்கு உரிய விபரங்கள் அடங்கிய பத்திரங்களை 02 மாதங்களுக்குள் ஆணைக்குழுவிற்கு அனுப்புவதனை தாமதிக்கச் செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | உரிய பொறுப்பு வாய்ந்த உத்தியொகத்தர்களக்கு மிகைக்கட்டணமாக வித்க்கப்படல் வேண்டும்.எவ்வாறாயினும் தாமதக்காலம் 04 மாதங்கள் முதல் 252 மாதங்கள் வரையான விரிவடைந்திருந்த போதிலும் அந்தத் தாமதக் காலத்திற்காக செலுத்தப்பட்ட வட்டி ரூபா.110,805 ஆக இருந்த போதிலும், சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.மேலும்,சேவையைப் பூர்த்தி செய்த அங்கத்தவர்களின் நிதியை விடுவிக்கும் போது பல்கலைக்கழகத்தினால் குறித்த காலத்தில் கோவை சமர்ப்பிக்காமையினால் இவ்வாறு கொடுப்பனவுகள் தாமதமடைந்ததற்காக பிரதானமாகத் தாக்கமளித்திருந்ததுடன் ஆணைக்குழுவின் தாமதத்தையும் தவிர்த்துக்கொள்வதற்கு சரியான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செய்வதற்கு பங்களிப்பாளர்/ஊழியர் இனைக் காரணமாகக் கொண்டு, பல்கலைக்கழகங்கள் அல்லது உயர்கல்வி நிறுவகங்களின் தலைவரைக் காரணமாகக் கொண்டு அல்லது அந்த விண்ணப்பத்திற்கு உரிய பிரத்தியேக செயன்முறை காரணமாகவும் இடம்பெறலாம்.<br><br>**ஏற்றுக்கொள்ளப்படவில்லை.** | பங்களிப்பாளர்/ஊழியர் இனைக் காரணமாகக் கொண்டு, பல்கலைக்கழகங்கள் அல்லது உயர்கல்வி நிறுவகங்களின் தலைவரைக் காரணமாகக் கொண்டு அல்லது அந்த விண்ணப்பத்திற்கு உரிய பிரத்தியேக செயன்முறை காரணமாகவும் இடம்பெறலாம். |
| | (ஆ) பல்கலைக்கழக சேமலாப நிதியத்திலிருந்து செலுத்தப்பட்ட கடன் தொடர்பாக 2007 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 739 ஆவது குழுக்கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் நிதியத்திலிருந்து கடன் வழங்குவதற்காக கடன் பணம் விண்ணப்பித்த உத்தியோகத்தர்களின் கடன் பணம் விண்ணப்பித்த மாதத்திற்கு முந்திய மாதத்தின் சேமலாப பங்களிப்புப் பணம் மற்றும் முந்தைய மாதக் கடன் தவணை,கடன் விண்ணப்பித்த மாதத்தின் 10 ஆந் திகதிக்கு முன்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்கழுவின் காசுப் பிரிவிற்கு நிதி கிடைக்கப்பெற வேண்டிய போதிலும்,அதன் பிரகாரம் கிடைத்திராத சந்தர்ப்பம் அவதானிக்கப்பட்டது. அந்த தாமதம் தொடர்பாக சபையால் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்கெனவே இது தொடர்பில் சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் வெளியிடப்பட்டுள்ளது. சேமலாப நிதி மற்றும் தவணைக் கடன் என்பவற்றைத் தாமதமாக அனுப்பி வைக்கும் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களுக்கு உரிய சேமலாபக் கடன்நிதியினை வழங்குவது தாமதிக்கப் பெற்ற நாட்களின் அளவு தாமதப்படுத்தப்படும்.<br><br>நிரந்தர ஊழியர்களின் நிதி ஆனது ஒவ்வொரு மாதமும் 10 அந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெற வேண்டும். அப் பங்களிப்புத் தொகையானது குறித்த திகதியில் கிடைக்கப்பெறவில்லை எனின், கடன் தொகை வெளியிடும் | ஏற்கெனவே இது தொடர்பில் சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் வெளியிடப்பட்டுள்ளது. சேமலாப நிதி மற்றும் தவணைக் கடன் என்பவற்றைத் தாமதமாக அனுப்பி வைக்கும் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களுக்கு உரிய சேமலாபக் கடன்நிதியினை வழங்குவது தாமதிக்கப் பெற்ற நாட்களின் அளவு தாமதப்படுத்தப்படும்.<br><br>அத்தோடு, நிதி அனுப்புவதில் ஏற்படும் தாமதங்களை தடுப்பதற்காக வேண்டி 2017.01.23 ஆந் திகதிய நிதிச் சுற்றறிக்கை இல 01/2017 இன் மூலம் நேரடி வைப்பு முறையானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | | குறித்த நிறுவனத்திற்கு கடன் தொகையினை வெளியிடுதலும் தாமதப்படுத்தப்படும்.<br><br>மேலும், ஒவ்வொரு மாதமும் 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் ஏனைய சாதாரண அங்கத்தவர்களின் பங்களிப்பு நிதயானது கிடைக்கப்பெறல் வேண்டும்.அவ்வாறு சேமலாபக் கடன் நிதியானது நிரந்தர ஊழியர்களுக்கு மாத்திரமே வெளியிடப்படும் என்பதுடன், சாதாரண மற்றும் தற்காலிக ஊழியர்களுக்கு கடன் தொகைக் கொடுப்பனவானது மேற்கொள்ளப்படுவதில்லை<br><br>அத்தோடு, நிதி மாற்றீடு செய்வதில் ஏற்படும் தாமதங்களை தடுப்பதற்காக வேண்டி 2017.01.23 ஆந் திகதிய நிதிச் சுற்றறிக்கை இல 01/2017 இன் மூலம் நேரடி வைப்பு முறையானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.<br><br>ஏற்றுக்கொள்ளப்படவில்லை | |
| 5.முறைமைகளும் கட்டுப்பாடுகளும் | கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் செயலாளரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்தது. அவ்வப்போது அறிவிக்கப்பட்டிருந்தது.பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட | சேமலாப நிதியை வெளியிடுவதில் அவ்வாறான தாமதங்கள் ஏற்பட்டது கிடையாது.<br><br>நிதி மாற்றீடு செய்வதில் ஏற்படும் தாமதங்களை தடுப்பதற்காக வேண்டி 2017.01.23 ஆந் திகதிய நிதிச் | சேமலாப நிதியை வெளியிடுவதில் அவ்வாறான தாமதங்கள் ஏற்பட்டது கிடையாது.<br><br>நிதி மாற்றீடு செய்வதில் ஏற்படும் தாமதங்களை |

| | | | |
|---|---|---|---|
| | கவனம் கோரப்படுகின்றது.<br>I. சேவையைப் பூர்த்தி செய்த அங்கத்தவர்களின் சேமலாப நிதியை விடுவிப்பதில் தாமதம்<br>II. மாதாந்தக் கடன் தவணைப் பணம் மற்றும் ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பை அனுப்பி வைப்பதற்குத் தாமதமடைந்தமை. | சுற்றறிக்கை இல 01/2017 இன் மூலம் நேரடி வைப்பு முறையானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. | தடுப்பதற்காக வேண்டி 2017.01.23 ஆந் திகதிய நிதிச் சுற்றறிக்கை இல 01/2017 இன் மூலம் நேரடி வைப்பு முறையானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| .முறைமைகளும் கட்டுப்பாடுகளும் | கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டிருந்தது. கணக்கீட்டுத் துறை தொடர்பில் விஷேட கவனம் கோரப்படுகின்றது. | ஓய்வூதிய நிதிக் கொடுப்பனவு முறைமை மற்றும் கட்டுப்பாடுகள் என்பவற்றை முன்னேற்றுவதற்காக வேண்டி கணக்காய்வாளர் அறிக்கையின் அறிவுறுத்தல்களை அடிப்படையாகக் கொண்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | ஓய்வூதிய நிதிக் கொடுப்பனவு முறைமை மற்றும் கட்டுப்பாடுகள் என்பவற்றை முன்னேற்றுவதற்காக வேண்டி கணக்காய்வாளர் அறிக்கையின் அறிவுறுத்தல்களை அடிப்படையாகக் கொண்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |